I wish her a new chapter of many productive years ahead and at the same time, I also wish she has unlimited weekends to relax, which she is so deserving of, after her hard work. May the Almighty God grant my wishes and bestow upon her His blessings.

Rev. N.J Gnanaponrajah

Message from the Principal

Mrs.D.Thuseetharan
The principal
Chundikuli Girls' College
Jaffna.

I have great pleasure in following this be published to mark the retirement of Rev.Sr.Antonita Mark.

I have known Rev.Sr.Antonia Mark since 2015 When she was appointed Principal of Holy Family Convent National School, Jaffna. Rev.Sr.Mark hails from Kilaly, Eluthumadduval. She had her primary education at Kilaly R.C School and secondary education at Usan Ramanathan Maha Vidyalayam, St.John Bosco's Vidyalayam, Atchuvely St.Teresa Girls' school and Manipay St. Xavier Girls' College.

Then she obtained her B.A Degree and subsequently the Diploma in Education from the University of Jaffna.

She started he career as an assistant teacher in 1986 at Manipay St.Xavier Girls' School and served in school in Jaffna, in the same capacity, till December 1999. The she was appointed Vice principal and later Principal at Pointpedro St. Thomas Girls' School for a period of seven years. After that, she served at Kn/ St.Fatima R.C.T.M School for eight years, prior to coming to Holy Family Convent.

I thank the good Lord for her dedicated services in the ield of education, and wish her a peaceful and well earned retired life.

May God bless her abundantly.

Mrs.D.Thuseetharan

Message from the Community Leader

Sr. Francis Joseph
Community Leader
Holy Family Convent, Jaffna.

In the 156 years long history of the Holy Family Convent, Jaffna, there has been several dedicated and ef icient Holy Family Religious whose leadership and direction has uplifted the school to high standards. In this long line of leadership stands Sr.Antonitta Mark as the 12 principal who has served from 2015-2018. Iam very much pleased to congratulate Sr.Antonitta Mark for her undaunted and sel less service rendered with vision and a spirit of dedication and I am indeed privileged to express my sentiments of appreciation of her through your Souvenir.

Many years of experience in the ield of education has helped her to establish herself as a good and responsible administrator. Since the time she took up the reins of the school she faithfully upheld the traditions built up and carried on by her predecessors and labored hard to raise the standard of the school in curricular and cocurricular activities. Education of youth had a very special place in the heart and mind of our Venerable Founder Pierre Bienvenu Noailles. In fact he has instituted two branches of the Holy Family namely sisters of Loretto and sisters of Immaculate Conception and provided them with guidelines for an all round education steeped in Christian values. Iam happy to say that Sr.Antonitta Mark has kept up the spirit of our Founder, Ven, Pierre Bienvenu Noailles on this aspect. At a time when there is degradation of human and cultural values she gave priority to maintain strict discipline, silence and order during school hours which served as the backdrop for the students to advance in their studies.

During her tenure of of ice as the principal, she was able to obtain good results in the G.C.E Ordinary and Advanced level examinations, with

the co-operation of the staff, the parents and the student body. She expressed concern for the poor and the slow learners and found creative ways to improve their standard qualitatively. With great dif iculty and perseverance she succeeded in getting the approval from the Ministry of Education to put up new buildings for the school and worked hard towards their completion.

Sr. Antonitta Mark's achievements as Principal of this National School for the past three years are highly commendable and it's an occasion to thank the Almighty God for the marvelous works accomplished through her for the welfare and education of the girls in Jaffna. Now that she embarks into a new phase of life I wish her God's abundant graces and blessings for many more years of fruitful service in the new ministry she undertakes.

Sr. Francis Joseph

பணியில் நிறைவு கண்டவர்

அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி
கல்விசார் நிகழ்ச்சிதிட்ட இயக்குநர்
அன்னை இல்லம்
கிளிநொச்சி

"கடவுள் தாம் முன்குறித்து வைத்தோரை அழைத்திருக்கிறார். தாம் அழைத்தோரை தமக்கு ஏற்புடையவராக்கியுள்ளார் தமக்கு ஏற்புடையோர்க்கு தமது மாட்சியில் பங்கு தந்தார். (உரோ 8:30)

இயற்கை வளம் நிறைந்த பழம் பெரும் பதியாம் கிளாலி இறையழைத்தலின் விளை நிலமாக விளங்குகின்ற பங்குகளில் ஒன்றாகும். இறைமகன் கிறிஸ்துவுக்கும் அவரது நற்செய்தி மதிப்பீடுகளுக்கும் சான்று பகரும் பாரம்பரிய கத்தோலிக்கர்களைக் கொண்ட இப்பங்கில் காலத் துக்குக் காலம் பெருகி வரும் அழைத்தல்கள் நடுவில் அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் இறை வனின் அழைப்பைப் பெற்று தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு கல்விப் பணியில் தன்னைக் கரைத்துக் கொண்டார்.

இறைவனின் அழைப்பினை உணர்ந்து, கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, உயரிய நம்பிக்கையோடும் ஆழமான விசுவாசத்தோடும் இறைவனுக்கும் திருச்சபைக்கு மக்களுக்கும், உலகிற்கும் கிறிஸ்துவின் பெயரால் பணியாற்றி, தன் வாழ்வு முழுவதனையும் அர்ப்பணித்து இயேசுவின் வழியில் நடக்கும் ஒரு துறவியே அருட்சகோதரி அன்ரனிற்றாமார்க். திருக்குடும்ப கன்னியர் சபையில் தன்னை இணைத்துக் கொண்டு, சபையின் விருதுவாக்கை தன் இலக்காகக் கொண்டு குழம வாழ்விலும், பணி வாழ்விலும் துறவப் பண்புகளோடு வாழ்ந்து இறைமகிமையை எப்போதும் நாடிய ஓர் அருட்சகோதரி ஆவார்.

அருட்சகோதரி அவர்கள் தான் "அனுப்பப்பட்டவர்" என்ற உணர்வையும் மனநிலையையும் எப்போதும் கொண்டிருந்தார். அனுப்பியவரின் திட்டத்தை நிறைவேற்றுவதும் அதை செயற்படுத்துவதும் தான் தனது பணியென்று தனது அழைத்தலை நன்றாக விளங்கிக் கொண்ட ஒருவராவார். வாழ்வில் எளிமையும், மனத்தில் உறுதியும் ஆழ்ந்த விசுவாசமும் கொண்ட அருட்சகோதரி அவர்கள் சாதி, மத, மொழி, இனம் என்னும் எல்லைகளைக் கடந்து இயேசுவின் சாட்சியாக அவரது நற்செய்திக்கு சான்று பகர்ந்து "கல்வி வழி இறைபணி" என்ற நிலையில் இன்று வரை பணியாற்றி வரும் ஓர் உன்னத அதிபராவார். இலங்கையின் வடமாகாணத்தில் பல பாடசாலைகளில் ஆசிரியராக, அதிபராக பணியாற்றிய அருட்சகோதரி அவர்கள், பணிசெய்யும் மக்களின் மனங்களையும் சூழ்நிலைகளையும் நன்றாக அறிந்து கொண்டவர். அதற்கேற்ப தனது வாழ்வையும்,

பணியையும் அமைத்து இன்று அதில் ஓர் நிறைவையும் காண்கின்றார். சாவால்கள் நிறைந்த இப்பணித்தளங்களில் பணியாற்றிய அருட்சகோதரியின் வாழ்வில் இறைவனின் அருட்கரமே செயலாற்றியது என்பது பேருண்மை. இவரது வாழ்வு எம் எல்லோருக்கும் ஓர் எடுத்தக்காட்டான வாழ்வு என்பதில் ஐயமில்லை.

"சிந்திக்காத கல்வியும் ஜீரணிக்காத உணவும் பாழ் என்று கூறுவார்கள்". அருட்சகோதரி அவர்கள் தான் கற்ற கல்வியையும் ஞானத்தையும் தன் வாழ்வில் வெளிப்படுத்தியதோடு அதனை தன் பணிவாழ்வின் மூலமாக எம் சமூகத்துடன் பகிர்ந்து கொண்டவர். இன்று யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை சகல துறைகளிலும் முன்னணியில் விளங்குவதற்கு அருட் சகோதரியின் தலைமைத்துவமும் ஆளுமையும் அறிவும் இறைஞானமுமே காரணமாகும். தனது துறவற வாழ்வு முழுவதையும் கல்விப் பணியிலே கரைத்து இன்று ஓய்வு பெற இருக்கும் அருட்சகோதரி அவர்களை உளமார பாராட்டி வாழ்த்துகின்றேன். அவரது வாழ்விலும், தொடர் பணிகளிலும் இறைவனின் அருட்கரம் செயலாற்ற ஆசிக்கிறேன். அவர் தொடர்ந்தும் உடல், உள, ஆன்மீக ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தனது அறிவையும் ஆளுமையையும் தனது துறவற வாழ்வின் மூலமாக திருச் சபைக்கும் எம் தமிழ் சமூகத்திற்கும் வழங்க இறையாசீர் கூறி நிற்கிறேன்.

Message from the Alumni

Erin Geetha Sreejayan
Presideent
JHFC Alumni Association
Australia

Message on behalf of the Jaffna Holy Family Convent Alumni Association Australia.

"People become really quite remarkable when they start thinking they can do things. When they believe in themselves they have the irst secret of success" – Norman Vincent Peale

It gives me great pleasure and honour, to write this message of felicitation on the occasion of retirement of our Principal Rev.Sr.Antonita Mark. On behalf of JHFC Alumni Association Australia, I extend my heartfelt congratulations on this happy and memorable occasion.

It is truly encouraging to see the passion and dedication that you hold, and your continued support and guidance in the recent development of core curricular/ extra - curricular activities activities and infrastructure projects to our Alma Mater. You have been a great source of inspiration and motivation not only for the existing students and staff members but also for the past pupils and staff of JHFC who live all over the world. A principal like you is surely an asset to a school.

You will be remembered for your perseverance, guidance, hard work and leadership qualities that you hold. Since you are bidding farewell to our Alma Master, we are sure that you would continue your good work by shaping the growth and progress of another deserving institution.

All the members of the JHFC Alumni Association Australia, join me in wishing you God's abundant blessings and a successful future.

Best Wishes
Erin Geetha Sreejayan

கல்வி நிர்வாகிகளால் பாராட்டப் பெற்றவர்

திருமதி.A.M.J.Y ஜெபரட்ணம்
செயலாளர்
யாழ்.பழைய மாணவர் சங்கம்.

யாழ் வரலாற்றில் சிறப்பு பெற்ற திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையானது 1862 ஆம் ஆண்டு பெண் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியைப் போதிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலை சிறந்த கல்வி மான்களை உருவாக்கியுள்ளது. அவர்கள் உலகின் பல பாகங்களிலும் சிறப்பாக செயற்படுவதை இன்று நாம் காண்கின்றோம்.

அத்தகைய பெயர் பெற்ற பாடசாலையில் 6வது சுதேச அதிபராக 3 ஆண்டுகள் பணியாற்றி இன்று ஓய்வு பெறும் அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் அவர்களின் பணிகளைப் பாராட்டி அகவை 60ல் அவரை வாழ்த்தி நிற்கின்றோம்.

இவர் தனது பணிக்காலத்தில் மாணவர்களின் வரவின்மையைக்குறைத்தல், மற்றும் பாடசாலையின் இட நெருக்கடியைத் தீர்த்தல் ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தினார். பெற்றோர் மீதான அதிபரின் கண்டிப்பு மாணவரின் பாடசாலை வரவின்மையை மிகப்பெரும் அளவில் குறைத்தது. இச்செயற்பாடு வலயக் கல்வி நிர்வாகத்தாலும் பாராட்டப்பட்டது. இதனூடாக கற்றல் கற்பித்தலில் ஏற்படக்கூடிய இடையூறைப் பெருமளவில் தவிர்க்க முடிந்தது.

மேலும் மாணவசெயற்பாடுகளுக்கான இட நெருக்கடியைத் தீர்க்க முன்னைய அதிபர்களும் முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதும், அதிர்ஷ்டமும் கைகொடுக்க தேசிய பாடசாலைகள் அமைச்சின் உதவியுடன் தன் அயரா முயற்சி யால் 3 மாடிக்கட்டத்தை பெற்றுக் கொடுத்துள்ளார்.

பாடசாலைக்கான விளையாட்டு மைதானக் கொள்வனவிலும் முன்னைய அதிபரைத் தொடர்ந்து தானும் தன் காத்திரமான பங்களிப்பை நல்கி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பழைய மாணவரின் உதவியையும் பெற்று விளையாட்டு மைதானப்பரப்பை அதிகரித்துள்ளனர். அடுத்து வரும் அதிபராலும் இது தொடரப்பட வேண்டியுள்ளது.

தனது வாழ்வைத் துறவறத்துக்கும் கல்விச் செயற்பாட்டுக்கும் அர்ப்பணித்த அதிபரின் ஓய்வுக்குப் பின்னரான காலப்பகுதி சிறப்பானதாக அமைய வாழ்த்தி நிற்கின்றோம்.

துறவற உறவுகளுடன் பல்வேறு பொழுதுகளில்...

சேவை நலனுக்காய் செப்பும் வாழ்த்து வரிகள்.........

க.கிருஷ்ணமூர்த்தி J.P
ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)
வலயக்கல்வி அலுவகம்
கிளிநொச்சி.

சமயப் பணிக்காக வாழ்க்கையில்
பயணித்த சோதரியே,
அறிவினை அழகாய் அள்ளித் தருபவரே
சாதனை பல புரிய அறிவில் பயணமானீர்
இன்முகத்தோடெம் உள்ளத்திலிருப்பவரே.
இனியன பேசி எம்முள் வாழ்பவரே.

கிளிநொச்சி நகரில் புனித பற்றிமா றோ.க.வில்
ஈர்னாங்கு வருடங்கள் பௌவியமாய் பணிபுரிந்தீர்
பாடசாலை முதல்வர் எனும் பதிவில் பெயர் மட்டுமல்ல
மாணவ மனங்களில் பல உறவு நிலையானீர்.

கல்விச்சமூகத்தில் கண்ணியமாய் உலா வந்தீர்கள்
செப்பனிட்டுச் செப்பனிட்டு செயல்முடித்திட
பிரமன் செதுக்கிய சிப்பி நீவீர்
செயலார்வம் கொண்ட செம்மல்
ஐயம் தீர்த்து அறிவைத் தருபவர்
அருமை பெருமை அழகாய் உரைப்பவர்
செய்யும் தொழிலைத் திருந்தச் செய்பவர்

சொல்லுக்கு முன் செயலை முடித்து விடும்
சிந்தனை தன்னில் சிரத்தை கொள்பவர்
தன் ஆளுகைக்குட்பட்ட பாடசாலை
தனித்துவம் மிக்கதாக விளங்க பணி தொடர்ந்தீர்
தன்னலம் பாராது மாணவத் தளிர்கள் புலன் காத்தீர்

கண்டிப்புடன் அரவணைப்பும்
கற்று நின்ற மாணவர்க்காய்
வையகம் வாழும் வழிகள் சொல்பவர்
நிர்வாகத்திறனதனால்
ஆசான்கள் மனங்களிலே நிலைத்து நின்றீர்!
குழந்தைகள் உயர்வில் மட்டுமல்ல
குடும்பத்தார் நிகழ்விலும் கலந்து கொண்டீர்!
தன் நலன் பாராத்தனையள்
தரணியில் புகழ் பூத்த செம்மல்
இயலாது முடியாது எனும் வார்த்தை அறியாது
இயலும், முடியும்,
முடிப்பேன் எனத்துணிந்தவர்
இடமாற்றம் கிடைக்கும் வரை ஓயாது உழைத்த பலன்
க.பொ.த.சாதாரணதரத்தில்
நூறு வீதம் கண்டீர்
திரைகடலோடி தன் கல்லூரிக்காய்
திரவியம் தேடினீர்!

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்
யாகத்தால் வந்த பலனோ – அங்கும்
தங்கள் பயணத்தைத் தொடர்ந்தீர்கள்
ஆண்டுகள் ஆறு பத்து ஆனாலும்
இளமைத்தோற்றமும், உற்சாக நடையும் கண்டு
காலம் தோற்றுப் போய் விட்டது சகோதரியே!

ஓய்வு காலம் ஒளி மிகுந்திருக்கவும்
நீங்கள் வாழும் காலம் வரை இறைபணியுடன்
கல்விப்பணியையும் தொடர வேண்டுமென
வாழ்த்தி நிற்கின்றேன்.

அன்ரனிற்றா மாற்கு என்னும் அருட்கொடை.....

திருமதி.மோ.கிருஷ்ணபிள்ளை
பிரதியதிபர்
கிளி/புனித பற்றிமா றோ.க.த.க.பாடசாலை.

"நல்லாரை காண்பதும் நன்றே – நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே"

என்ற ஔவையார் கூற்றிற்கு இணங்க அருளின் முடிவாய், ஆற்றலின் சிகரமாய், உன்னத குணங்களை தனதாக்கிய பன்முக வியாபகராய் எங்கள் சமுதாயத்திற்கு அறிவொளி ஊட்டி, ஒழுக்க விழுமியங்களை வளர்த்து நற் பிரஜைகளை உருவாக்கி அரும்பாடுபட்டவர் அருட்சகோதரி அவர்கள். இவர் பல்துறை ஆளுமை கொண்டவர். குறிப்பாக சமூக, பொருளாதார, ஆன்மீக கல்விச் சேவைகளை சமநிலையில் நின்று மேற்கொள்ளும் செயற்றிறன் மிக்கவர். பற்றிமா பாடசாலையில் தனது ஏழு வருட சேவைக் காலத்தில்

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் – தத்தம்
கருமமே கட்டளைக்கல்"

என்ற பொய்யா மொழிக்கு இணங்க தன் வாழ்வும், வார்த்தையும் இரண்டறக் கலந்து சிந்த னையாலும் செயலாலும் உயர்ந்து நின்றவர். இவர் அதிபராக கடமையாற்றியது எமது பாடசாலை யில் மட்டுமல்ல 8ம் வாய்க்கால் உருத்திரபுரம் என்னும் எமது கிராமத்திற்கும் என்பதை இங்கு சொல்லிக் கொள்வதில் பெரு மகிழ்வடைகின்றேன். "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய சமூகத்தின்" வறுமை போக்க கண்ணுக்குப் புலப்படாத வார்த்தைகளால் பேசப்படாத பல்தரப்பட்ட காரியங்களை மேற்கொண்டவர்.

நாட்டுச்சூழ்நிலை காரணமாக நாம் நலிவுற்று வந்த காலப்பகுதியிலே தனியொரு வராய் தலைநிமிர்ந்து நின்று பாலைவனமாய் இருந்த பாடசாலையை சோலை வனமாக்கி மெருகூட்டிய பெருமை இவரையே சாரும். பாடசாலையை வளர்த்தெடுத்தது மட்டு மல்லாது மாணவர், பெற்றோர், சமூகம் என ஒவ்வொருவரது இன்னல்களையும் போக்க பல்வேறு வகையிலும் உணவு, உடை, உறையுள் என தனித்தனி தேவைகளையும் தனது தேவையாக கருதி நேசக்கரம் நீட்டி பாசமழை பொழிந்த அந்த கால கட்டத்தை வார்த்தையால் விபரிக்க முடியாது. ஆசிரியர் ஒவ்வொரு வருக்கும் இவர் அதிபராக மட்டுமல்ல, அன்னையாய் நின்று அன்புக்கரம் நீட்டியவர். சகோதரியாய் நின்று சாந்தப்படுத்தியவர். ஆசானாய் நின்று ஆளுமையும், தன்னம்பிக்கையும் கலந்து அறிவொளி புகட்டியவர். சேவகனாய் நின்று சேவை பல புரிந்தவர்.

ஆளுமை, ஆற்றல், அறிவு திறனுடன் அதினிலும் மேலாய் ஒழுக்க விழுமியங்களை உயர் கொள்கைகளாக கொண்டவர். மக்கள் மனங்களில் மாணிக்கமாய் பதிந்தவர். வெள்ளை உள்ளம்

கொண்ட கள்ளமில்லா தேவதை இவர். அச்சமறியா ஆழ்ந்த நற்பார் வையும் அன்பு கலந்த அழகிய புன்னகையும் கொண்ட சிறந்த முகாமையாளர் உங்கள் சித்தத்துள் இந்தப் பாடசாலையையும் தத்தெடுத்த புனிதமானரே. உம்மோடு மீண்டும் ஒரு காலப்பகுதியில் இணைந்து சேவையாற்ற நாம் காத்து நிற்கின்றோம்.

"இயற்கை இனிமையானது அது என்றும் இளமையானது
இவ்வுலகில் உள்ள அத்தனை உயிர்களையும் வாழ வைக்கும் புதுமையானது"
இயற்கை போல் நீங்கள் என்றும் வாழ்க!

சிறந்த நிர்வாகி

திருமதி ஜெஸ்மின் லிகோறியன்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
அபிவிருத்தி சங்க செயலாளர்.

அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் அவர்கள் அகவை 60வரை எட்டியுள்ளார் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ளமுடியாதுள்ளது. என்ன செய்வது இயற்கையை யாராலும் தடுக்க முடியாது. அவர் ஓய்வு காலத்தில் நல்ல ஆரோக்கியத்துடனும் நலமுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவன் அவரை ஆசீர்வதிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டு அருட்சகோதரி அவர்களைப் பற்றி சில வார்த்தைகள் கூறலாம் என நினைக்கின்றேன்.

அருட்சகோதரியின் இளமைத்துடிப்பும் நிமிர்ந்த நடையும் அவரின் முகாமைத்தவ செயற்பாடுகளும் என்னால் மறக்க முடியாது. எதனையும் மற்றவர்களின் முகத்திற்கு நேர சொல்கின்ற அவருடைய குணா அம்சம் தான் பலர் அவரை வெறுப்பதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. அருட்சகோதரி அவர்கள் இப்பாடசாலையில் பொறுப்பை எடுத்து ஒருசில வருடங்கள்தான் ஆகின்றன. எனினும் அவரால் இப் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் ஏராளம்.

பாடசாலை பாடவிதானங்களுக்கு அப்பால் இணைபாட விதானங்களிலும், பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்வதிலும் அருட்சகோதரி அயராது பாடுபட்டார். இப் பணிகளை மேற்கொள்ளும் போது அவர்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகள் அதிகம் எனினும் அப்பிரச்சி னைகளால் அவர் துவண்டு போகவில்லை. தனது முகாமைத்தவ திறமையால் தன்னுடைய இலக்கை அடைந்துள்ளார் என்பதை இன்றும் யாவரும் அறிவர் அருட்சகோதரி அவர்களின் முகாமைத்துவத்தை நோக்கும் போது அமெரிக்க முகாமைத்துவ வல்லுனரான லூதர்குலிக் என்பவர் பொதுத்துறை நிர்வாகத்துக்கும் பயன்படுத்திய **"POSD CORB"** என்ற சொல்லே ஞாபகத்திற்கு வருகிறது. இவ் சொல்லிலுள்ள ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்கும் விளக்கம் கொடுப்பதன் மூலம் பொதுத்துறை நிர்வாகம் பற்றி சிறப்பாக விளக்கியுள்ளார். இச் சொல் பதங்கள் ஒவ்வொன்றும் அருட்சகோதரி அவர்களின் முகாமைத்துவ செயற்பாட்டின் உள் வாங்கப் பட்டுள்ளதை கண்டேன். அந்த வகையில்

P	-	Planning (திட்டமிடல்)
O	-	Organization (அமைப்பு)
S	-	Staf ing (ஊழியர் இடல்)
D	-	Direating (வழிபடுத்தல்)
Co	-	Co-Ornating (ஒருங்கிணைப்பு)

R - Reporting (அறிக்கை சமர்ப்பித்தல்)
B - Budjecting (நிதியிடல்)

அருட்சகோதரி அவர்கள் எந்த ஒரு வேலையைத் தொடங்குவதற்கு முன்னர் முதலில் திட்டமிடல் ஒன்றை மேற்கொள்வார். அத்திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கான ஆளணியினரை தெரிவு செய்வதுடன் அவ் ஆளணியினரிடையே ஒரு ஒருங்கிணைவினைவை ஏற்படுத்தி தான் அடைய வேண்டிய இலக்கை நோக்கி நகர்த்துவார். அதற்காக அந்த ஆளணியினிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அறிவதற்காக அறிக்கைகளை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்வார். இச்செயற்பாடே அவர் மீது பலர் வெறுப்பு கொள்ள காரணமாக அமைந்துள்ளது. இப் பாரிய பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு அடிப்படை தேவை நிதியாகும். இந் நிதியினை அருட்சகோதரி அவர்கள் திரட்டுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொண்ட போது அவர்களுக்கு பல இடையூறுகள் ஏற்பட்டதை யாராலும் மறக்க முடியாது.

ஆகவே அருட்சகோதரி அவர்கள் அமெரிக்க நிர்வாக வல்லுனரான லூதர் குலிக் என்பவரின் **"POSD CORB"** என்ற முகாமைத்தவ சொல்லுக்கு ஏற்ப பணியாற்றி அறுவது அகவையில் ஓய்வு பெறுவதையிட்டு நான் மிகவும் சந்தோஷம் அடைகின்றேன். புனித பவுல் கூறுவது போல "சிறந்த தோர் பந்தயத்தில் ஓடினேன் எனது ஓட்டத்தை முடித்து கொண்டேன்" என்பதற்கு இணங்க அருட்சகோதரி அவர்கள் அவர்களின் ஓய்வு காலத்தில் சிறந்த ஆரோக்கியத்துடனும் மன அமைதியுடனும் வாழ இறைவனை வேண்டி பணிகின்றேன்.

மகத்தான பணிக்கு தலைவணங்குகின்றோம்

திருமதி சதாறூபினி – சிறீகந்தராஜா
ஆசிரியை
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

கடமையில் கண்ணியமும் காரியத்தில் விடாமுயற்சியும்
உடமையாக கொண்டவரே எங்கள் அதிபராம்

மாணவர் உயர்வையே மனதில் கொண்டவர்
மாண்புடன் அவர் வாழ அறிவுரை பகன்றவர்

நேர முகாமைத்துவம் கண்டு நாம் வியந்தோம்
பணியின் சீர்மை கண்டு மகிழ்ந்தோம்

மேடை அலங்காரத்தில் கைவண்ணம் கண்டோம்
நிகழ்வுகளின் சீர்படுத்தலில் செம்மை கண்டோம்

ஒழுக்கமாக மாணவர் உருவாக வேண்டுமென
நாளும் நல்லுரை பகன்றதை மறவோமே

மாணவர் பயன்பெற கட்டிடம் அமைக்க
ஓடிக்களைத்த உழைப்பைப் போற்றுவோம்

விளையாட்டு மைதானம் விரைவாய் அமைக்க
வியர்வை சிந்தி ஓடிய நாட்களை மறவோம்

அலுவலக வேலையில் நேர்த்தி கண்டோம்
அணு அணு சரியார்க்கும் திறமை கண்டோம்.

கடமை நிறைவில் ஓய்வு நீர் கண்டாலும்
இறை பணி வாழ்வில் அமைதி பெற்று
பல்லாண்டு காலம் நிறைவாக வாழ
எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவார்

பயணங்களில் அதிபர்

கல்விப்பயணங்கள்

பட்டறிவுப்பயணம்

கனடாவின் இயற்கையுடன்

தலைமைத்துவத்தின் பொருளானவர்

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலை

யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் ஆளுமை மிக்க ஓர் அதிபராக விளங்கியவர் அருட் சகோதரி அன்ரனிற்றா மாற்கு. மாணவர்களின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் அதிக கவனம் செலுத்தியவர். எமது பாடசாலை மாணவர்கள் மற்றையோரால் போற்றப்பட வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டுபவர்.

பாடசாலையில் நடைபெறும் எந்த விழாக்களென்றாலும் முன்னின்று அவற்றை செம்மைப் படுத்துவார். நேர்த்தியாக எந்தவொரு விடயமும் அமையவேண்டும் என்பதில் உறுதி கொண்டவர்.

பாடசாலைக்கான புதிய கட்டிடம் அமைத்தல், விளையாட்டு மைதானம் வாங்குதல் என்ப வற்றுக்காக அல்லும் பகலும் பாடுபட்டவர். தனது உடற்சோர்வைக் கூட பொருட்படுத்தாது கட்டிட வேலைக்காக ஓடி ஓடி உழைத்தார். வேலைகள் நடைபெறுவதை அடிக்கடி கண்காணிப்பார்.

எமது பாடசாலை மாணவர்கள் பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்ற வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர். இணைபாட விதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்று தினமும் கூறுவார்.

தரம் 11 இல் 09A உம் தரம் 13 இல் 3A எமது பாடசாலையில் அதிக மாணவர்கள் எடுக்க வேண்டு மென்பதில் ஆர்வம் கொண்டவர். ஏனைய பாடசாலைகளை விட கல்வியில் அதிக பெறு பேறுகளை எமது பாடசாலை மாணவர்கள் பெற வேண்டுமென்பதில் அதிக விருப்பம் கொண்டவர்.

ஆசிரியர்களாகிய எங்களுக்கு சிறந்தவழிகாட்டியாக திகழ்ந்தார். ஒரு விடயத்தை எவ்வாறு தலைமை தாங்குவது என்பதை நாம் இவரை பார்த்து தான் கற்றுக் கொள்ள வேண்டும். இவரின் நேர முகாமைத்துவம் கண்டு வியந்து நிற்கின்றோம். சிறு பிரச்சினைகளைக் கூட அணுகும் முறை கண்டு மலைத்தோம். ஆசிரியர்களின் இல்லங்களில் நிகழும் சுபகாரியங்களில் தவறாது கலந்து கொள்வார். வாழ்த்துக்களைப்பகிர்ந்து கொள்வார். துயர நிகழ்வுகளிலும் கட்டாயமாக கலந்து கொண்டு ஆசியரியரின் துன்பத்தில் பங்கெடுப்பார்.

இறைபணியே தலைமைக் குறிக்கோளாக கொண்ட அருட்சகோதரி அவர்கள் அதிபராக எமக்கு வாய்த்தமை நாம் பெற்ற கொடைகளில் ஒன்றாகும். அறுபது அகவை நிறைவில் ஓய்வினைக் காணும் வேளையில் சாந்தியும் மகிழ்ச்சியும் வாழ்வில் மலர திருக்குடும்ப கன்னியமடம் தேசிய பாடசாலையின் ஆசிரியர்கள் சார்பாக வாழ்த்துகிறோம்.

தனித்தடம் பதித்த நிர்வாகி

திருமதி.பு.திருஞானசம்பந்தன்,
முன்னாள் உப அதிபர்,
யாழ் திருக்குடும்பக்கன்னியர்மடம்,
யாழ்ப்பாணம்.

அருட் சகோதரி அன்ரனிற்றா மார்க் அவர்களின் மகத்தான சேவைக்கு மகுடமாக அமைய வுள்ள மணிவிழா மலருக்கு அவர்களின் அனுபவங்களையும் ஆளுமைச் சிறப்பினையும் பதிவு செய்வதற்கு கிடைத்த வாய்ப்பினையிட்டு மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இலங்கை நாட்டின் கல்விக் கருவூலமாக வரலாற்றுத் தடம் பதித்து தன்னிகரில்லா தலைவர்களை உரு வாக்கிய யாழ்ப்பாணக்குடாநாட்டில் புகழ்பூத்த வரலாற்று கல்விக்கூடங்கள் பல தடம்பதித்து வந்துள் ளன. அந்த வகையில் யாழ்ப்பாண நகர மையத்தில் அமைந்த உயர்தரக் கல்லூரிகளில் அதுவும் பெண்களிற்காகவென மிளிர்தவை தனக்கெனத் தனியான வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்ட பெண்கள் பாடசாலையாகும். அதன் அளப்பரிய வளர்ச்சியினால் நாட்டின் தேசியப் பாடசாலைகளில் ஒன்றாக உயர்ந்து நிற்கின்றது. இந்தக் கல்விக்கூடத்தின் நீண்டகால வரலாற்றுப் பயணத்தில் அருட் சகோதரிகள் பலர் அரும்பணியாற்றி வந்துள்ளனர். அந்த வகையில் தனக்கென ஒரு தனித் தடம் பதித்த நிர்வாகத் தலைவியாக தன்னை அடையாளப்படுத்திய பெருமைக்கும் சிறப்பிற்கும் உரியவர் தான் அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் என்றால் அதில் மிகை ஏதும் இல்லை.

அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் அவர்கள் சந்தியாகுமார்க், றோசம்மா மார்க் ஆகியோருக்கு 26.08.1958 ஆம் ஆண்டு கிளாலியிலுள்ள எழுதுமட்டுவாள் என்கின்ற கிராமத்தில் இப்பூவுலகில் கால் பதிந்தார். அருட் சகோதரி அவர்கள் ஆரம்பக் கல்வியைத் தனது சொந்தக் கிராமத்திலேயே பூர்த்தி செய்தாலும் கனிஸ்ர இடைநிலைக் கல்வியை வேற இடங்களில் பயிலும் வாய்ப்பினைப் பெற்றார். க.பொ.த(சா/த) க.பொ.த உ/த) கல்வியை மன்னார் சென் சேவியர் கல்வி யிலும் பூர்த்தி செய்ததோடு தனது உயர் கல்வியினை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திலும் சிறப்பாக நிறைவு செய்து கொண்டார்.

அருட்சகோதரி அவர்கள் அணியும் ஆடையின் வெண்மையின் அர்த்ததினைப் புரிய வைக்கும் வகையில் நிறை யவே நற்பணியாற்றி வந்துள்ளார்கள். அவ்வாறே அவர்களின் ஆசிரியப் பணிகள், அதிபர் பணிகள் எல்லாம் மிகவும் பெறுமதி மிக்கவை. அந்த வகையில் 01.01.2000 ஆம் ஆண்டு உப அதிபர் பொறுப்பினை ஏற்றதில் இருந்து அவர்களின் அதிபர் பணியானது சேவையின் உயர்வினையும் உச்சத்தினையம் காட்டி நின்றது. குறிப்பாக இக்கல்லூரிக்கு வருவதற்கு முன்பாக கிளிநொச்சியில் கிளி/சென்.பற்றிமா R.C.T பாடசாலையில் பணியாற்றிய ஏறத்தாள 06 வருடங்கள் தனது ஆளுமையினையும் ஆற்றலையும் எடுத்துக் காட்டும் வகையில் சிறப்பாகப்பணியாற்றி அந்தக் கிராமப்புறப்பாடசாலையின் தேசிய மட்டப் பரீட்சைகளின் அடைவு மட்டத்தின் குறிப்பாக க.பொ.த (சா/த) பரீட்சையில் நூறு வீத சித்தியினையும் தொடர்ச்சியாக பெறுவதற்கு வகை செய்தவர். அருட் சகோதரி அவர்கள் தான் பணியாற்றிய காலம் முழுவதையும் அக்கல்லூரியிச் சமூகத்திற்கும் வலயக்

கல்விப் பணியாளர் உள்ளிட்ட கல்விப் பணிமனையின் பதிவுகளில் என்றும் மறக்க முடியாத காலமாக அமைந்திருந்தமையினை நான் அறிந்துள்ளேன். உண்மையிலேயே அந்த வறிய மாணவர்களின் கல்விக் கண்களைத் திறந்து ஒளி ஏற்றி வைத்த உத்தமி அன்ரனிற்றா மார்க் அவர்க ளுடன் இணைந்து பணி ஆற்றும் வாய்ப்பு சிறியேனுக்கு 20.04.2015முதல் யா/திருக் குடும்பக் கன்னியர் மடம், தேசியப் பாடசாலையில் கிடைத்தமையானது ஒரு சிறந்த வாய்ப்பாகவும் அமைந்தது. நான் அந்தப் பாடசாலையில் நீண்ட காலமாக பணியாற்றியவள் என்ற வகையில் பல அருட்சகோதரிகளின் தலைமைத்துவ நிர்வாகப் பண்புகளையும் நிர்வாக சிறப்புக்களையும் அறிந்துள்ளேன். அந்த வகையில் அருட்சகோதரி மார்க் அவர்களுடன் பணியாற்றிய காலமானது எனக்கு என்மனதில் பல நல்ல அனுபவபதிவுகளை ஏற்படுத்தியது என்றால் அதில் மிகை ஏதும் இல்லை. அந்த வகையில் அருட்சகோதரியின் ஆளுமை திறனும் சேவையின் நேர்த்தியும் துடிப்பும் என சிறப்பம்சங்கள் பலவற்றை என்னால் நன்றாக உணர முடிந்தது. அவ்வாறாகப் பல நிர்வாகத் திறன்களையும் சிறப்புக்களையும் கொண்ட அதிபரின் உயர்ந்த பணிகளில் எனது உள்ளத் தைத்தொட்ட சில நற்பணிகளை இங்கு பதிவு செய்து கொள்ள முனைகின்றேன்.

அருட்சகோதரி அவர்கள் மிக உயர்வானவர்கள். பல நற்பணிகளின் சொந்தக்காரி என்றா லும் கூட இங்கு எல்லாவற்றையும் பதிவு செய்து கொள்ள முடியாதுள்ளமையினால் முக்கியமான சில வற்றை மீள வலியுறுத்த விளைகின்றேன். அருட்சகோதரி அவர்கள் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையில் பொறுப்பேற்ற காலத்தில் பல போதாமைகள் இருந்தமையினை விளங்கிக் கொண்டு வேகமாக பணியில் இறங்கினார்கள். அந்த வகையில் அதிபர் அருட்சகோதரி மார்க் அவர்களிடம் காணப்பட்ட சிறப்புக்களையும் அவர்களின் சாதனைகளையும் எனது அனுபவத்தினூடாக பதிவு செய்ய விளைகின்றேன்.

கருமமே கண்

அதிபர் அருட்சகோதரி அவர்கள் பாடசாலையின் முன்னேற்றம் வளர்ச்சி தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் தெரிவுப் பட்டியலைத் தயாரித்து அதன் அடிப்படையிலே கருமங்களை முன்னெடுத்தமை சிறப்பு அம்சமாகும். அது மாத்திரமல்ல எடுத்த ஒவ்வொரு கருமத்தினையும் உரிய காலத்தில் செவ்வனே செய்தமை முக்கிய அம்சமானது அவர்களின் தனிச் சிறப்பாக அமைந்தது. சில பணிகளை மற்றவர்களின் உதவி கிடைக்காவிட்டாலும் தனியாக நின்று போராடி செய்து முடிக்கும் மன உறுதிக்கும் அயராத உழைப்பிற்கும் அவர்களிற்கு நிகர் அவரே தான். முயன்று தவறுதல் கோட்பாட்டினை மாற்றியமைத்து முயன்று வெல்லுதல் என்னும் கோட்பாட்டினை பல சந்தர்ப்பங்களில் உருவாக்கி காட்டியுள்ளார்கள். அவ்வாறாக தனது ஒவ்வொரு கருமத்தினையும் வெற்றியாக நிறைவு செய்வதில் வெற்றி கண்டவர். இதற்கு உதாரணமாக திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையானது மிக நீண்ட காலமாக கட்டடப் பற்றாக்குறையு டனும் புதிய கட்டிடம் எதுவும் நிர்மாணிக்கப்படாமலும் பயணித்து வந்துள்ளது. இந்த நிலையினை மாற்றி அமைத்த பெருமை அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் அவர்களையே சாரும். அதாவது கல்லூரிக்கென மூன்றுமாடிக் கட்டிடம் ஒன்றினையும் ஆசிரியர்களிற்கான விடுதிக் கட்டிடத்தையும் நிர்மாணம் செய்வதற்காக அவர்கள் உழைக்க உழைப்பினை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அவ்வளவு சிரமப்பட்டு அயராது உழைத்த உழைப்பின் காரணத்தால் இந்த இரண்டு கட்டிட நிர்மாணங்களும் இன்றி இருந்த அந்தக் குறையினை அருட்சகோதரி தனது அயராத உழைப்பினால் அறுவடை செய்துள்ளார்கள். இது உண்மையிலே பாடசாலை வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

அடுத்து கல்லூரிக்கு அண்மையில் மைதானம் அமைக்கும் பணியினை எவ்வளவோ சிரமங்கள் தடைகள் தாண்டி ஒரு சவலாக எடுத்து பணியினை நிறைவு செய்ததுடன் நீண்ட கால இடைவெளியின் பின்னர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியினை கடந்த வருடம் (2017ம் ஆண்டில்) சொந்த மைதானத்தில் நடாத்தி காட்டியமையானது உண்மையிலேயே மறைக்கவோ மறுக்கவோ முடியாத ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

நேர்மை

அதிபர் அருட்சகோதரி அவர்கள் தனது நிர்வாக கடமைகளில் மிகவும் நேர்மையாக பணியாற்றியமை காணலாம். அதாவது பாடசாலை பணியாற்றுகின்ற அனைவரும் அதாவது இறைவனின் அதி உன்னத மகிமைக்காக தங்கள் பணியினை நேர்மையாகவும் நேர்மனப் பாங்குடனும் வறிய மாணவர்களின் எதிர்கால வாழ்வு சிறப்படைய பணியாற்ற வேண்டும். என்பதில் மிகவும் அக்கறையாக இருந்தார்கள். அதாவது மாணவர்களின் கற்றல் கற்பித்தல் பணிகள் என்பன மிகவும் வினைத்திறன், விளைதிறன் மிக்கதாக அமைய வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையாகவும் ஆர்வமாகவும் இருந்தமையினை அவதானிக்க முடிந்தது. அருட்சகோதரி அவர்கள் தனது நேர்மையின் கட்டுக்கோப்புக் காரணமாக கல்வித் திணைக்கள அதிகாரிகள் பணிப்பாளர்களுடன் முட்டி மோதியது உண்டு. இறுதியில் அதிபரின் நேர்மையே வெற்றி பெற்ற பல சந்தர்ப்பங்களைப் பார்க்க முடிந்தது. காலப்போக்கில் கல்வித் திணைக்களத்தினரும் அதனைப் புரிந்து கொண்டு ஒத்துழைத்துப் பாராட்டியமையும் காணமுடிந்தது. இவ்வாறாக தனது எல்லாப் பணிகளையும் நேர்மையாகச் செய்வதில் மிகவும் உறுதியாக இருந்தமையை என்னால் மறக்க முடியவில்லை.

செலவுகளில் சிக்கனம்

அதிபர் அருட்சகோதரி மார்க் அவர்கள் பாடசாலையின் செலவு விடயங்களில் சிக்கனம் பேணும் தன்மை மிகவும் சிறப்பானதாகும். எந்தவொரு பணியாக இருந்தாலும் அவற்றுக்கான செலவுகளை மிகவும் சிக்கனமாகப் பேணி வினைத்திறனாகப் பணியாற்றி வந்தமையை அவதானிக்க முடிந்தது. பாடசாலைக் கடமைகளிற்காக கல்வி அமைச்சிற்குச் செல்லும் போது கூட மிகவும் செலவு குறைந்த பிரயாண மார்க்கங்களைத் தெரிவு செய்து செல்கின்றமையே கடைப்பிடித்து வந்தார்கள். உதாரணமாக கொழும்பிற்கு இ.போ.ச பேருந்துகளிலேயே கூடுதலாக பிரயாணம் மேற் கொள்வார்கள். கொழும் பிற்கான பிரயாண மார்க்கத்தில் இ.போ.ச பிரயாண மார்க்கமே மிகவும் செலவு குறைந்த பிரயாண மார்க்கமாகும். புகை வண்டியை தெரிவு செய்வதாயின் சாதாரண புகை வண்டியிலே பிரயாணத்தினை மேற்கொள்ளும் தன்மை. இவ்வாறாக பாடசாலை நிர்வாக பணிகள் அனைத்திலுமே தான் முன்னுதாரணமாக நடந்து காட்டுவதுடன் நடத்திக் காட்டிய மையையும் அதிபர் அவர்களுடன் பாடசாலை நிர்வாக விடயங்களில் இணைந்து பணியாற்றிய காலத்தில் அதிபரின் இந்த விரையமற்ற வினைத்திறனான நிதி, நிர்வாக பணிகளை அவதானிக்க முடிந்தது.

மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களில் கூடிய கவனம் செலுத்தியமை

இன்று நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும் ஏனைய தொழில்நுட்பச்சாதனங்களின் பயன் பாடும் மாணவர் களின் ஒழுக்க விழுமியங்களிற்கு பெரிய சவாலாக அமைந்துள்ளன. இவ்வாறான காலகட்டத்தில் கல்விப் பின்புலம் குறைந்த வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களை ஒழுங்கு படுத்தி அவர்களின் எதிர்கால வாழ்விற்காக வழிகாட்டிய சிறந்த தலைவியாக அருட்சகோதரி அவர்கள் செயற்பட்டார்கள். எல்லா மாணவர்களையும் ஏற்றத்தாழ்வு இன்றி, சமத்துவத்துடன்

பேணி வழிநடாத்துவதில் வெற்றி கண்டவர். மாணவர்கள் தங்கள் கல்விச் செயற்பாட்டினை தடையின்றி மேற்கொள்வதற்கு தேவையான எல்லா ஒழுங்கு செயற்பாடுகளையும் மிகவும் சிறப்பாகத் திட்டமிட்டு மேற்கொண்டார்கள். உதாரணமாக தியானப்பயிற்சி, உயற்பயிற்சி, நற்சிந்தனைகள் வழங்குதல், வழிகாட்டுதல் ஆலோசனைச் சேவை போன்றவற்றை எல்லாம் மிகவும் சிறப்பாக மேற்கொள் ளப்பட்டு வந்தமையைக் காணலாம். மேலும் மாணவர்களின் பெற்றோர்களுடன் திட்டமிட்ட முறையில் சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தமையையும் காணலாம்.

அந்த வகையில் ஆசிரியர்கள் மாணவர்களிற்கு முன்மாதிரியாக நடக்க வேண்டும் என்பதில் மிகவும் இறுக்கமாக இருந்தார்கள். உதாரணமாக கையடக்கத் தொலைபேசிப் பாவனை யானது அரச சுற்று நிருபத்திற்கு அமைய பாடசாலையில் முற்றாக தடை செய்யப்பட்டிருந்தமையைக் காணலாம். ஆசிரியர்கள் கூட அவசர தேவையின் நிமித்தம் அதிபரின் அனுமதியை பெற்றே கையடக்கதொலைபேசியைப் பயன்படுத்த முடியும். இந்த நடைமுறையானது அருட்சகோதரியின் நிர்வாகத்திலேயே சிறப்பாக முன்னெடுக்கப்பட்டமையைக் காணலாம். இவை எல்லாம் மாணவர்களின் கல்வி ஒழுக்க விழுமியங்களில் அதிபர் அவர்கள் எவ்வளவு தூரம் கவனமாகவும் அக்கறையாகவும் இருந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

மேலும் மாணவர்களின் பாடசாலை நிகழ்வுகள், பாடசாலைக்கு வெளியிலான நிகழ்வுகளில் மாணவர்களை வழிப்படுத்துவதில் மிகவும் இறுக்கமாக கட்டுப்பாடுகள் கடைப் பிடிக்கப்பட்டு வந்தது. பல்வேறு சந்தர்ப்பங்களில் மாணவர்களின் பாதுகாப்பிற்காக பெற்றோர்கள் அழைக்கப்படுவதுண்டு.

இப்பாடசாலையானது பெண்கள் பாடசாலை என்ற காரணத்தினால் பிள்ளைகளின் ஒழுக்க விழுமியங்களில் மிகவும் கவனம் செலுத்துகின்ற ஒரு அதிபராக அருட்சகோதரிமார் அவர்கள் செயற் பட்டு வந்துள்ளமை சிறப்பாக கவனிக்கத்தக்கதாகும்.

கஸ்ரப்பட்ட மாணவர்களிற்கு உதவுதல்

திருக்குடும்பக் கன்னியர் மடப்பாடசாலையில் கற்கும் மாணவர்களில் பலர் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட வர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறாக வறுமை காரணமாக கல்விச் செயற் பாடுகளில் இடர்படும் மாணவர்களை ஊக்கப்படுத்தி உதவிகள் செய்து தூக்கி விடுவதில் அருட் சகோதரி அவர்கள் அரும்பணியாற்றி வந்துள்ளமையினை நான் பல சந்தர்ப்பங்களில் அவதானித் துள்ளேன். வறுமை மாணவர்களின் கல்விக்குத் தடையான காரணி ஆகிவிடக் கூடாது என்பதில் அதிபர் அவர்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட்டு தன்னால் ஆன உதவிகளை செய்வதோடு தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட வளங்களைக் கூடச்சேகரித்து வறிய மாணவர்களின் துயர் துடைத்து அவர்களின் கல்விக் கண்களைத் திறந்து எதிர்கால வாழ்விற்கு ஒளி ஏற்றிய வரலாறுகள் நிறை யவே உண்டு.

பொய்யுரையாமை

அருட்சகோதரி மார்க் அவர்கள் பொய் உரைப்பதனை எப்போதும் விரும்புவதில்லை. "உண்மை பேசி உத்தமனாக வாழ்" என்ற முதுமொழிக்கிணங்க எல்லோரும் பொய் உரையாத உத்தமர்களாக வாழப் பழக வேண்டும் என்பதில் மிகவும் அவதானத்துடன் செயற்பட்டார்கள்.

அவர்களின் கருத்துப்படி எக் காரணத்திற்காகவும் கூட பொய் உரைப்பதனை தவிர்த்து கொள்ளுதல் அவசியம் எனக் கருதினார்கள்.

அருட்சகோதரியிடம் எழும் வினா? எதற்காக பொய் உரைப்பது என்பது நீண்டகால வெற்றி யைத் தரமாட்டாது என்பதோடு பல இடர்களையும் ஏற்படுத்திவிடும். அதுவும் மாணவர்கள் சிறு வயதில் இருந்து கடைப் பிடிக்கும் நல்ல பழக்கவழக்கங்கள், அவர்களின் எதிர்கால வாழ்வினைத் தீர்மானிக்கின்றன. அல்லது கட்டுப்படுத்துகின்றன என்ற வகையில் பொய் உரையாமையானது மாணவர்களிற்கு மாத்திரமன்றி அனைத்து மனிதர்களிற்கும் அவசியம் என்பதில் மிகவும் தெளிவு டன் செயற்பட்டு வந்துள்ளமை அவர்களின் மற்றொரு சிறப்பம்மாகும்.

இனங்கண்டு பழகும் திறன்

அதிபர் அருட்சகோதரி மார்க் அவர்கள் மற்றவர்களை இனங்கண்டு இணைந்து செயற்ப டுவதில் பெரிய திறமைசாலி. அதாவது மற்றவர்களிடம் காணப்படும் சிறப்பான குணநல இயல்பு களை இணங்கண்டு கொள்வதும் அதற்கமைய அவர்களுடன் நன்றாகப் புரிந்துணர்வுடன் நெருங்கிப் பழகுகின்ற ஒரு நல்ல உள்ளம் அதனாலோ என்னவோ திருக்குடும்பக் கன்னியர்மட அதிபராகி சில காலங்களிலேயே சிறியேனுடன் நெருங்கிப் பழகியமையை இன்னும் எனது மனக்கண்ணில் பசுமையாகப் பதிந்துள்ளது. அது மாத்திரமல்ல என்னை பாடசாலையின் உபஅதி பராக்கி நிர்வாக பொறுப்புக்களில் விரும்பி இணைத்துக் கொண்டார்கள். அதன் காரணமாக அருட் சகோதரியுடன் மிகவும் நெருக்கமாக நின்று பணியாற்றுகின்ற பாக்கியம் குறிப்பிட்ட சிலகாலம் எனக்குக்கிடைத்தது. அந்தக் காலங்களை மீட்டுப்பார்க்கின்றேன். நான் உபஅதிபர் பொறுப்பினை ஏற்க மறுத்த போது என்னைக் கட்டாயப்படுத்தி அப்பொறுப்பினை எனக்குத் தந்தமையையும் மறக்க முடியாத ஒரு நிகழ்வாகும். இவ்வாறாக ஆசிரிய குழாத்தில் பலருடன் மிகவும் மட்டுல்லாது அதனைத் தொடர்ந்து பேணி வருகின்றமையையும் அவர்களின் தனித்துவமான பண்பாகும்.

அதிபர் அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் அவர்கள் உண்மையிலேயே கல்விப்புலப் பயணத்தில் அளப்பரிய சேவைகளிற்கு சொந்தக்காரியாகி அகவை அறுபதில் அதிபர் பணியில் இருந்து ஓய்வு பெறுவதையிட்டு வெளியிடப்படவுள்ள மலருக்கு யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம், பாடசாலையில் நீண்டகாலம் பணியாற்றியவள் என்ற வகையிலும், அருட்சகோதரி மார்க் அவர்க ளுடன் நிர்வாகத்தில் உப அதிபராகவும் சில காலங்களுக்கு பணியாற்றியவள் என்ற வகையிலும் இந்த மலரானது சிறப்பாக வெளிவந்து அருட்சகோதரியின் வினைத்திறன், விளைதிறன் மிக்க சேவையினை சரியாக படம்பிடித்து காட்டும் ஆவணமாக அமைவதையிட்டு மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகின்றேன். இருப்பினும் அருட்சகோதரியின் அரும்பணியினை நிறைவு செய்யும் காலத்தில் ஒன்றாக இருந்து பணியாற்றிட முடியவில்லை என்பதை நினைக்கும் போது நெஞ்சம் கனக்கின்றது. என்பதுடன் அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைந்து தேக ஆரோக்கியத்துடன் தனது இறைபணியை தொடர வேண்டும். இதற்கு இறைவன் நல் அருளாசிகளை வழங்க வேண்டும் என இறைவனை இறைஞ்சி கேட்டு வாழ்த்துகின்றேன்.

நட்பால் இணைந்த நல்லதோர் இதயம்

திருமதி சு.கு இரட்ணம்
ஓய்வு நிலை – ஆரம்பப்பிரிவுப் பகுதித் தலைவர்

எங்கள் பள்ளியில்
அதிபராய் இணைய முன்னரே
நண்பியராய் என்னோடு
நலமுடன் பழகியவர்.
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தாறில்
மன்னார் புனித சவேரியார்
பெண்கள் கல்லூரியில்
தன் ஆசிரியப்பணிக்கு அகரமிட்டு
வருடங்கள் நான்கொடு
மாதங்கள் நான்கும்
கூடவே தினமொரு நான்கையும்
வெற்றிகரமாய் நிறைவு செய்து
1991 இல் யாழ்.கன்னியர் மடம் தன்னில்
கண்ணியமாய் அழைவைத்தார்.
கன்னியர் மடம் தன்னில்
ஆசிரியையாய் இணைந்து
அன்பு நண்பியாயும் இணைந்தவர்.
அன்பான உள்ளம் அமைதியான வதனம்
நல்லன யாவும்
நலமுடன் இயற்றும் பேராவல்
அத்தனையும் கொண்டு
கன்னியர் மடத்தில்
வருடங்கள் நான்கு கடந்து
நான்கு மாதங்கள்
பதின் மூன்று நாட்களாய்
கண்ணியமாய்ப் பணி செய்த
அன்றைய நாட்களில்
அன்பான நண்பியாய்
ஆதரவாய்த் தோள் கொடுப்பார்

இவ்வாறு ஆரம்பித்த
அழகான நம் நட்பு
2015 ஆம் ஆண்டு
சித்திரைத் திங்கள் இருபதாம் நாள்
மீண்டும் புதுப்பொலிவு பெற்றதிங்கு
பாஷையூர், பண்டத்தரிப்பு, பருத்தித்துறை
வன்மையான போரின்
ஆழமான வடுக்களை அதிகமாய்ச் சுமந்ததால்
நொந்திருந்த கிளிநொச்சி என்று
ஆசிரியப் பணியில் அகலக்கால்பதித்து
2015 இல் மீண்டும்
திருக்குடும்ப கன்னியர் மடமாம்
எங்கள் தேசிய பள்ளிதனில்
அதிபராய்ப் பணியாற்றும்
பெரும் பணி ஏற்று வந்தார் – இங்கே
பகுதித் தலைவியாய் எனைக்கண்டு
பேருவகை கொண்டு நின்றார்.
எல்லோரும் என்னை
“இரட்ணம்” என்று கணவன் பெயர் சொல்லி
அழைக்கின்ற வேளையிலே
“றெஜி” என்று என்பெயரை
உரிமையோடு அழைத்து நின்ற
அன்பான நண்பியிவர்.
ஆரம்பப்பிரிவிலிருந்து அலுவலகத்திற்கு
அடிக்கடி என்னை அதிபராய் இவர்
அன்போடு அழைக்கையிலே
கால்கள் வலிப்பதால் கொஞ்சம் வருந்தினாலும்
உள்மனம் ஒரு போதும் வலித்ததில்லை
ஏனெனில் ....

கடமை உணர்வைக்
கண்ணியமாய்க் கற்றுத் தருவதே
நண்பியிவர் நோக்கமென
என் உள்மனம் ஐயமின்றி
உண்மையாய் உணர்ந்தமையால்.
சேவைத் திறன் கொண்ட
சீரிய நெஞ்சமொன்று
எங்கள் பள்ளியில்
அதியர் சேவைதனை

அழகாய் நிறைவு செய்து
இறைபணிக்குத் தயாராகும்
இன்றைய வேளையிலே
இளகிய இதயங்கள் கொஞ்சம்
கனமாகிப் போனாலும்
நட்பால் இணைந்த
நல்லதோர் இதயத்தின்
சேவைக்குத் தாள் பணிந்து
விடை தருவோம் நாமெல்லாம்.

அன்பால் இணைந்த உள்ளம்...

திருமதி.மே.டி.யூட் ரவிநாத்
(பழைய மாணவி)

இறை யேசு தந்த கொடையம்மா – நீர்
குற்றங் களைந்து நிறை காண வைத்தவர்
தாரமும் குருவும் தலை விதி என்பர்
குருவாகி நீர் வந்த நேரம் – என்
சேவையின் மகத்துவம் உணர்ந்து கொண்டேன்
நிமிர்ந்தே நிற்கின்றேன்
உமதருமை மாணவியாய்

கன்னியர் மடம் மகாவித்தியாலயம் தன்னில்
ஆசிரியையாய் நீரிருந்த வேளையிலே
கற்ற கலை சிறப்புற்றது மட்டுமல்ல
கட்டுப்பாட்டோடு ஒழுக்கத்தையும்
நல்ல விதமாய் புகட்டியவர் நீங்கள்

வாரங்கள் கடந்து மாதங்கள் ஓடி
வருடமது நகர வயதும் கடந்து சென்றாலும்
அன்று போல் இன்றும் அதே துடிப்பும்
அதே கடமையில் கண்ணியமும்
நீங்காது நிலைத்து நிற்பது
இறைவன் தந்த கொடையன்றோ

பருவ காலங்களின் மாற்றங்கள் கண்டு
பக்குவங்கள் பல சொல்லி நேர்வழி காட்டினீர்
விளங்காத பாடங்களையும் விளங்க வைத்தீர்
பள்ளி முடிந்து பலரும் வீடு சென்ற பின்னும்
அணி நடைப் பயிற்சியினை அன்பொடும்
கண்டிப்புடனும் கற்றுத் தந்து
வெற்றியீட்டிய போதெல்லாம்
தட்டிக் கொடுத்து தரமுயர வழி வகுத்தீர்

தவறுகள் யார் புரிந்த போதிலும்
தண்டனை யாவர்க்கும் சமம் என்பீர்
பல சந்தர்ப்பங்களில் முழங்காலில் நின்று
தண்டனை பெற்ற கணங்கள்
கண் முன் வரும் போதெல்லாம்
உம் நினைவுகள் ஓடி வரும் என் முன்னே

அன்ரனிற்றா என்னும் நாமம் – என்
தாயாரிற்கும் உரியதன்றோ
அதனாலும் கூட உம்மையும் என் தாய் போல்
தினமும் என் மனதிலே நிறுத்துவேன்

குரு சிஷ்ய உறவோடு தொடர்ந்த உமதன்பு
உமது சேவைக்காலத்திலேயே
உமது வழிகாட்டலின் கீழ்
ஆசிரியப் பணியாற்றும் பாக்கியமும்
கிடைத்ததையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்

மாணவியாய் இன்று உம்மை அணுகும் போதெல்லாம்
அடக்கியொடுக்காது அன்பு காட்டி
உமக்குக் கீழ் பணியாற்றும் ஆசிரியையாக
ஆலோசனைகளை அள்ளி வழங்குவீர்

கட்டுக் கோப்புக்குள் கல்லூரி நலனுக்காய்
கருத்தாடிய போதெல்லாம் மீள் பரீசீலனை செய்யும்
உமது அறிவுக் கூர்மை, வழிகாட்டும் திறன்,
அறிவுறுத்தல்கள் எனக்கு நிலையாக வேண்டும்

செல்லும் வழியெல்லாம் களைகள் பிடுங்கப்பட்டு
பூப்பூத்து வளம் பெருக வேண்டும்
இறைபணி இன்பத்தை அள்ளித் தரட்டும் என
வாயார வாழ்த்தி நிற்கின்றேன்.

அன்பக அரசியே,
இறை வார்த்தை வழி உம் சுவடு

வார்த்தைக்குள் வாழ்பவளே நீவிர் வாழி
வளமான வாழ்வு தவிர்த்து பணிக்கென
பக்குவமான பண்பாட்டின் அருளினியாய்
பாரினில் உம் வாழ்வை தியாகமாய் தந்தீர்
நீவிர் வாழி

பகட்டும் கவர்ச்சியான தேடலையும்
துறவிகளே துறக்க முடியாத காலமதில்
பார்வையால் பரிவு தரும் உம் வாழ்க்கை துறவறத்தை
நாடோதோரையும் நாட வைக்கும்
நீவீர் வாழி

எளிமை, நேர்மை, உண்மை எனும்
மை கொண்டு எழுதப்பட்ட உம் சுவடு
ஏற்காதோரையும் ஒரு நிமிடம் நின்று
மையல் கொள்ள வைக்கும் மாதிரி,
நீவிர் வாழி

ஏற்றத்தின் ஏணியாய் திருக்குடும்பம்
உச்சி தொட நீர் சகல துறைகளிலும்
ஆய்வுடன் மாற்றங்களை காண வைத்து
நிரந்தர எதிர்கால வெற்றிக்காய் உழைத்தீர்
நீவிர் வாழி

கடமை தனில் தடைகள் வந்த போது
கண்ணீரால் அவர்கள் அறியாமையைக்
கரைத்திடும் கர்த்தாவே எனக்
கசிந்துருகிடும் மனந்தினளே
நீவிர் வாழி

வளங்களைத் தேடுவதில் வல்லமை கொண்டீர்
வல்லபிரான் காலடியை இறுகப் பற்றி
தேவையானவற்றை தேடியே அலைந்து
அயரா உழைப்பின் பலனைக் கண்டீர் நீவீர் வாழி
மில்லியன்களில் மிளிர்ந்திடும் கட்டிடங்கள்
மிகையாகவே முயற்சித்து மைதானம்
குறை நிரப்பலில் ஆசிரிய வளங்கள்
கறையில்லா உம் வேர்வையின் விளைவுகள்
நீவீர் வாழி

நாளைக்காய் நாளும் களைப்பின்றி உழைத்தீர்
நன்மைகள் பல காணவே விளைந்தீர்
வினைதிறன், விளை திறன் வீண் போகாது
வேர்களாய் நிலம் ஊன்றி திருக்குடும்பம்

களப்பயணங்களில் தாயாய் சகோதரியாய்
கருத்தாகவே அனுபவக் கல்வியினை
கண்மணிகளாம் மாணவர்ச் செல்வங்கள்
கண்டு களிக்க திட்டமிட்டு வழிநடந்தினீர்

அன்பு மழையில் மாணவர் ஆசிரியர்
வன்மை தவிர்த்து பிறர் நலம் நாடும்
பாங்கான வாழ்வதனை பயணங்கள் மூலம்
பக்குவமாய் பண்பாய் சொல்லிக் கொடுத்தீர்

நேற்றைய எம் தேசம் குருதியில் நனைந்த
நேசமில்லா வாழ்வு தனில் அகப்பட்டு
எளிமையை ஆடையாய்க் கொண்டு
முற்றிலும் ஆடம்பரம் துறந்தீர்

தாயே உமக்கு நீரே நிகர்
நின் கண்டிப்பு பலரைப் புடமிட்டது
உம் அரவணைப்பு தன்னம்பிக்கை தந்தது
பிறர் துயர் உம்மை கலங்கடித்தது

எனக்கு நீர் அளித்த மதிப்புறு நிகழ்வுகள்
திருக்குடும்ப முன்முடி தரித்த உமது சிலுவை சுமையை
குறைக்க முடியாத குறையோடு அருகிருந்தும் நான்
மௌனத் தவிப்போடு நன்றியை மனதில் சுமந்து

நிர்வாக நுட்பங்களை நிறையவே
நிகரில்லாமலே தெரிந்து வைத்தீர்
துறைசார் வல்லுனர்களை தேவை கருதி
துல்லியமாக நாடி நின்றீர்

நீர் ஏறிய படிகள் பலனைத் தந்தன
துயர் தந்த பயணங்கள் ஒத்துழைக்காத
உடல் நிலைமை எல்லாமே பறந்து
புது இரத்தம் ஏறப் பெற்றீர்

விருந்தோம்பலில் பண்டைய தமிழச்சி
அவையறிந்து செயற்படுவதில் அரசியல்வாதி
ஒழுக்கம், கண்ணியம் காப்பதில் பண்பாட்டின் காவலாளி
பல்துறைப் பணிகளில் மனித நேயப் படைப்பாளி

பணித்தளத்தில் என் பார்வையில் இவை
பள்ளித் திடலில் சுறுசுறுப்பான பட்டாம்பூச்சி
உம் துடுக்கும் தூய்மையும் மிடுக்கான சிரிப்பும்
மன்னார் மண்ணை அதிர வைத்த அந்த நாட்கள்

கிளாலிச் செல்வியாய் அறுவரில் ஒருத்தி
கிளை பரப்பும் திருக்குடும்பத்தில் இணைந்தீர்
அன்னா வழியில் அர்ப்பண வாழ்வு
மீண்டும் ஆசிரியையாய் சவேரியரிடம் சரண்

பள்ளி வாழ்வில் பார்த்த பாவை
பொறுப்பான துறவற ஆசிரிய மலராய்
கண்டு களித்து திகைத்து நின்றோம்
கைகோர்த்து பள்ளிதனை உயர்ந்த இணைந்தோம்
இடர் பல சூழ்ந்த மன்னார் வாழ்வில்
துணிச்சலுடன் தடை தாண்டி மடுத்தாயின்
காலடியில் மாணவச் செல்வங்களை
ஒப்படைக்கும் திருப்பலிக்கான பயணங்கள்

அன்றைய அனுபவங்கள் வார்த்தையில் அடங்காதவை
இதுவே முள்ளி வாய்க்காலில் மூச்சடங்காமல்
சேவைக்காய் தொடரும் வாழ்வுக்கான முதலீடு
இன்றும் மடுந்தாயின் அரவணைப்பை நாடுகின்றீர்

திருக்குடும்ப திலகமே,
நட்புக்கு மாதிரி
சேவைக்கு பெலிக்கான்
அர்ப்பணிப்பிற்கு தாய்
அடக்க நினைப்போர்க்கு புலி
சமாதானத்திற்கு புறா
வள்ளல் தன்மைக்கு பாரி

இவை உம் வாழ்வு முழுவதும் தொடரட்டும்
அகவை அறுபது கையசைக்கின்றது
சட்டப் பதவி இல்லாமல் போகும்
சமூக சேவைகள் உம்மைத் தேடும்

ஏந்திய அகல்விளக்கு அணையாமல்
ஆன்மீகப் பயணத்தில் மடு அன்னையை
இதமாகப் பற்றி வழிநடத்த
ஈசன் பணிகளை முன்னெடுத்துச் செல்லும்

எம்பிரான் பாதம் தொட்டு
ஏக்கத்துடன் விடை தந்தேன்
ஐயமிட்டு உண்ணும் உம் எழில் வாழ்வு
ஓய்வில்லாப் பணியில் நலமுடன் பலமுடன் வாழி

பூபதி

வேதனைகள் சுமந்த சாதனையாளி

திருமதி.யசோதா ஸ்ரீகுமார்
ஆசிரியை யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

பிறப்பு என்பது சம்பவமானால்
இறப்பு என்பது சரித்திரமாக வேண்டும் – இவ்
அப்துல்கலாம் இன் அற்புதவரிகளுக்கு
அர்த்தம் கொடுக்க அவனியில் உதித்தவர்

ஆண்டவரிற்கென அடிபணிந்தவர்
அல்லாதவரை அரவணைப்பவர்
இல்லாதவர்க்கு இரங்கி இறைப்பவர்
இசைவோடு கடமைகளை இயல்பாய் முடிப்பவர்

தம் உடலின் வலிகளிற்கு வகை கூறாமல்
தலைநகருக்கு தனியாய் பயணம் செய்பவர் – நம்
கல்விக் கூடத்தில் கட்டிடம் எழும்ப
கால் கடுக்க கல்வி அமைச்சில் காத்திருந்தவர்

விசேட கல்வியின் விருட்சங்கள் வளர
விளைநிலம் அமைக்க விடாமல் முயன்றவர்
விளையாட்டு மைதானம் எமக்கென அமைய
தடைகளைத் தாண்டி வெற்றிக் கொடி சுமந்தவர்

மூன்று வருடங்களுள் எத்தனை சாதனைகள்!
மூப்பு அவருடன் முட்டி மோதவில்லை
எல்லோர்க்கும் நல்லவராய் நடிக்கத் தெரிந்திருந்தால்
முரண்பாடுகளிற்கு ஏனோ முகம் கொடுத்திருக்கமாட்டார்

நான் நானாக இருப்பேன் – எனத்
தலை நிமிர்த்தி இறைவனிடம் மட்டும்
தலை குனிந்து மன்றாடும் தைரியம்
நிறைந்த தற்துணிவாளி

அவசரப்பட்டு அவர் நடக்கும் போதெல்லாம்
பின்னால் சென்றால் தடக்கி விழுந்து
நாம் தலை தேடவேண்டும்
Sister எங்கே? எங்கே? என்று

வேகமோ வேகம் கணிக்க இயலாது
வெற்றி நடையது வெறி கொண்ட நடையது
ஆம்! வேதனைகளைச் சுமந்த சாதனையாளியின்
வெற்றிப்படி நோக்கிய வெறி கொண்ட நடையது.

இன்பமோ துன்பமோ இரண்டறக் கலந்து – எம்
இன்ப துன்பங்களை இணைந்து பங்கெடுப்பார்
நோய் வாய்ப்பட்டு இருக்கும் போதெல்லாம்
நொந்து போன எமக்காய் இறைவனிடம் நொந்தவர்

இறைவன் கொடுத்த சோதனையெல்லாம்
சாதனைக்கென வேதனைகளை சுமந்தவர்
இறைவன் இவரிடம் இரக்கம் கொண்டவர்
இன்னல் படும் போதோ இறுக்கமாய் கைகொடுப்பார்

சறுக்கல் வரும் பொழுதெல்லாம் தாங்கிப்பிடித்து
தளராத மனதில் தைரியத்தைக் கொடுத்து
தூக்கி விட்டார் இறைவன் ஏணிப்படிகளில்
ஏற்றிவிட்டார் இவர் எம் மாணவிகளின் மனதில்

ஒழுக்கம், விழுமியம், கடமை, கட்டுப்பாடு எனும்
கல்லூரிச் சரித்திர தீபமெனும் சுடரை
அழகான சூழல், ஆரோக்கியமான உடல்
இசைவான இயற்கை, இன்னலற்ற பாதை

இத்தனையும் கொண்டு இறைவனிற்கே மகிமை என்று
பிறர் இன்னல் களைந்து இன்புற்று வாழ
இறைவனை வேண்டுகின்றோம்.
ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அழியாது
இந்த சாதனையாளியின்
சரித்திரம் படைத்த புகழ்!

பொளதீக வளங்களை பாடசாலைக்குப் பெற்றுக்கொடுத்த பிரத்தனங்களில்.

கேட்போர்கூட கட்டடத்தொகுதி

புதிய ஆசிரியர் விடுதி

புதிய குளியல் அறைத்தொகுதி

அலுவலக மீளமைப்பு

புதிய மைதானம்

விசேட தேவை மாணவர் வகுப்பறை



செயல் திறன் கொண்ட அதிபர்

திருமதி.ஜெ.சிறிஸ்கந்தராசா
(பழைய மாணவி)

அதிபர் அன்ரனிற்றா மார்க் அவர்களுடன் குறுகிய கால அறிமுகமும் பழக்கமும் தான் எனக்கு உள்ளது. 2015 ஏப்ரல் முதல் இன்று வரை ஏறத்தாழ மூன்று வருடங்கள் பழகியிருந்தாலும் அவருடன் ஆழமான உறவு எனக்குண்டு. பாடசாலையின் பழைய மாணவி என்ற ரீதியில் பாடசாலை அபிவிருத்திச் சபை செயற்குழு உறுப்பினராக கடந்த காலத்தில் அடிக்கடி அதிபருடன் தொடர்பில் இருந்துள்ளேன்.

2015ல் முதற்சந்திப்பின் போதே மிகவும் அன்பான அறிமுகப்படுத்தலும், உபசரிப்பும் அதிபர வர்களில் ஒரு நல்ல அபிப்பிராயத்தை எனக்குள் ஏற்படுத்தியிருந்தது. தொடர்ந்து முன்னாள் அதிபர் அருட்சகோ.தயாநாயகி செபமாலை அவர்களின் சேவை நயப்பு வைபவத்தின் போது உரையாற்றிய கல்வித் திணைக்கள அதிகாரிகள், அதிபர் அன்ரனிற்றா மார்க் அவர்களையும் வரவேற்று, அவர் பணியாற்றிய சேவை நிலையங்களில் துடிதுடிப்புடனும் அர்ப்பணிப்புடனும் ஆற்றிய அவரது பணிகளைப்பற்றிக் குறிப்பிட்ட போது அவரது செயற்திறன் பற்றி உயர்வான ஒரு மனப்பதிவு என் னிடம் ஏற்பட்டது.

இறை பணியாளர்கள் ஒவ்வொருவரும் இறை அழைத்தல் மூலம் ஆசிர்வதிக்கப் பட்டவர்கள். எமது பாடசாலை திருக்குடும்ப சகோதரிகளால் கட்டியெழுப்பப்பட்ட நீண்ட வரலாற்றைக் கொண்டது. திருக்குடும்ப பாரம்பரியங்களையும், அர்ப்பணிப்புக்களையும் கல்வியுடன் மாணவர் களிடையே விதைத்து வளர்த்தவர்கள் எமது அதிபர்கள். இது வரை ஒவ்வொரு அருட்சகோதரிகளும் காலத்தின் தேவையை நிறைவு செய்யத் தக்க வல்லபவம் கொண்டவர்களாக இறை சித்தத்துடன் தெரிவு செய்யப்பட்டமை அவர்களது பணிச்சிறப்பில் வெளிப்பட்டுள்ளமை கண்கூடு.

அந்த வகையிலே அருட்சகோ.அன்ரனிற்றா மார்க் அவர்கள் பதவியேற்றவுடன் பாடசாலை யின் அவசர தேவைகள் எவை என்பதை இனம் கண்டு தனது குறுகிய பணிக்காலத்தில் அவற்றை நிறைவு செய்வதில் முழுமுனைப்புடன் செயற்பட்டவர். கல்வி அடைவு மட்டத்தை உயர்த்துதல், பாடசாலைக்கான விளையாட்டு மைதானத்தைப் பூரணப்படுத்தி மைதானத்தை மாணவர்களின் பயன்பாட்டுக்கு உட்படுத்துதல், அத்துடன் பாடசாலையின் தற்போதைய தேவையாக விளங்கிய பொது மண்டபம் (Auditio) வகுப்பறைகள் ஆகிய பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுத்தல், இன்னும் ஆசிரியர் விடுதி ஒன்றை அமைத்தல் போன்றவற்றை செயற்படுத்துவதில் ஓய்வின்றி உழைத்து வெற்றி கண்டவர்.

இருப்பினும் இத்திட்டங்கள் நிறைவு செய்வதில் அதிபர் அவர்கள் பெற்றுக் கொண்ட கசப்பான அனுபவங்களும், துன்பங்களும் அவரை வருத்திய போதிலும் தன்னைப்புடமிடுவதற்கு இறைவன் தந்த சோதனைகள் என அவற்றை ஏற்றுக் கொண்டு தன்னைச் சுதாரித்துக் கொண்டு செயலாற்றிய திறமை கொண்டவர்.

பாடசாலையின் விளையாட்டு மைானத்துக்கான ஒரு தொகுதி நிலம் ஏற்கனவே கொள் வனவு செய்யப்பட்ட நிலையில் மீதி நிலத்தை கொள்வனவு செய்வதற்காக அதிபர் முயற்சிகள் மேற் கொண்ட போது அதிபர் எதிர் நோக்கிய சவால்களும், அவமானங்களும் அவரைச் சோர்ந்து போகச் செய்யவில்லை. மனம் கலங்கிய போதிலும் தன்னைசத் தேற்றி வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவர்களுடன் தொடர்பு கொண்டு கனடா, லண்டன் ஆகிய நாடுகளுக்கு சென்று அங்குள்ள பழைய மாணவிகளைச் சந்தித்து பாடசாலையில் நிலைப்பாடுகளை விளக்கி அவர்களின் துணை யுடன் மைதானத்தின் மீதிப்பகுதியினையும் கொள்வனவு செய்த சாதனையாளர். அத்துடன் நில்லாது இவ்வாண்டின் விளையாட்டுப் போட்டியினை அந்த மைதானத்தில் நடாத்துவதற்கு முழுமூச்சுடன் செயற்பட்டு மைதான வேலைகளை பூர்த்தி செய்து விளையாட்டுப் போட்டியை நடாத்தி வெற்றி கண்டவர். தனது ஒவ்வொரு செயற்பாட்டின் போதும் இறைவனின் பாதத்தை இறுகப் பற்றி விசுவாசத்தால் உறுதி கண்டவர். இவரது முயற்சிகளின் போதெல்லாம் கையேந்த வேண்டிய வர்களிடம் கையேந்தியும், கடும் சொற்கள் பலவற்றைத் தாங்கியும் தான் கொண்ட இலட்சியத்தை முடிப்பதில் பின் வாங்காது வெற்றி கொள்ளும் இந்த மனத் துணிவு இவருக்கு எவ்வாறு கிடைத்தி ருக்கும் என்று சிந்தித்த எனக்கு ஒரு விடை கிடைத்தது.

கடந்த வருடம் யாழ். மாகாண திருக்குடும்ப சகோதரிகளால் வெளியிடப்பட்ட "ஆசிநிறைந்த அனுபவப் பதிவுகள்" எனும் நூலில் சகோ அன்ரனிற்றா மார்க் அவர்களின் பதிவுகளை வாசித்த போது தான் புரிந்தது எதையும் கடவுளின் பாதத்தில் ஒப்படைத்து இறை நம்பிக்கையுடன் தனது குறிக்கோளை நிறைவு செய்வதில் அனுபவத்தால் புடமிடப்பட்டவர் என்பது.

பாடசாலை என்பது பலரது கூட்டு அமைப்பாகும். மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் கல்வித் திணைக்கள அதிகாரிகள் என பல்வேறுபட்ட பண்புடையோரின் கூட்டுச் சேர்மானமாக செயற்படுமிடத்து பல்வேறுபட்ட முரண்பாடுகளும் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. முரண்பாடுகள் குழுவடிவம் பெறுமாயின் அதைத் தீர்ப்பதிலும் சிக்கல்கள் பல ஏற்படத்தான் செய்யும். இவ் வேளையில் பாடசாலையின் முகாமையாளர் என்ற ரீதியில் அதிபரின் பொறுப்பும் கடினமாகி விடும் சூழ்நிலை உருவாகிவிடுகின்றது. இத்தகைய பல நெருக்கடிகளை அதிபர் அன்ரனிற்றா மார்க் அவர்கள் எதிர் நோக்க நேரிட்டதுண்டு. இவ் வேளைகளில் மனம் சோர்ந்து போவதும், பின்னர் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு,

"போற்று வளர் போற்றட்டும் புழுதி வாரி
தூற்றுவார் தூற்றட்டும்" என

தூய்மையான தனது முயற்சிகளைக் கைவிடாமல் தொடர்ந்து தனது பணிகளை முன்னெ டுத்துச் சென்று நிறைவு செய்த அதிபரின் மனத்துணிவும், செயற்திறனும் போற்றத் தக்கதாகும். பொதுவாக பாடசாலையின் நோக்கக் கூறுகளில் முதன்மையானது தரமான மாணவர்களை

சமூகத்துக்கு வெளியீடு செய்வதாகும். அந்த வகையிலே கல்வியிலும் ஒழுக்கத்திலும் தரமான மாணவர்களை வெளியீடு செய்வதில் இவரும் சளைத்தவராக இல்லை.

2016,2017 ம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுப்பரீட்சைகளின் முடிவுகள் இக்கூற்றினை வெளிப்படுத்தி நிற்கின்றது. சிறந்த பெறு பேறுகளைப் பெறுவதிலும் மாணவர் ஒழுக்கம் சார்ந்த விடயங்களிலும் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகின்றது. அத் தருணங்கள் தற்போது மாணவருக்கு கசப்பாக இருக்கலாம். நிச்சயம் நாளைக்கு அவர்கள் பொறுப்பான ஒரு நிலைக்கு வரும் போது அதன் பலனை உணர்ந்தே ஆவார்கள்.

எமது பாடசாலை நீண்ட காலமாக பல்துறைகளிலும் வளர்ச்சிகண்டு விளங்கும் வரலாற்றைக் கொண்டது. வருடாந்தம் பல விழாக்களையும், வைபவங்களையும் சிறப்பாகவும் தடையின்றியும் நடாத்தி வருகின்றது. தற்போது பாடசாலையில் உள்ள மாணவர் மொத்தத் தொகைக்கு முக்கியமான நிகழ்வுகளில் மொத்த மாணவரையும் உள்ளடக்கக் கூடிய ஒரு மண்டபம் மிகவும் அவசியம் என்பது நீண்ட காலமாக உணரப்பட்டு வந்துள்ளது. ஒவ்வொரு நிகழ்வின் போதும் பிரதான மண்டபத்தைப் பயன்படுத்தும் தருணங்களில் அங்குள்ள வகுப்பறைகள் 2,3 தினங்களுக்கு செயல்பட முடியாத நிலை உருவாகும். மண்டபத்தை ஒழுங்குபடுத்தல், ஆசனங் களை அடுக்குதல் மீண்டும் பழைய நிலைக்கு மாற்றியமைத்தல் போன்ற செயற்பாடுகளுடன் வகுப்பறைத் தடுப்புக்களை அகற்றுதல் மீள ஒழுங்கமைத்தல் என பாடசாலை நிர்வாகத்தினரும் மாணவர்களும் கடும் சிரமத்திற்கு உள்ளாகும் நிலையே காணப்பட்டு வருகின்றது.

எனவே பாடசாலை வளாகத்தில் இத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஒரு தரமான ஒன்றுகூடல் மண்டபமும், வகுப்பறைகளுக்குமான ஒரு மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றை தான் இப்பாடசாலைக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் முனைப்புடன் செயற்பட்டு இன்று வெற்றியும் கண்டவர் அதிபர். எமது பாடசாலை தேசிய பாடசாலையாக இருப்பதனால் கட்டிடத்துக்கான அனுமதியும் அனுசரனையும் கொழும்பில் உள்ள கல்வி அமைச்சினூடாகவே பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் தனது மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது கருமமே கண்ணாக அடிக்கடி தலைநகருக்கு பயணித்து கல்வி அமைச்சின் பாடசாலை வேலைகளுக்கான பணிப்பாளருக்கு ஓய்வின்றிக் கொடுத்த வேண்டுதல் காரணமாக அதற்கான அனுமதியினைப் பெற்றுக் கொண்டதில் இவர் ஒரு "அலட்டுகின்ற சிநேகிதன்" இன்று இக்கட்டிடம் பூர்த்தியடையும் நிலையில் உயர்ந்து நிற்கின்ற தென்றால் அதற்கு அதிபர் கொடுத்து வரும் அழுத்தங்களே காரணம் எனலாம்.

கட்டிடம் முழுமையடையும் போது அதிபர் பணியில் இல்லாதிருக்கலாம். ஆனால் அதன் பயனைக் காலம் காலமாக அனுபவிக்கப் போகும் இப் பாடசாலை அதிபரவர்களின் பெயரை நன்றியுடன் பறை சாற்றி நிற்கும் என்பதில் மறுப்பேதும் இல்லை.

பாடசாலையில் இவர் அதிபர் அலுவலகத்தை சகல வசதிகளுடனும் அமைப்பதற்கும் அதனு டன் கூடிய மற்றுமொரு கட்டிடத்தொகுதியை அமைப்பதற்கும் கடும் முயற்சியை மேற் கொண்டு அதற்கான அனுமதியையும் கல்வி அமைச்சிடம் பெற்றுக் கொண்ட நிலையில் அதற்கான கால

அவகாசம் இன்மையால் தொடர்ந்து வரும் அதிபரிடம் அப் பணியைத் தொடர்வதற்கு விட்டுச் செல்கின்றார்.

இருப்பினும் மிகவும் நீண்டகாலக் கட்டிடத்துடன் அமைந்துள்ள தற்போதைய அதிபர் அலுவலகத்தில் காணப்பட்ட பாதிப்பொன்றினை அவசரமாக திருத்தியமைக்க வேண்டிய நிலையில் வேலை தொடங்கிய போது அப்பாதிப்பு பல பகுதிகளிலும் பரவியிருந்தமை கண்டு தூரநோக்குடன் செயற்பட்டு அலுவலகம் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவூட்டியவர்.

இன்று அவர் தனது கல்விக்கான பணியில் இருந்து ஓய்வு பெறும் கட்டத்தை அடைந்துள்ள போதிலும் தொடர்ந்து இவர் ஆன்மீகப் பணிக்கும், சமூகப் பணிக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் இவரை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. அழைக்கும் பணி எதற்கும் " இதோ வருகின்றேன்" என உவப்புடன் முன் செல்லும் துடிப்புக் கொண்ட அதிபர் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் தொடரும் பணிகளில் மகிழ்வுடனும், மனநிறைவுடனும் ஈடுபடுவதற்கு ஏற்ற உடல், உள ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் வல்லதேவன் அருள்பாலிக்க வேண்டுமென்று இவரை வாழ்த்துகின்றேன்.

"வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
என்றும் இடும்பை இல"
"இறைவன் ஒருவனுக்கே மகிமை"

திட்டங்கள் பல தந்திட்ட எம் அதிபர்

திருமதி.ஆ ஜோண் பிறிற்றோ
பகுதித்தலைவர் (தரம் 12, 13)
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

யாழ்/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து வளர்ந்து கொண்டிருக்கும் வேளையிலே எமது பாடசாலை கண்டெடுத்த அற்புத கன்னிகை எமது பாடசாலை அதிபர் அருட்சகோதரி அன்ரனிற்றா மாற்கு ஆவார். திருக்குடும்ப கன்னியர் மடம் கண்டெடுத்த பன்னிரண்டாவது முத்து ஆவார்.

பாடசாலைக்கு அடியெடுத்து வைத்த ஆரம்பகாலத்தில் அமைதியாக தன்னைச் சூழவுள்ள ஒவ்வொரு விடயங்களையும் தன் ஐம்புலன்களையும் அடக்கி அவதானித்தார். அதன் பிறகு பாடசாலையின் வளர்ச்சிக்கு தடையாய் அமைந்த ஒவ்வொரு விடயங்களையும் சீர்படுத்துவதற்கான தன் திட்டங்களை அமுல்படுத்தத் தொடங்கினார். காலையில் எழுந்தது முதல் பாடசாலைக்குள் அடியெடுத்து வைக்கும் வரை ஆசிரியர்களும் மாணவர்களும் பரபரப்பாக இருப்பது வழமை இதன் காரணமாக இறை ஆசீர் பெறுவதென்பது எம்மில் பலருக்கு வெறும் வாய் மொழி வார்த்தையாகவே அமைந்து விடுகிறது. இந்நிலையில் மாற்றத்தைக் கொண்டு வரும் வகையில் தனியாகச் செபிப்ப தற்கு உரிய வழிமுறைகளை அமைத்துத் தந்தார். காலைப் பிரார்த்தனைக்கு முன்பாக 10 நிமிடங்க ளை தனிச்செபத்துக்கு என்று ஒதுக்கி ஆசிரியர் மாணவர்களின் அன்றைய நாளுக்குரிய இறை ஆசீரையும் பரபரப்புக்களிற்கு மத்தியில் ஓர் அமைதியையும் ஏற்படுத்தித் தந்தார். "ஐந்தில் வளை யாதது ஐம்பதில் வளையாது" என்பது சான்றோர் வாக்கு. அதற் கேற்ற வகையில் எமது பாடசாலையின் ஆரம்பக்கல்வி மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கான தன்' அடுத்த திட்டத்தை வெளியிடலானார்.

ஆரம்பக்கல்வியை நிறைவு செய்து விட்டு இடைநிலைக் கல்வியை பெறவரும் மாண வர்கள் பலர் காலைப் பிரார்த்தனை வேளையில் பக்தியாக நிற்பதில்லை. இதற்கு காரணம் அவர்கள் செபித்துப் பழகாமையே ஆகும். சரியாக அடித்தளமிடப்படாத எந்தவொரு கட்டடமும் உறுதி பெறாது என்பது யாவரும் அறிந்ததே. அதற்கேற்ப மாணவர்களும் சிறுவயதில் பழகுகின்ற ஒவ்வொரு பழக்கங்களும் அவர்களின் இறுதிக்காலம் வரை துணைபுரியும் அந்த வகையிலே ஆரம்பப்பிரிவு மாணவர்களையும் காலைப்பிரார்த்தனைக்காக அழைத்து செபிப்பதற்குப் பழக்கினார். இது மாணவர் களின் ஆன்மீக வளர்ச்சிக்கு அருமருந்தாகியது.

2015ம் ஆண்டிலே அனைத்து மக்களையும் சோகத்தில் ஆழ்த்திய ஒருநிகழ்வு வித்தியா என்ற மாணவியின் படுகொலை. இதற்கான போராட்டங்கள் புரட்சியாய் வெடிக்க மாணவர்களின் பாடசாலை வரவு சரியாக மதிப்பிடாமை இது போன்ற சம்பவங்களிற்கு காரணம் என்ற கருத்து பரவ லாகியது. அதற்குப் பாடசாலை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பலராலும்

வலியுறுத்தப்பட்டது. இதற்குத் தீர்வுகாணும் முகமாக மாணவர்கள் தினமும் பாடசாலைக்கு சமூகம் தரவேண்டும். சமூகமளிக்காத மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலைக்கு வருகை தந்து காரணத்தை கூறி பதிவேட்டில் பதிய வேண்டும் என்று புதிய திட்டத்தைக் கூறினார். ஆரம்பத்தில் இது பலராலும் நிராகரிக்கப்பட்டு, விமர்சிக்கப்பட்ட போதும் அதற்காக சிறிதும் தளராமல் உறுதியாய் இருந்தார். காலப்போக்கில் மாணவர்களின் வரவு வீதம் வளர்ச்சி பெற்றதோடு அவரின் முயற்சியும் வெற்றி கண்டது.

"நேரம் பொன்னானது" என்பதை அனைவரும் உய்துணர வேண்டும். பாடசாலையிலே கற்றல் கற்பித்தல் செயற்பாடு எவ்வித தடையுமின்றி தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்பது அதிபரின் முக்கிய நோக்கம். அதற்கேற்ற வகையிலே பாடங்களுக்கு ஆசிரியர்கள் ஒழுங்காகச் செல்ல வேண்டும். ஆசிரியர் பாடசாலைக்கு சமூகம் தராத வேளையில் பதில் பாட ஆசிரியர்களை அனுப்புதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து நடத்தினார். காலைப்பிரார்த்தனை, பொது அறிவு வேளை, இடைவேளையின் பின் என அனைத்து நேரங்களிலும் ஆசிரியர்கள் மாணவர் களுடன் சென்று கற்றல்கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள் நேரத்தை வீணாக்காமல் கற்பதற்குரிய சந்தர்ப்பம் அமைந்தது.

அருட்சகோதரி அன்ரனிற்றா மாற்கு அவர்கள் எமது பாடசாலைக்கு ஆற்றிய பணிகளில் மிகவும் முக்கியமானது புதிய கட்டிட நிர்மாணம் ஆகும். வகுப்பறைகள், பாடசாலையின் விழாக்க ளைப் நடாத்தும் மேடை அமைப்பு போன்றவற்றை போதுமானதாக இல்லாமை ஒரு பிரச்சனை யாகவே கருதப்பட்டது. இதற்கு தீர்வு காண்பதற்காக பல வகையிலே முயற்சிகள் மேற் கொண்டார். பலவாறு முயற்சி செய்து பல நிறுவனங்களின் உதவி கொண்டு புதிய கட்டடத்தை நிர்மாணிக்கும் தன் முயற்சியில் வெற்றியும் கண்டார்.

பாடசாலையில் கல்வி நடவடிக்கைகளுடன் இணைந்து இணைபாடவிதான செயற்பா டுகளும் வளர்ச்சி பெற வேண்டும். இதற்கேற்ற வகையில் பாடசாலையின் மன்றங்களின் செயற் பாட்டை துரிதப்படுத்தினார். அந்த வகையில் 2017ம் ஆண்டில் தமிழ் மன்றமும் ஆங்கில மன்றமும் மாகாணம், மற்றும் தேசிய ரீதியில் முதலிடங்களைப் பெற்றுக் கொண்டன. அத்தோடு அதே ஆண்டிலே மாணவர் பாராளுமன்றம் உருவாக்கப்பட்டு அதன் அமைச்சுக்கள் மூலம் பல நலன்புரிச் சேவைகளை நடாத்தி வந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவருடைய காலத்தில் நடைபெற்ற மற்றுமோர் முக்கியநிகழ்வு பாடசாலைக்கு புதிய மைதானத்தைப் பெற்றுத் தந்தமையாகும். கடந்த காலங்களாக எமது சகோதரப் பாடசாலையாகிய யாழ்/ புனித பத்திரிசியார் கல்லூரியிடம் மைதானத்தை இரவல் வாங்கி நடாத்தி வந்த வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளை சொந்த மைதானத்தில் நடாத்த எடுத்த இவரு டைய முயற்சியில் பல தடைகள் வந்த போதும் அவற்றைத் தகர்த்தெறிந்து 2018ம் ஆண்டு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டப் போட்டிகளை பாடசாலையின் சொந்த மைதானத்திலேயே நடாத்தி முடித்தார்.

ஒரு பாடசாலையின் புகழை உயர்த்தும் விடயங்களில் ஒன்று பரீட்சைப் பெறுபேறுகள் ஆகும். அந்த வகையிலே க.பொ.த சாதாரணதரம் மற்றும் க.பொ.த உயர்தரம் கற்கும் மாணவர் களின் பரீட்சைப்பெறுபேறுகளை உயர்த்துவதற்காக இவர் மேற்கொண்ட செயற்பாடுகள் பல. மாணவர்களின் கற்கைக்காக மேலதிக வகுப்புக்களை நடாத்துதல், வெளியிலிருந்து ஆசிரியர்களை அழைத்துக்கற்பித்தல், கருத்தரங்குகளை நடத்துதல் போன்ற பல செயற்பாடுகளை வெற்றிகரமாக நடாத்தி முடித்தார்.

இவ்வாறு 2105ம் ஆண்டிலே தன் பணிக்கென அடியெடுத்து வைத்த ஆரம்ப காலம் முதல் தன் பணியின் இறுதிக்காலம் வரை தன்னுடைய ஒவ்வொரு நொடிப் பொழுதையும் பாடசாலையின் வளர்ச்சிக்காகவே மேற்கொண்டு வந்தார். அவருடைய ஒவ்வொரு திட்டங்களையும் நிறைவேற்றும் பொழுதில் ஏற்படும் ஒவ்வொரு பிரச்சினைகளையும் தடைகளையும் மனந்தளராமல் எதிர்கொண்டு தன் திட்டங்களை திட்டவட்டமாய் நிறைவேற்றினார். இவருடைய இந்த மனத்தைரியம் அனை வரும் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பண்பாகும்.

கனவுகள் சுமந்தவரே கலங்காமற் செல்லுங்கள்

திருமதி கவிதா சசிக்குமார்
ஆசிரியர்
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்

தெருவெங்கும் வெடி முழங்கத் திருவுடை தமிழரெல்லாம் அன்று ஏதிலிகளாய் அழுது நின்ற வேளை அரவணைத்து எம் உயிர் காத்து அவசரமாய் அனுப்பி வைத்த எங்கள் கிளாலி அன்னை பெற்றெடுத்த மங்கை நீங்கள். எழுதுமட்டுவாள் எனும் எழுச்சிமிகு ஊரில் மார்க்கநெறி வழுவாது வாழ்ந்திருந்தமாற்கு என்பாரை இருமனம் சேரும் திருமண பந்தத்தில் கண்ணியமாய்க் கரம் பற்றிய றோசம்மா அன்னையின் அழகிய திருவு தரத்தில் அன்றலர்ந்த தாமரையாய் 26.08.1958 இல் அவதரித்த மங்கை நீங்கள். மடிதவழ்ந்த மண்ணிலே கிளாலி றோமன் கத்தோலிக்கப் பள்ளியிலே கல்விக்கான அடித்தளம் அழகுறப்பெற்று நின்றீர். இடைநிலைக் கல்வியை உமக்களித்த பெருமையை ஈரிரண்டு பள்ளிகள் இணைந்தே பெறுகின்றன.

ஆறாம் தரத்தில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் அரவணைத்துக் கல்விதனைத் தந்துவிட தரமவை ஏழிலும் எட்டிலும் யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலம் அழகுறவே உமக்குக் கல்வியூட்டி நிற்க தரங்கள் ஒன்பதிலும் பத்திலும் அச்சுவேலி புனித திரேசா பெண்கள் தேனான கல்விதனை அமுதமாய் ஊட்டி வைக்க இடைநிலைக் கல்வியின் இறுதிப்படியான சாதா ரண தரம் கற்க தியாகத்தின் மாதாவாம் எங்கள் மரியன்னை மகிமை நிறை மடுத்தலத்தின் திருவூராம் மன்னார் மண் உம்மைப் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியின் வாயிலாய் வண்ணக்கரம் நீட்டி வாஞ்சையோடு அழைத்து உயர்நிலைக்கல்வியாம் உயர்தரம் கூட உமக்க ளித்த பெருமை மாதவம் செய்திட்ட மன்னார் மண்ணையே மகிழ் வோடு சாரும்.

சாதாரணதரமும் உயர்தரமும் ஒரே பள்ளியில் நீர் பண்புடனே பெற்றுயர்ந்தீர் அசையாத அடித்தளமும் செம்மையான இடைநிலையும் சிதையாத உயர்தரமும் உறுதியாய்த் துணை நிற்க இலங்கையின் சிரமெனவே கல்விச் செருக்கோடு நிமிர்ந்திருக்கும் எங்கள் யாழ் மண்ணின் உயர்கல்விப் பீடமாம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தன்னுள் உள்நுழையும் பேறு பெற்றீர்.

கலைமாணிப்பட்டம் போதாதென்று கூடவே டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்று நீங்கள் நிமிர்ந்து நின்றீர். தொடர்ந்து ஆசிரியர் பணிக்கான அடித்தளத்தை மடுமாதா உறையும் மாண்புமிகு மன்னார் மண்ணின் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தாறில் 12ஆம் மாதம் 26ஆம் திகதியன்று உயிர்ப்புடன் இட்டு நின்றீர். வருடங்கள் 4 கடந்து 4 திங்களும் நாட்கள் நான்கும் நல்லினிய பணியாற்றி மகிழ்ந்து 1991இல் சித்திரைத்திங்கள் 30 ஆம் நாள் சவேரியார் பெண்கள் கல்லூரியின் கல்விச் சமூகம் கலங்கி நிற்க மன்னார் மண்ணுக்கு விடை கொடுத்தீர். அதே ஆண்டு வைகாசித் திங்கள் முதலாம் நாளன்று கற்றவர் பூமியாம் கண்ணனைய

யாழ் மண்ணின் கன்னியர் மடம் மகாவித்தியாலயம் கனிவான உம் பணிக்குக் களம் தந்து நின்றது. 1995 இல் புரட்டாதித் திங்கள் 14ஆம் நாள் வரை நான்கு வருடங்கள் கடந்து ஈரிரண்டு திங்களோடு 13 நாட்களும் பண்புடனே சேவையாற்றி நிறைவு கண்டீர் தொடர்ந்து 1995 இல் புரட்டாதித் திங்கள் 15ஆம் நாள் முதல் 1998 இல் மார்கழித்திங்கள் 31ஆம் நாள் வரை வருடங்கள் 3 தாண்டி திங்கள் மூன்றொடு நாட்கள் 16 உம் பாஷையூர் புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலை சேவைத் திருமகள் உம் சேவைத்தளமானது தொடர்ந்திட்ட காலமதில் 1999 இல் தைத்திங்கள் 1ஆம் நாள் முதல் 1999 மார்கழித் திங்கள் 31 ஆம் நாள்வரை 11 திங்கள் தாண்டி 30 நாட்களும் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்கப் பள்ளிதனில் ஆசிரியப்பணி அழகு சேர்த்தீர். பின்னர் தளராத முயற்சியால் ஆசிரியப் பணியில் விஸ்வரூப வளர்ச்சி கண்டு உப அதிபராய் நீர் பண்புடனே பரிணமித்தீர். 2000 ஆம் ஆண்டதனில் தைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் அதே ஆண்டு தைத்திங்கள் 25 ஆம் நாள் வரை நாலாறு நாட்களாய் உப அதிபர் பணியேற்று நம் தேசத்தின் ஓர் முனையாம் பருத்தித்துறை யதன் புனித தோமையர் பெண்கள் பள்ளியிலே பாங்குடனே பணி செய்தீர். சற்றேனும் தளர்வறியா உங்கள் உன்னதப் பணியின் உத்வேகம் கண்டு இறையவன் திருவருளால் அதிபர் சேவையையும் வென்று நின்ற மங்கை நீங்கள். உப அதிபராய் பணி செய்த அதே பள்ளியிலே அதிபராய் உமைக்காணும் முதல்வரம் பெற்றது.

2001 ஆம் ஆண்டதனில் தைத்திங்கள் 26அம் நாள் முதல் 2007ஆம் ஆண்டதனில் மாசித்திங்கள் 12 ஆம் நாள் வரை ஈர் மூன்று ஆண்டுகள் தாண்டிப் 16 நாட்களாய்ச் சீர்மைத்திறன் கொண்ட செம்மையான அதிபராய்ச் சிறப்புடனே பணி செய்தீர் அப்பெண்கள் பள்ளிச் சமூகத்தின் விழிகளில் நீர் பனிக்கச் சேவைத் தளம் மாறி நீர் சென்றீர் நிழல் யுத்தத்தின் நிஜமான வடுக்களை நீள் தூரம் சுமந்ததால் துயருற்றிருக்கும் மண்ணுக்கு உம் சேவை நிச்சயமாய்த் தேவையென்று கல்விச் சமூகம் உணர்ந்ததால் தானோ கிளிநொச்சி மண்ணுக்கு அளப்பெரும் சேவையாற்ற இறைவன் ஆசியோடு - உம்மை அன்போடு அழைத்து நின்றது. 2007ஆம் ஆண்டதனில் மாசித்திங்கள் 13ஆம் நாள் முதல் 2015ஆம் ஆண்டின் சித்திரைத் திங்கள் 19 ஆம் நாள் வரை ஈர்நான்கு ஆண்டுகள் தாண்டி மாதங்கள் இரண்டொரு ஈர்மூன்று நாட்களாய்ப் புனித பாத்திமா றோமன் கத்தோலிக்கப் பெண்கள் பள்ளியிலே அதிப ரெனும் அரும்பணியை இதய சுத்தியுடன் ஆற்றி நின்றீர். வலிகளின் வலிமையால் வாடிப்போயிருந்த எங்கள் கிளி நொச்சி மாந்தரெல்லாம் வான் மழை கண்ட பயிர்களாய் மீண்டெழுந்து நிமிர்ந்த கதை சத்தியமாய்ச் சொல்கிறோம் நீவில் சொல்லி நாங்கள் அறிந்ததல்ல உம் சேவை பெற்றவர் இதயத்தால் இயம்பி நின்ற உண்மை வரிகள் இவை.

தொடர்ந்த .... 2015 இல் கன்னியர் மடத்தில் கால்பதித்த அதே தடங்கள் இரு பள்ளி களினதும் இணைவிற்குப் பின்னர் வருடங்கள் 19 கடந்து மாதங்கள் ஏழொரு ஈர்மூன்று நாட்களின் பின் மங்காத புகழ் கொண்ட மதிப்பார்ந்த யாழ் மண்ணின் புகழ் பெற்ற தேசியப் பள்ளிகளில் ஒன்றெனவே ஜொலித்திடும் திருக் குடும்ப கன்னியர் மடம் தன்னில் அதிபர் என்ற அர்ப் பணிப்புடன் மீண்டும் பதிந்த கதை நாமறிவோம் 2015 ஆம் ஆண்டதனில் சித்திரைத் திங்கள் 20 ஆம் நாள் முதல் 2018 ஆம் ஆண்டின் ஆவணித்திங்கள் 26 ஆம் நாள் வரை ஆண்டுகள் மூன்று கடந்து மாதங்கள் நான்கொரு ஈர்மூன்று நாட்களாய் சவால்கள் அத்தனையும் இலாவக மாய்ச் சரிந்து விழ அதிபர் எனும் அரும்பணியை அற்புதமாய் ஆற்றி நின்றீர். ஒழுக்கமும் கல்வியுமே கன்னியரின் கண்களென்று கண்ணியமாய் நீங்கள் வழிகாட்டி நின்றீர்கள். மாணவரின் வரவை முற்று முழு

தாய்ச்சீர் செய்யும் தளராத முயற்சியில் தடைகள் தாண்டியும் வெற்றிகள் கொண்டீர்.

மாணவரை மட்டுமன்றி ஆசிரியப் பணியினரைக் கூடக் காலை நெரிசலில் அவதியுற்று அல்லற்படாமல் அமைதியாய்ப் பள்ளிக்கு ஆர்வமுடன் வரச்செய்தீர். பெற்றோர் பாதுகாவலர் கொஞ்சம் சிரமங்கள் சுமந்தாலும் ஆபத்துக்கள் தவிர்த்திட அரிதான வழிதான் இதுவென்று அவர்கள் என்ன அறியாமலா போவார்கள்? ஆசிரியப் பணியினரின் இன்பத்தில் இணைந்து நீங்கள் இன்முகம் காட்டி நின்றீர். துன்பங்கள் சூழ்ந்த வேளை தொலைதூரம் என்றாலும் தவறாமல் பங்கேற்று ஆறு தல்கள் தந்து நின்றீர். இயற்கை அனர்த்தங்களால் எங்கள் இலங்கையர் இடர் சுமந்து நின்ற வேளை உதவும் வகையறிந்து நீங்களும் உதவி நின்று எமக்கும் வாய்ப்பளித்தீர். ஆசிரியப் பணியினருக்கும் மாணவத் தலைவிகளும் பரந்தளவில் சிந்திக்கப் பக்குவமாய் எம்மைச் சுற்றுலாவும் அழைத்துச் சென்றீர். அம்பாந்தோட்டை பற்றி ஆர்வமாய் அறியச் செய்தீர். காலிக்கும் அழைத்துச் சென்று கதைகள் பல பேசி நின்றீர். இனம், மதம், மொழியென்று பேதங்கள் நோக்காமல் கதிர்காமக் கந்தனையும் கண்குளிரக் காட்டி நின்றீர். நான்கு மணிக்கெல்லாம் எம்மைத் துயிலெழுப்பி அவசரமாய்த் தயார்ப்படுத்தி இறைதரிசனம் முடித்த பின்பே உணவென்று சொல்லி உத்தரவும் இட்டு வைத்தீர் பேருந்தில் தூங்கியோரை வீரமாய் எழவைக்கப் பற்பசை கொண்டு மீசைகளும் வைத்து குழந்தையாய்க் கூட எங்களுக்காய் மாறி நின்றீர். மாணவர் மனம் ஒருமைப்பட யோகா பயிலவும் வழி செய்தீர் ஆசிரியப் பணியை நாம் செவ்விய பணி செய்யத் தேவையான பயிற்சிகள் அத்தனையும் பெற்றுவிட ஊக்கியாய் மாறி உறுதுணை நின்றீர் 2015ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை 1.9 மில்லியன் ரூபா செலவில் பௌதீக வளங்களைத் திருத்தம் செய்து எங்கள் பள்ளிக்கு வளம் சேர்த்தீர். அது மட்டுமா? 2016ஆம் ஆண்டதனில் மில்லியன்கள் இரண்டைச் செலவு செய்து தூய்மையான கழிவறை ஒன்றை நவீனமான வசதிகளுடன் நலமாய் அமைத்து நின்றீர். 2017 ஆம் ஆண்டதனில் தேசிய ரீதியிலும் சளைக்காமல் என்றும் சாதனைகள் புரிந்து நிற்கும் எங்கள் கன்னியர்க்காய்த் தயாநாயகி அதிபரின் ஆரம்ப முயற்சியை அடியொற்றிப் புதிய மைதானம் ஒன்றிற்கான நிலத்தினைக் கூடக் கொள்வனவு செய்து நின்றீர். அதன் தொடர்ச்சியாய் 2018 இல் ஐந்து இலட்சம் ரூபா செலவில் அதற்கான மதில் அமைத்து எங்கள் பள்ளியின் மெய் வன்மைப் போட்டிகள் இரண் டையும் எமக்கான மைதானம் தன்னில் இறுமாப்புடன் நடாத்தி வென்றீர். இத்தனையும் மட்டுமல்ல இன்னும் உண்டு 2017 ஆம் ஆண்டுமுதல் 2018ஆம் ஆண்டு வரையான வேலைகளிற்கான திட்டமிடலில் 3 மாடிக் கட்டடம் மட்டுமல்ல ஆசிரியர் விடுதி அமைக்கும் பணிக ளெல்லாம் அதிவேகமாய் இன்று நடை பெற்றுக் கொண்டி ருக்க மெய்வருத்தம் பாராது களைப் பேதும் நோக்காமல் கருத்துடனே பணி செய்தீர்.

அத்தோடு நில்லாமல் 2018ஆம் ஆண்டின் வேலைத்திட்டங்களில் ஒன்றாய் விசேடகல்வி அலகின் நவீன கழிவறை அமைப்பதற்கும் வகுப்பறை வசதிகள் தம்மை மேம்படுத்தி நிற்பதற்கும் தேவையான நிதிவளம் அத்தனையும் உரிய விதத்திற் பெற்று நின்று உயர்வான பணி செய்தீர். உம் நிலை பாராது எம்நிலை உயர்த்திட எத்தனை தடவைகள் கொழும்பிற்குச் சென்று நேரிய வழி நின்று அத்தனை வசதிகளும் அற்புதமாய்ப் பெற்று வென்று எங்கள் பள்ளிக்கு வளம் சேர்த்தீர்.

அத்தோடு நில்லாமல், கடல் கடந்து கனடா மண் சென்று எலிவளை ஆனாலும் தனிவளை யாய் எமக்கே எமக்கான தனியான மைதானம் எங்கள் மங்கையர்க்காய்ப் பழைய மாணவியர்,

பெற்றோரின் பேரு தவிதனை ஏற்று மாண்புடனே பெற்று வந்து வெற்றி வாகை சூடி நின்றீர்.

மாணவர் மட்டுமல்ல ஆசிரியப் பணியினர் நாம் கூட அவசரத்தில் ஏதேனும் தவறுகள் புரிந்து விட்டால். அன்னையாய் இருந்து அன்பாய்க் கண்டித்துக் கடமை உணர்ச்சி தன்னைக் கண்ணியமாய்க் கற்றுத் தந்தீர் கோழி மிதித்து குஞ்சுகள் ஒரு போதும் முடமாகிப் போகாதம்மா. இது உலகமே அறிந்த பேருண்மை அப்படியிருக்க உங்கள் பிள்ளைகள் நாம் அதனை உணராமல் இருப் போமா இத்தனை உணர்வகளும் நீர்கண்டு அத்தனை சிறப்புக்களும் எங்கள் பள்ளிக்காய்ப் பெற்றுத் தந்தும் வீண் பெருமை பேசாமல் எளிமையாய் வாழ்ந்திருந்தீர் அகவை அறுபதில் உங்கள் கல்விச் சேவை நிறைவு பெறும் இன்றைய நாளதனில் உம் சேவை தன்னை உளமாரப் போற்றுகின்றோம். அகவை அறுபதிலும் இளமைத் துடிப்போடு அரங்கிலே வீற்றிருக்கும் அன்பான அன்னையே! திருக்குடும்பத்தின் சார்பில் நீங்கள் பிறந்த இப்பொன்னாளில் பாமாலை கொண்டு வாழ்த்துக்கள் சூடுகின்றோம். ஓய்விலும் ஓய்வின்றி இறைபணிக்குத் தயாராகும் உம்மோடு என்றும் ஆயுள்ரேகை இணைந்து வரத் தடைகளைத் தாண்டிச் சென்று இறைபணியிலும் நீங்கள் இமயத்தில் ஏறி நின்று சிகரங்கள் தொட்டு விட இறையரசின் அருளும்மை என்றென்றும் நிறைத்து விடத் திருக்குடும்பத்தின் சார்பில் இதய சுத்தியுடன் வாழ்த்துமலர் தூவுகின்றோம். இது எந்நாளும் வாடாது. சேவைத்திறன் கொண்ட சீரிய நெஞ்ச மொன்றின் பிரிவுத் துயரமதன் வலிமையால் உம் சேவை பெற்றவர் எங்கள் இதயங்கள் கனக்கின்றன. கன்னியரின் கல்விக்காய்க் கனவுகள் சுமந்தவரே! கலங்காமற் செல்லுங்கள். அன்றாடம் நீர் சொல்லும் ஆன்மீகப் பாதை சொல்லி ஒழுக்கமும் கல்வியும் உன்ன தமாய்ப பேணி உதாரணமாய்ப் காட்டி எங்கள் கன்னியரை உயிர்ப்புள்ள பிள்ளைகளாய். எளிமை யே உருவாய் உண்மையின் வடிவாய்த் தடம் மாறாமல் வளர்த்தெடுத்து இந்தத் தரணிக்குக் கைய ளிக்க மனங்களிலே உறுதி கொண்டு ஆசிரியத் துவத்தின் புனிதம் அழியாமற்பேணி அறிவெனும் அமுதை அற்பு தமாய் அதன்வழி எதிர்கால இலங்கையில் ஒளி தீபம் ஏற்றுவோம்.

உறவின் நினைவுகள்

திருமதி சூரியா.அல்பின்
ஆரம்பப்பிரிவுப் பகுதித் தலைவி

இறை நினைவில் வாழ்பவரே
இனிய குணம் கொண்டவரே – உம்
அதியர் சேவையோ அற்புதம்
ஒழுக்கம் பேணி உன்னதமாய் ஊட்டிடும்
கல்வியொன்று மாத்திரம் நேசித்தீரே

துன்பங்கள் எம்மை சூழ்ந்த வேளை
ஆறுதல் சொல்லி என்றும் உறவை வளர்த்தீர்
தடுமாறிடாமல் ஆன்மீக வழி பற்றி
நாமெல்லாம் வளர உரமானீரே

நேரங்கள் தவறி நான் நின்று வேளை
நேரமாக எனை மாற்ற வழியொன்று கண்டீர்
கடிகார முன்னோடு நான் சேர்ந்து ஓட
பணியொன்று தந்து பக்குவமாக்கினீர்

கன்னியர் மடத்தில் பணி செய்தீரே
மூன்றாண்டு காலத்தில் முடியாது என்ற
வார்த்தைகள் ஏதும் நீர் சொன்னதில்லை
உறுதியாய் உண்மையாய் உழைத்தீரே

காணாத இடங்கள் பல காட்டி வைத்தீரே
இடருற்ற மாந்தருக்கு உதவும் வகை சொன்னீர்
மனித மாண்பு நேசித்து வாழும் மனநிலை
உறுதியாய் வெல்லுமிது சத்தியம்

நீர் கொண்ட முயற்சிகள் எம் பள்ளியில்
நிமிர்ந்தே இங்கே கட்டடங்களாய்
இனிவரும் பொழுதில் ஆன்மீக வழியிலே – உம்
பணி சிறந்திட வேண்டுவோம் – இறை
ஆசி சிறந்திட வேண்டுவோம்.

அதிபர் பற்றிய என் உள்ளப் பதிவுகள்

திருமதி.யசோதா பிறேம்குமார்
இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியை
(முன்னாள் ஆரம்பப்பிரிவுப் பகுதித் தலைவி)

20.04.2015 அன்று எமது பாடசாலையாம் யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலைக்கு அன்பான அதிபராய் அடியெடுத்து வைத்தவர் அருட்சகோதரியாம் எங்கள் அன்ரனிற்றா மாற்கு அவர்கள். அதிபராய் அவர் எங்கள் பள்ளியில் அடியெடுத்து வைக்க முன்னரே அவரைப் பற்றி நாம் அறிந்த உண்மைகளை உங்களுக்கும் கொஞ்சம் எடுத்துரைக்க நினைக்கின்றேன்.

அந்த வகையில் நீண்ட காலமாகத் தொடர்ந்த நிழல் யுத்ததின் பின்னர் மீண்டெழுந்து கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விட்டிடத் துடிக்கும் எங்கள் சமூகத்தில் இன்றைய மாணவரின் உண்மையான தேவை ஒழுக்கமான கல்வியே என்பதில் விடாப்பிடியாக நிற்பவர். நேர முகாமைத் துவத்தில் முன்னுதாரணமாகத் திகழ்பவர் பாடசாலையின் ஒழுக்க விழுமியங்களைக் கட்டிக் காப்பதில் கருத்துடன் செயற்படுபவர். பாடசாலையின் வளர்ச்சிக்காய் அல்லும் பகலும் அயராது உழைப்பவர். தொடர்ந்தும் தவறு செய்தால் பொறுமை இழந்து நிற்பார். எல்லோருக்கும் உதவி நிற்கும் இளகிய இதயம் படைத்தவர். நிர்வாகம் இயற்றுவதில் இணையிலாத் திறன் கொண்டவர். பொறுமையாய்ப் பேசிப் பிரச்சினைகள் தீர்ப்பவர். ஒட்டு மொத்தத்தில் இவருக்குக் கீழ் பணி புரிந்தால் உலகில் எவ்விடம் சென்றாலும் உன்ன தமாய் பணி செய்த பெருமை பெறலாம். இவையெல்லாம் எம் அதிபரைப் பற்றி நாம் அறிந்த உண்மைகள்.

அதிபராய் அவர் எமது பாடசாலையில் அடியெடுத்து வைத்த பின்னர் இந்த உண்மைகள் அனைத்தையும் அவரது ஒவ்வொரு செயல்களின் வாயிலாகவும் உருவமாய்க் கண்டோம். வேலைகள் அனைத்தையும் ஆசிரியர்களிட மும் மாணவர்களிடமும் ஒப்படைத்துவிட்டு ஒதுங்கி இருந்ததை நாங்கள் காணவில்லை. சிரமதானம் செய்யும் போது தானும் இணைந்து நிற்பார். ஏன், அடைத்து விட்ட வடிகாலைக் கூட தனது கரங்களால் சுத்தப்படுத்தியதை நாம் அறிவோம்.

மாணவரை மட்டுமல்ல ஆசிரியப் பணியினரைக் கூட தவறுகளிலிருந்து விடுபட்டு கடமை உணர்ச்சியை பேண வைப்பது இவருக்கே உரிய பேரழகு.

இவரது காலத்தில் நான் இப்பள்ளியிலே ஆசிரியையாகவும் ஆரம்பப் பிரிவின் பகுதித் தலைவியாகவும் பணி புரிந்தமையை என்னைப் பூரணமாக வளர்த்துக் கொள்ள எனக்குக் கிடைத்த அரியதோர் சந்தர்ப்பம் என்றே நான் மன தார நம்புகின்றேன். ஏனெனில் இவரது அன்றாடச் செயல்கள் ஒவ்வொன்றுமே ஏதோ ஒரு வகையில் எம்மை வழிப்படுத்தின. எனவே செம்மையாய்ச் சேவையாற்றி தற்போது ஓய்வு காண இருக்கின்ற எங்கள் அதிபர் அவர்களின் உன்னத மான சேவைக்குத் தலைசாய்த்து அவர் இன்புற்று வாழ எல்லோர்க்கும் பொதுவான இறையடியை இறைஞ்சி இதயம் திறந்து வாழ்த்தி நிற்கின்றேன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த அதிபர்

திருமதி துஷ்யந்தி சந்திரமோகன்
ஆசிரியர் (யா/இந்துக்கல்லூரி)

2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் திகதி யா/திருக்குடும்ப கன்னியர் மடத்தில் முதன் முதலாக காலடி வைத்த நான். அன்றைய தினம் அதிபராகிய அருட்சகோதரி நெவிஸ் அவர்களால் வரவேற்கப்பட்டு அதன் பின்னர் 2011ல் அருட்சகோதரி தயாநாயகி, 2014ல் அருட்சகோதரி அன்ர னிற்றா மாற்கு ஆகிய அதிபர்களின் வழிகாட்டலின் கீழ் பணிபுரிந்த காலங்கள் மறக்க முடியாதவை. இவ் அதிபர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட அனுபவங்கள் பெறுமதிமிக்கவை.

அதிபராகிய அருட்சகோதரி அன்ரனிற்றா மாற்கு அவர்கள் 2018ம் ஆண்டு ஆவணிமாதம் 26ஆம் திகதி தனது அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். அறுபது வயதிலும் ஆறு வயதுச் சிறுமியின் துடிப்புடன் காணப்படும் அதிபரைப்பற்றி அவரின் கீழ் பணிபுரிந்த காலத்தின் சில நினைவு களை மீட்டுப் பார்க்க நினைக்கின்றேன்.

2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் 2017ம் ஆண்டு ஒக்டோபர் 17ம் திகதி யா/இந்துக்கல்லூரிக்கு மாற்றம் பெற்றுச் செல்லும் வரை அவருடன் பயணித்த வேளைகளில் அவரு டைய பல்வேறு சிறப்பாற்றல்களை காணமுடிந்தது அவரைப்பற்றி சொல்வதென்றால் ஓரிரு தாள்க ளில் அவ்விடயங்களை கூறி விட முடியாது. என்போன்ற பலருக்கு இவ்விதழில் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்பதால் எனது கருத்தக்களை சுருக்கமாக குறிப்பிடலாம் என்று நினைக்கின்றேன்.

எமது அதிபர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றிற்கு இலக்கணமாய் அமைந் தவர். எதையும் திட்டமிட்டுச் செய்யும் ஆற்றல், சிந்தித்து தீர்மானமெடுக்கும் தன்மை, முன் மாதிரி யாகச் செயற்படுந்திறன், நேர முகாமைத்துவம், ஏனையோரை வழிநடத்தும் திறன் ஆகிய தலைவ ருக்குரித்தான அத்தனை பண்புகளையும் கொண்டவர். ஒரு வேலையைச் செய்யும் போது அவ்வே லையில் தானும் பங்கு கொண்டு அவ்வேலை முடியும் வரை துணை நிற்பவர்.

பாடசாலையின் மீதும் பாடசாலைச்சமூகத்தின் மீதும் அளவற்ற நேசம் கொண்டவர். "பாடசாலை ஒரு குடும்பம்" என அடிக்கடி அவர் கூறுவதுண்டு. எறும்பு போன்று சுறுசுறுப்பாக ஓடித்தி ரிந்து அவர் கடமைகளைச் செய்யும் அழகே தனி. எவ்வித சவால்களையும் எதிர் கொண்டு பயணிப்பவர். பாடசாலைக்காக நேரம், காலம் பாராமல் உணவு, உறக்கம் மறந்து செய்த சேவைகள் ஏராளம். அவரது அயராத உழைப்பின் பெறுபேறாக இன்று பாடசாலையில் எழுப்பப்படும் புதிய கட்டடங்கள்.

பாடசாலை மாணவிகள் தொடர்பாக மிகுந்த கரிசனையுள்ளவர். மாணவிகள் ஒழுக்கத் திலும் கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பது அவரது குறிக்கோள். பெண் பிள்ளைகள் ஒழுக்க சீலர்களாக வாழ வேண்டும் என்பதற்காக கண்டிப்புடன் செயற்படுபவர். இவரது விடா முயற்சியால் பாடசாலை இன்று பல்வேறு செயற்பாடுகளில் முன்னேற்றம் அடைந்துள்ளமை அனை வரும் அறிந்த விடயம். அவரது நிர்வாகத்திறன் அனைவரையும் ஆச்சரியப்பட வைக்கும். மேலதிகாரிகளிடமிருந்து வரும் கடிதங்களுக்கு உடன் பதில் அவர்களால் குறிப்பிடப்படும் வேலை களை எத்தனை சவால்கள் வந்த போதும் உரிய வேளையில் முடித்தல் போன்றவை இவரது நிர்வாகத்திறனுக்கான சான்று களாகும்.

தொழில் வாழ்வில் மட்டுமல்லாது பொது வாழ்விலும் மனித நேயத்துடன் செயற்படும் மாண்பு மிக்கவர். ஏழைகள் மீது அவர் காட்டும் பரிவு பல சமயங்களில் என்னை மெய் சிலிர்க்க வைப்பதுண்டு. தன் பசி பாராது அடுத்தவர் பசி தீர்க்கும் பண்பு கொண்டவர். யார் உதவி கேட்டு வந்தாலும் அவர்களின் மனதறிந்து அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுபவர். அதிபரைச் சந்திக்க யார் வந்தாலும் உபசரிப்பிற்கு குறைவே இருக்காது. எதையும் வெளிப்படையாகப் பேசும் எமது அதிபர் ஏதாவது குறை இருந்தால் உடனே கூறி விடுவார். ஆரம்பத்தில் இவ்விடயங்கள் கஷ்டமாக இருந்தாலும் தவறுகள் இன்றி ஒரு வேலையை முழுமையாகச் செய்வதற்கு முடிகிறது. உண்மை யில் எமது குறைகளை சுட்டிக்காட்டும் ஒருவரிடம் நாம் கோபம் கொள்ளாது அது எம்மை நெறிப்படுத் துவதற்கான ஒரு வழி என நினைப்போமானால் எமது வாழ்வில் நிச்சயம் வெற்றி பெற முடியும்.

இத்தகைய பல்வேறு ஆளுமைத்திறன்கள் நிறையப் பெற்ற அதிபர் அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைந்து அவரது பணி மேலும் தொடர இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

நன்றி.

சாதனையின் நாயகிக்கு!....

திருமதி.பூமாதேவி மகேஸ்வரன்
பாடசாலைப் பணியாளர்
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்
(தேசிய பாடசாலை)

அன்பிற்குரிய அருட்சகோதரி அவர்களே!

உங்களையும் உங்கள் அளப்பரிய செயல்களையும் எமது பாடசாலைக்கு ஆற்றிய சேவை களையும், அன்பான கணத்தையும், பிறருக்கு உதவக்கூடிய மனப்பாங்கையும் மற்றவர்களின் தேவைகளை மதிக்கக்கூடிய பண்பையும் எனக்கு மட்டுமல்லாது எமது பாடசாலைச் சமூகத்திற்கே தெரியும்.

ஆனாலும் அருகில் இருந்து உங்களுடன் வாழ்ந்து வந்தவள் என்ற முறையில், உங்கள் குணாதிசயங்களை நான்கு வருட பாடசாலை வாழ்க்கையில் கண்டறிந்தவள் என்ற முறையிலும் என்னால் கூறாமல் இருக்க முடியவில்லை.

ஆம் உங்களை சாதனையின் நாயகி என்று ஒரு வார்த்தையில் பெருமைப்படுத்திக் கூறுகின்றோம். ஆனால் அப்பெயரின் பின் எப்பேர்ப்பட்ட கஷ்டங்களை அனுபவித்துள்ளீர்கள் என்பது எங்களில் ஒரு சிலரைத்தவிர பலருக்குத் தெரியாது. எமது பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் ஆளணித் தேவைக்காகவும், கட்டங்களுக்காவும் இவ்விடயங்களில் மட்டுமல்லாது. கொழும்பிலுள்ள கல்வி அமைச்சுக்கு எத்தனை முறை பயணங்கள் செய்து மாடிப்படிகள் ஏறி இறங்கி கால்வலி, முதுகுவலி என்று உடம்பு வலிகளையும் பொருட்படுத்தாமல், ஒவ்வொருவராகக் தொடர்பு கொண்டு விடாமுயற்சியாக செயற்பட்டு முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்" என்ற பழமொழிக் கிணங்க செயலாற்றி அத்துடன் பயணக்களை என்றும் ஓய்வெடுக்காமல் அடுத்த நாளே பாடசாலை யில் கடமையில் இருப்பீர்கள். அப்படியான நேரங்களில் பல அலுவலகங்களில் நடப்பது போல எமது இடத்திலும் சில வேளைகளில் மனஸ்தாபங்கள் ஏற்படும்.

இருப்பினும் யாருடன் மனஸ்தாபப்பட்டால் அவர்களுடன் நேருக்கு நேர் கதைத்துவிட்டு கடமை என்று வரும் போது பாரபட்சம் பார்க்காமல் இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கும். அது தான் அவர்கள் பதவிக்குரிய பண்போ என்றும் நான் நினைத்ததுண்டு இப்படியான சிரமங்களின் மத்தியிலும் முயற்சி திருவினையாக்கும் என்பது போல மாணவிகளுக்கான பல கழிப்பறைகளும் மலை போல் வளர்ந்து மூன்று மாடிக்கட்டடமும், இரண்டு மாடிக்கட்டிடமான ஆசிரியர் விடுதியுமாக உயர்ந்து கொண்டு போவதை கண்ட உங்கள் மனம், மலை போல வந்த கஸ்ரமெல்லாம் பனிபோல் மறைவதை கண்டிருக்கின்றோம்.

எமது பாடசாலையில் கட்டடங்கள் மட்டுமல்லாது மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், மற்றும் சுகாதாரத்தில் அக்கறையாக இருந்து அவர்களை நல்வழிப்படுத்தும் பண்புள்ளவர்களாக வாழ

ஊக்கப்படுத்தி அவர்களை திறமைசாலிகளாக வாழ போராடினீர்கள்.

அதுமட்டுமல்லாது அலுவலகத்திற்கு வந்து செல்கின்றயாராக இருந்தாலும் அவர்களை உபசரிக்காமல் அனுப்பமாட்டீர்கள். அவர்கள் திரும்பி செல்லும் போது மனநிறைவுடனும் சிரித்த முகத்துடனும் செல்வதை கண்டிருக்கின்றேன். கொடுத்தார்க்கு குறைவில்லை. என்பது போல் கொடுக்க கொடுக்க பொருட்கள் வந்து கொண்டே இருக்கும். மேலதிகமாக இருப்பவர்களிடம் அவற்றைப் பெற்று இல்லாதவர்களுக்கு தேவையான நேரத்தில் கொடுத்து தவுவதே உங்களின் சிறப்பாகும்.

யாராக இருந்தாலும் பாகுபாடு பாராமல் எல்லோரிடமும் சரிசமமாகப் பழகி அவர்களின் சுகதுக்கங்களில் பங்கெடுத்து செவிமடுத்து, அவர்களுக்கு ஆறுதல் கூறி அறிவுரை வழங்குவதில் நல்ல ஒரு நண்பியாகப் பார்த்திருக்கின்றோம். உங்களுடன் பழகினால் எங்களுக்கு நீங்கள் தாயாய் நல்லதொரு நண்பியாக இருப்பதை பல நேரங்களில் உணர்ந்திருக்கின்றேன்.

இந்த நான்கு வருட பாடசாலை வாழ்க்கையில் பெற்ற வெற்றிகள், சந்தோஷங்கள், சாதனைகள் அனைத்தும் உங்களுக்கு என்றும் நிலைத்திருக்கும். ஆறு என்றும் வற்றாது ஓடிக் கொண்டேயிருக்கும். என்பது போல உங்கள் சேவை தொடரவும் அது போல் என்றென்றும் உடல் உள சுகத்துடன் ஆரோக்கியமாக வாழவும் எல்லாம் வல்ல ஆண்டவரை வேண்டி நிற்கின்றேன்.

Dear Teacher!

Yasotha Srikumar
(Teacher)
J/h.f.c.

Dear Teacher!

Yes, you are not only the principal but also a good teacher to me. A good teacher should be a model for the society. You are a model to my life because your good qualitites molded me and paved way to exhibit myself as an active, ambitious and assertive woman.

I keep a bucket behind you not to get your favor but to get your positive attitudes. My bucket is illed by your caring, charming. considerate, enthusiastic, excitable, faithful, thoughtful and funny behaviors.

I learnt from you how to work hard by shouldering all heartships, and inish it successfully within a particular period.

You taught me how to achieve the goal in spite of all the dif iculties.

I understood from you how to be steady in the midst of all the negative criticism.

I perceived from you that the conservation of nature doesnot depend on the designation of a person but depends on a human being.

I pray the god to full ill your life with peace and happiness by your great service.

திருக்குடும்ப கன்னியர் மடத்தின் பாரம்பரியங்களில்...

தமிழ் விழாவில்

பிரியாவிடைகளில்...

உயர்தர மாணவ விருந்தில்..

ஆசிரியர் தினத்தில்..

மாணவர் ஒன்றுகூடலில்..

புகழ் மாலை சூடுவோம்

திருமதி.கு.ஆனந்தநடராஜா
பகுதித்தலைவர்
தரம் – 08
(யா/திருக்குடும்ப கன்னியர் மடம்)

ஆழி சூழ் இலங்காபுரியின் கண் வட பால் அமைந்த கற்பகதரு நிறை யாழ்ப்பாணம் தன்னில் வெண் மண் பரந்து கடலன்னை மடித வழ்ந்து மெய்சிலிர்க்க கீதம் பாடும் காற்றின் தாலாட்டில் களிகூரும் நற்பதியாம் கிளாலி மண் தொட்டு இறையாசி நிறை குடும்பமாம் சந்தி யாகு மார்க் - நேசம்மா மார்க் தம்பதிகள் இப் புவிக்கு ஈர்ந்தளித்த இறைமகள் அருட்சகோதரி அன்ர னிற்றா மார்க் என்ற தேவமகள் இவர்.

ஆண்டவன் அருள்புரிந்த
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து
ஐம்பத்தெட்டாம் ஆண்டு தன்னில்
ஆவணித் திங்கள் அருள் நிறை தினமாம்
இருபத்தாறாம் தேதியதில்
உதித்தனள் உறவுகள் மகிழ

அன்னையின் அரவணைப்பில் அறு துயில் கொண்டு தந்தையின் தோளில் துவண்டு விளையாடி உடன் பிறந்தவர் அன்பினில் கலந்து அகமகிழும் அந்நாளில் பெற்றோர் புகட்டிய ஆன்மீக வாழ்வும் குருவின் ஆசியும் அண்டை அயலின் அன்பும் கலந்து இறை யேசுவின் இன்பமயமான ஆசியும் பெற்று அடியெடுத்து வைத்தார். அறிவு தரும் ஆசான்கள் மொழி கேட்க கிளாலி றோமன் கத்தோலிக்கப் பாடசாலைக்கு.

அன்பும் பண்பும் அறிவும் புகட்டி
ஆண்டவர் புகழை செவியாரக் கேட்டு
புதுமைகள் புனிதர்கள் செயலை ரசித்து
பூவுலக வாழ்வின் புதுப்பொலிவு கண்டார்.

ஓடி விளையாடி ஒய்யாரமாய் மழலை மொழி பேசி அன்போடு நல்லறமும் எண் ணோடு எழுத்தும் பயின்ற ஐந்து ஆண்டுகள் கழிந்து சென்றிட ஆறாம் தரத்தின் அறிவை மெருகிட உசன் இராமநாதன் மகாவித்தியால யத்தை நாடிச் சென்று கல்வியினைக் கருத் தோடு பெற்ற வேளை பெற்றவரும் உற்றவரும் இறையாசியும் இணைந்ததால் தரம் ஏழு எட்டை யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியா லயத்தில் கற்றுத் தேறினார். தொடர்ந்து தரம் ஒன்பது பத்தை அச்சுவேலி புனித திரேசா பெண்கள் பாடசாலையிலும் உயர்தரப் படிப்பை மன்னார் புனித சேவியர் பெண்கள் கல்லூரி யிலும் நிறைவு செய்த இவர் யாழ் பல்கலைக் கழகத்தில் கலைமாணிப்பட்டப்படிப்பையும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா தொழிற்தகைமை யையும் நிறைவு செய்தல்.

அறிவைத் தேடித் தேடித் கற்ற இவர்
ஆண்ட வனின் அயலிருப்பை விரும்பினார்//
தேவமகன் அருளினையெ நாடிச்சென்ற
இவரும் நித்தியமும் பெற்று மகிழ்ந்தார்!
நித்தியமும் பெற்று மகிழ்ந்தார்
வெள்ளையுள்ளம் கொண்டு
வெண்ணுடையும் தரித்தே
தேவ தூதப் பெண்ணாய்
சேவை செய்து மகிழ்ந்தார்//

ஆய கலைகளை அக மகிழ்ந்து பெற்ற இச் சகோதரி அறிவுப் பொக்கிசத்தை மேலும் மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் ஆசிரியத்

தொழிலைத் தேர்ந்தெடுத்தார். உயர்தரப் படிப்பை நிறைவு செய்த மன்னார் புனித சேவியர் பெண்கள் கல்லூரியில் தன் தொழிலை முதன் முதல் பெற்ற இவர் அக்கல்லூரியில் விருப்புடன் தன் பணியை ஆற்றி வந்தார். வருடங்கள் நான் கையும் மாதம் நான்கையும் தினம் நான் கையும் இப்பாடசா லையில் நற்பணியாற்றிய காலப்பகுதி கடந்து செல்ல 1991.வைகாசி மாதம் முதலாம் நாள் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் தமிழ் மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை மகிழ்வோடு ஆற்றி வந்த காலம் அவரின் நல்ல பண்புகள் அன்பான நட்பு வட்டங்கள் புனிதமான ஆசிரியப் பணிகள் இம் மண்ணும் இப்பாடசாலையில் அவரிடம் படித்த அன்பான மாணவிகளின் உயர்வும் அவர் தம் ஆசிரியப் பணியின் இரும்பும் அருட் சகோதரி அவர்களுடன் இணைந்து படிப்பித்த ஆசிரியை களும் பாடசாலைச் சமூகமும் அன்போடு கூறும் வார்த்தைகள் எடுத்தியம்பும் இக்கல்லூரியுள்ள வரை நெஞ்சங்கள் நினைவூட்டும். நான்கு வருடமும் நான்கு மாதமும் பதின்மூன்று நாட் களும் இப்பாடசாலையில் தனது அரும்பணியை நிறைவு செய்த இவர் ஆயிரத்துத் தொள்ளாயி ரத்து தொண்ணூற்றி ஒன்பதாம் ஆண்டு தைத்திருநாள் முதலாம் நாள் கிறிஸ்தவர்கள் புதிய ஆண்டைத் தரிசித்த இந்நாள் பாசையூர் மண்ணில் மிளர்ந்த யா/புனித அன்ரனி பெண்கள் பாடசாலை இவரைத் தம் புதிய சேவையாளராக இணைத்துக் கொண்டது. கண்ணியமாக தன் கல்வியைக் கருணை யோடு இம்மண்ணின் மகளிருக்கு கற்றுக் கொடுத்த இவரது பணி போற்றுதற் குரியது. மாதங்களும் பதினாறு நாட்களும் சேவையாற்றி மனமகிழ்ந்து அருட்சகோதரி அவர்களை பண்டத்தரிப்பு யசிந்தா றோமன் கதிதோலிக்கப் பாடசாலை இருகரம் நீட்டி வரவழைத்து நிற்க 1999 ஆம் ஆண்டு தை 1ம் திகதி புனித பாதங்கள் அம்மண்ணை அளைந்து நின்றது. ஒரு வருடங்கள் இங்கு தன் மகத்தான பணியை யாற்றிய அன்புமகளை ஆண்டவன் அருள் நிறைவோடு ஆசீர்வதித்தார். மகிழ்ந்தோம் உம்பணி கண்டே

மகிழ்ந்தோம் நாமும் மகிழ்ந்தோம் என்றார்
போதும் போதும் ஆசிரியப் பணி என்றார்
வாரும் வாரும் இப்பணி சிறக்க என்றார்
சேவையில் திளைத்த இறை மகன்
இறங்கி வந்து ஆசிர் வதித்தார்
மீண்டும் மீண்டும் உம் பணி தொடரும் என்றார்
உன்னால் முடியும் வழிநடத்தும் என்றார்.

ஆம், இறைவன் கருணை கொண்டு உலகின் இயக்கங்களைப் பார்த்துக் கொண்டி ருப்பவர். கருத்தால் நிறைந்த காருண்ய வான்களை பணியாற்றத் தூண்டுபவன் அருட் சகோதரியின் ஆசிரியப் பணியால் உள்ளம் நிறைந் தான். உவகை கொண்டான் அதனால் அவர் பணியில் ஒரு படி மேலேற்ற எண்ணம் கொண்டான். ஆம் 2000 ஆம் ஆண்டு உதவி அதிபர் என்னும் உயர்வைக் கொடுத்து பணி யாற்ற யா/பருத்தித்துறை புனித தோமஸ் பெண்கள் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார். ஒரு வருட நாட்களிலேயே இவர்தம் பணியின் சிறப்பைக் கண்ட இறைவன் இவரை அதிபராக அப்பாடசாலையில் தரம் உயர்த்தி நிறைவு கண்டான். அக் காலப்பகுதியில் இவர் ஆற்றிய அரும்பெரும் பணியின் புனிதம் இன்றும் கூட அவரைக் கண்டவுடன் புடைசூழ்ந்து நலம் விசாரிக்கும் மக்களின் நிலையைக் கண் கூடாகக் கண்டுள்ளேன். ஆறு வருடங்க ளும் 17 நாட்களும் இப் பாடசாலையில் இவர் ஆற்றிய பணியின் சிறப்பினால் " எங்கெல்லாம் தேவை இருக்கிறதோ அங்கெல்லாம் உன் சேவை தேவை" என்னும் ஆண்டவனின் வாக்கு இவரை வன்னி மண்ணின் வளம் காண அழைத்துச் சென்றது.

"ஏழைகள் எளியவர்
ஏற்றம் கண்டிட
ஓடி வா மகளே!

என்றழைத்தார்
வாட்டமில்லாமல்
ஓடியே சென்ற மகள்
நாடியே நலம் பல தேடிவைத்தாள்
ஊனையும் உடலையும்
தான் மறந்து உழைத்து நின்றாள்
கண்ணியம் காத்திடும்
கருணை கூர் முகங்களாய்
கானக மக்கள் களிப்புறும் வகையில்
கட்டடம் உயர்ந்தது – நல்
கல்வியும் கிடைத்தது
அங்கத்தவர் மகிழ்வுடன் வளம் பெற்று
வாழும் நிலை கண்டே
இது போதும் என்று தான்
எண்ணினாள் இறைவனும்

ஆம், வேண்டாம் வேண்டாம் இங்கு தான் என் சேவை நிலைக்க வேண்டும். என்றெண்ணிய போதிலும் ஆசிரியர் குழாம் கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற வேளையில் கிளிநொச்சி பற்றிமா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து "எங்கே தொடங்கினாயோ அங்கே உன் உழைப்பு மெருகூட்டப்பட வேண்டும்". என்ற கட்டளைக்குப் பணிந்து யா/திருக்குடும்ப கன்னியர் மடத்தில் 2015.04.20 ம் திகதி அதிபர் பணியை ஏற்றுக் கொண்டார்.

ஓடி ஓடி உழைத்தார்
ஓய்வு காணவே பாடுபட்டு உழைத்தார்
ஆழ் மனதின் அன்பையெல்லாம்
அடி மனதில் புதைத்தார்
சீர் குலைந்த இடங்களையே நேர்படுத்த நினைத்தார்
குறைகள் எல்லாம் போக்கி
நிறைவு காண முனைந்தார்

உடல், மன உபாதை களை இயேசுவின் திருவடியில் இறக்கி வைத்து விட்டு தூக்கமின்றி சரியான ஆறுதலின்றி கல்வியமைச்சுக்கும் கல்லூரிக்கும் என அலைந்தார். கட்டடங்களை கட்டி யெழுப்பவும் விளையாட்டு மைதானத்தை சீர்படுத்தி அதில் விளையாட்டுப் போட்டியை நடாத்தும் வரை ஒரு ஆண் அதிபர் போல் நல்ல குடும்பத்தின் பொறுப்பு வாய்ந்த தாயைப் போல் இவரின் உழைப்பு மகத்தானது. மாணவர் வரவை சீர்படுத்தியதோடு பிந்தி வரும் மாணவர் வீதத்தை அண்ணளவாகக் குறைக்க இவர் எடுத்த முயற்சிகள் சொல்லில் அடங்காது. மாணவர் கல்வித் தரத்தில் படிப்படியான முன்னேற்றத்தைக் காண்பதற்காக மேலதிக வகுப்புக்களை நடாத்தியதோடு இருபது வருடங்களுக்கு மேலாக விஞ்ஞான பாடத்தில் பல்கலைக்கழகம் செல்லாத மாணவியர் 2017 கல்வியாண்டில் 3யு எடுத்து பல்கலைக் கழகத்திற்கு நுழைய களம் அமைந்துக் கொடுத்த காலமாக இவருடைய சேவைக்காலம் அமைந்தது. திருக்குடும்பத்திற்கு மட்டுமல்ல இப்பாடசாலைக்குச் சமூகத்திற்கே வளமான பெருமையுள்ள காலமாகும் இவருடைய சேவைக்காலம் பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்பினால் போதுமென நினைத்திருந்த பெற்றோர் தமது பங்கும் உண்டு என உணர்ந்து பாடசாலைக்கு வருகை தந்த காலம். மண்டம் நிறைந்து வழிய பெற்றோர் ஆசிரி யர் கூடிய காலம். இவருடைய பணிக்காலம் என்பது மறுக்க முடியாது.

வெயிலின் அருமை மழைக்காலத்தில் தெரியும் என்பர். அது போல் அதிபர் என்னும் கோலோச்சிய வேளையில் பல்வேறு விமர்சனங்களைப் பெற்ற போதும் சளைக்காமல் தனது பிடியில் இறுக்கமாக நின்ற அருட் சகோதரியின் சேவை இனிமேல் தான் புரியும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

சொல் வெறியும் கல்வெறியும் பெற்றேன் என
சோர்ந்து தான் போகவில்லை அம்மா
துடிதுடித்து நீயெழுந்தாய் – தினமும்
பொடிப் பொடியாய் சங்கடங்கள் போகச் செய்தீர்

ஆண் சிங்கம் போல நீரும்
கர்சித்து நின்றதெல்லாம்
ஏழை மக்கள் பெற்றெடுத்த
பெண்களை நீர் பேணித்திடத்தான்
நாமறிவோம் நாமறிவோம் – நாளை
நலம் பெற்று மீளாச் சேவை நீர் ஆற்றும்

கல்லூரி வாழ்வு கசப்பைத் தந்தது எனின்
காய்க்கிற மரமே கல்லறியப்படும் என உணர்வீர்
பொய்த்திடாத உம் சேவையெல்லாம் – நாளை
பொலிவு பெறும் தாயே பொலிவு பெறும்.

ஆறு பத்து வருடாங்கள் ஆனதென்றே
ஏங்குகின்றோம் நாமும் இங்கு…
இன்னும் உம் சேவை
இக்கல்லூரி பெற்றிடுமானால்
திருக்குடும்ப கன்னியர் கண்ட
கனவெல்லாம் நனவாகும் – ஆனாலும்
அழைக்கிறான் ஆண்டவனும்

இது மட்டுமல்ல இன்னும் பல சேவையுண்டு
வா வா என் பணியை தொடர் என்று
கண்ணீருடன் கலந்து நாமும்
விடைதாறோம் – வெற்றிப் பாதையில்
வீறு போட்டு நீரும்
நற்பணியாற்றிடும் காலமெல்லாம்…
இக்கல்லூரி மாணவரின் வாழ்வு
வளம் பெறவே உம் ஆசிர் கிடைக்கட்டும் எந்நாளும்
இறை மகள் நாமம் பெற்று – அருட்சகோதரி
அன்ரனிற்றார மாற்கு எனும்
தேவமகள் இவர் சேவை
போற்றுதற்கும் பேணுதற்கும் உரியதொன்றாய்
என்றென்றும் பூமிதன்னில் உயர்வான
சேவையினை தானாற்றி புனிதத்தை
பேணவே தினம் தினம்
புதுப் பொலிவுபெற்று வாழ
இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்
வாழ்க வாழ்க வளம் பலம் பெற்று
நீடு புகழுடன் வாழியவே

சீரிய மனம் படைத்த அதிபர்

திருமதி.ஜெகன் – காந்திமதி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்,
யாழ்ப்பாணம்.

எமது பாடசாலை அதிபர் அருட்சகோதரி அன்ரனிற்றா மாற்கு அவர்களின் சேவைக்கால நிறைவை முன்னிட்டு அவரிற்கு வாழ்த்து தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மதிப்பிற்குரிய எம் அதிபர் பாடசாலையில் நிறைவேற்ற வேண்டிய இலக்குகளை செய்யுங்கள் என்று கூறாமல் முன்னுதாரணமாய் செய்து காட்டி எம்மையும் தன்னுடன் சேர்த்து நல்ல முறையில் இலகுவாகவும் நேர்த்தி யாகவும் செய்து முடிப்பதற்கு எமக்கு ஊக்கமும் உத்வே கமும் அளித்தார். ஒரு நிர்வாகத்திற்கு மிக முக்கியமானது நேர முகாமைத்தவம் என்பதனை எமக்கு அடிக்கடி சுட்டிக்காட்டுவதுடன் கீழ்ப்படிவு, பணிவு போன்ற நற்பண்புகளை எம் மனதில் விதைத்து கடவுளிற்கும் மனச்சாட்சிக்கும் உண்மையாக இருக்க வேண்டும் என்பதனையும் எமக்கு உணர்த் தியவர் இவரே.

மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் யாவரையும் ஒரே நிலையில் வைத்து அவர்கள் மீது அன்பு செய்வதுடன் அவர்களின் தவறுகளை சுட்டிக்காட்டுவதிலும் பிரச்சினைகளை கேட்டறிந்து அதற்கு எவ்வாறு தீர்வளிப்பது என்பதிலும் கடமை உணர்வைக் கண்ணியமாய் கற்றுத் தரும் ஒரு பேராற்றல் எம் அருட்சகோதரிக்கு இறைவன் கொடுத்த கொடை யெனில் மிகையாகாது எதனையும் எளிமையாய் ஆனால் உரிய விதத்தில் செய்து முடிக்கும் நிகரில்லா ஆற்றலும் இன்பத்தில் மட்டுமல்ல எம் துன்பத்திலும் தவறாது பங்கேற்கும் கருணை உள்ளமும் படைத்தவர் இவர்.

பாடசாலை நிகழ்வு ஒன்று வந்துவிட்டால் தனது வயது நேரம், காலம் பாராது சிறு பிள்ளை போல் தானே முன்னின்று செம்மையாகவும், சரியாகவும் செய்து முடிக்கும் திறன் பற்றிய அறிவை நாம் அவரிடமிருந்தே கற்றுக் கொண்டோம். பாடசாலை நலனிற்காய் நாளும் பொழுதும் சிந்திக்கும் சீரிய மனம் படைத்தவர் எமது அருட்சகோதரி அவர்களே. அருட்சகோதரியின் தலைமைத்துவத்தின் கீழ் பணியாற்றிய காலம் எமது வாழ்வில் மறக்க முடியாத நினைவுகளாகும். எம்முடன் அதிபர் செல விட்ட நேரத்தினையும் அவரது அயராத உழைப்பினையும் என்றும் நினைவு கூறுவோம். தங்க ளின் ஓய்வுக்காலம் முழுவதும் அமைதியும், சந்தோசமும் நிறைவாகக் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றியால் நினைந்து

திருமதி. இ.த.ஜேம்ஸ் மைக்கல்
(பழையமாணவி,முன்னாள் ஆசிரியை)

நிமர்ந்த நடையும்
நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் எவருக்கும்
அஞ்சாத நெறியும் – எனும்
பாரதியின் வரிகளுக்கு
முகவரி இவர்

யாழ் கன்னியர்மடத்தில்
கல்வி பயின்ற எனக்கு
அறிமுகமானார் ஆசிரியராக
உங்களிடம் கல்வி பயிலவில்லை எனினும்
நேரில் கண்டேன் உங்கள்
கண்டிப்பான அரவணைப்பை

காலத்தோடு ஓடி
அதியர் தரம் உயர்ந்தார்
அதியராக பாடசாலைகளில்
பாங்குடன் பணியாற்றி நீர் – செய்த
பணிகளால் உயர்ந்து
மனங்களில் நிறைந்தீர்

நான் ஆசிரியப்பணியினை
திருக்குடும்பகன்னியர் மடத்தில்
களிப்புற ஆற்றிய வேளை
அதியராய் அமர்ந்தீர் – மீண்டும்
ஆளுமைமிக்க தலைவியாய்
திருக்குடும்ப ஆசியுடன்

மெல்ல மெல்ல குவிந்தன
கடமைகள் பொறுப்புக்கள்
கண்ணியத்துடன் முடித்தீர்
கண்கவர் நயத்துடன் –
இடைவிடாத முயற்சியால்
உயர்ந்தன கட்டடங்கள்

சேர்ந்து பயணித்த போது தான்
தெரிந்தது புரிந்தது
உங்கள் அன்பு, அரவணைப்பு
அறிவுரை ஆலோசனை – இருப்பினும்
பஞ்சமின்றித் தொடர்ந்தன
வழிகாட்டலும் நெருக்கூட்டலும்

அதியர் ஆசிரியர் உறவில்
சுவைத்தேன் தாய்–சேய் உறவினை
விடைபெற்றேன் கனத்த மனதுடன்
வளர்ந்த பாடசாலையிருந்து மகவாக
ஆசிரியத்துவத்தின் மேன்மையினை
நன்குணர்த்தி விடை தந்தீர் தாயாக.

பாதையில் மாற்றங்கள்
வாழ்வில் வருவதுநியதி
புதிய திசை நோக்கி
தொடரும் ஆன்மீகப் பயணமது
இறைவன் ஆசிபெற்று
சிறக்க எனது வாழ்த்துக்கள்

பாடசாலையில் வினைத்திறன் மிக்க பணிகளில்...

ஆரம்பக்கல்வி விளையாட்டு நிகழ்வில்..

தலைமைத்துவ தெரிவில்..

வணிக, விஞ்ஞான தினத்தில்..

ஆங்கில தினத்தில்..

கால்கோல்விழாவில்..

நெஞ்சம் நெகிழ....

திருமதி ஜெ. ஜெபநேசன்
ஆசிரியர்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

ஓ எங்கள் Sister எங்கேயம்மா????
வீசும் காற்றுக்கும் வலிக்குதம்மா
பள்ளியில் ஒலிக்கும் மணிகள் அழுகுதம்மா
பச்சை நிற மரங்கள் உம்மை தேடுதம்மா
கால தேவனின் சித்தம் அம்மா
கடமை முடித்த உணர்வுடன் போய்வா அம்மா
எங்கள் வாழ்க்கையின் படிகளிலே
என்றும் நீதான் இருப்பாயம்மா

அறிவும் ஒழுக்கமும் அருகி வரும் சமூகத்திலே
போதனை தந்ததும் நீதானம்மா
வேண்டிய உதவிகள், செபங்கள் செய்வதிலே
வென்றவர் உம்மை யார் தானம்மா
செல்லும் இடத்தில் தேவன் உம்மை
சீருடன் காக்க வருவாரம்மா
என்றும் நம்பும் திருக்குடும்பம்
உமக்காய் இருப்பார்கள் கலங்காதேம்மா

கரடு முரடான பாதைகளில்
நடந்தீர் சுமந்தீர் சிலுவைதனை
கட்டிடங்கள் பல எழுச்சியுற
கால்கள் கடுக்க பல தூரம் கடந்து சென்றீர்
விரைவில் ஒரு நாள் பள்ளிக்கு வந்து பாரும் – உம் நாமம்
விண்ணை முட்டும் மேலுயரும்.
வலிகள் கண்டு வாழ்ந்த போதும் – உம் பணியில்
இல்லை பலவீனங்கள் மறந்திட முடியாத
நினைவுகளாய் எம் மனதில்
நீ தான் இருப்பாயம்மா

சுத்தம் ஒன்றே சுகம் என்றீர் – சுயநலன்
சிறிதும் இன்றறி பள்ளியில் வலம் வந்தீர்
சின்னஞ் சிறுவர்களின் வாழ்வுக்காய் – பல
கனவுகள் கண்டீர் நனவாக்கினீர்
மாணவர் வரவினை ஒழுங்காக்கினீர் – பல
விருதுகள், வெற்றிகள் காணச் செய்தீர் – எம்
மாணவர் பலரும் பல்கலையும் பயில
வழிகள் திறந்தீர் வலிமை தந்தீர்

எங்கள் பிழைகள் பொறுத்துக் கொள்வீர்கள்
எதையும் தாங்கும் இதயம் கொண்டீர்
பள்ளியின் நலனுக்காய் பல அறிவுரைகள்
விதைத்தீர் உணர்த்தினீர் திருந்தச் சொன்னீர்
ஊக்கம் கொடுப்பது உம் நிறையோ
உம் பணியில் ஓய்வு இல்லை என்றே
தேற்றும் வழிகள் பிறக்காதோம்மா......

"அர்ப்பணத்தின் அன்னை"

செல்வி.ப.யூக்கிறிஸ்ரின்
பகுதித்தலைவர் (Gr. 07)
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

திருக்குடும்ப தமிழ் மகாவித்தியாலயத்தில்
ஆசிரியராய் அர்ப்பணித்த நாட்களும்
அரும்பெரும்பாடுபட்டு கல்வியிலும் ஞானத்திலும்
உயர்வு பெற்று நீராற்றிய பணியிலும்
வன்னி மண்ணின் மாணவருக்காக
நீராற்றிய உம் சேவையின் திறன் அறிந்தோம்
உம்மால் நம்பிக்கையின் சின்னமாய்.
நாடி வந்தீர் இரண்டாயிரத்து பதினைந்தில் மீண்டும்
அதிபராய் எம் மத்தியிலே
தேடிய நல் ரத்தினமாய்
தேவைகள் யாவையும் நிறைவு செய்யும்
பாரிய பொறுப்புக்களை
பாங்குடன் ஏற்று நின்றீர்
கடமை கண்ணியம்
கட்டுப்பாடு ஒழுக்கம் என
விழுமியப் பண்புகளை
விதைத்திடும் விருட்சமானீர்

என்றுமில்லா; எங்குமில்லா
சேவையாக செழுமைதனை
காட்டி நின்றீர்
கசப்பாக இருந்தாலும் இனிப்பாக்கி
கடுகதியாய் வந்து சேரும் மாணவரை
நேரக் கட்டுப்பாட்டுடன்
வரவொழுங்குடனும் அடிப்படையில்
மாணவர் ஒழுங்கு என்னும்
ஆணிவேரை சூழ வேரூன்றி விட்டவர் நீயம்மா

பற்றாக்குறையில் பரிதவித்த மாணவர்க்கு
பாங்குடனே ஆற்றிய சேவையெனில்
பக்குவமாய் கட்டடங்கள் பரந்தும்
வானளாவ வடிவம் கண்டீர்
பல்வேறு இடங்களிலும் களஸ்ரப்பட்டு
ஓடிவரும் ஆசிரியரை மறக்கவில்லை
அதனால் அடுத்த உமது சிந்தனையில்
ஆசிரிய விடுதி அமைக்கும் பணியை ஆரம்பித்தீர்

புதிது புதிதாய் இங்கு நீர் ஆற்றும்பணி
இறைவன் உமக்குத் தந்த வரமோ தாயே
நல்ல மேய்ப்பனாய் வல்ல அதிபராய்
நாளும் நாளும் நல்கினீர் நல் சேவைதனை

மாணவிகள் தம் மகிழ்வூட்டும் – இணை
பாடவிதானச் செயற்பாடுகளில்
செயற்றிறன் மிகுதியாக்க எத்தனை
வெற்றிகள் பல
இது போதாது இது போதாதென்னும்
வேட்கையை வீரியத்துடன் தந்தீர்
அதற்காக அர்ப்பணித்தீர் பல பொழுதை
மழையென்றும் வெயிலென்றும்
பாராமல் மண்ணிற்கு அலைந்தீர்
பள்ளத்தை நிரப்பி மேடாக்கி
2018 விளையாட்டுப் போட்டியை
சொந்த மைதானத்தில் நடத்திய
பெருமைகள் உமக்கே அம்மா.

கல்லூரி வளாகத்தையும் வெளிப்புறத்தையும்
சுற்றிச் சுற்றி வந்து சுத்தம் பேணியது
சூழலை மட்டுமல்ல தாயே
பருவ வயதில் பாழ்பட்டுப் போகாமல்
கற்புடன் கன்னியர் வாழ வழி சொன்னீர்
பெற்றவர் தானும் பேசாதிருந்த போதிலும்

பெற்றெடுத்த அன்னை போல்
வழிமாறிச் செல்லும் மாணவிகளை
நேரிய வழியில் பயணிக்க வழிசமைத்தீர்

உமதுழைப்பை ஊர் அறியும்
உமது சேவை எம்கல்லூரியை மெருகூட்டியதை
உலகம் அறியும்; உண்மை பொய்யாகாது
அன்பின் இருப்பிடம் உமது மறு உரு
அன்னையே உமது வெண்மை தெரிந்து கொண்டோம்
என்று சென்ற சுற்றுலாவில்
அகில இலங்கை சுற்றுப் பயணத்தில்
இணைந்தனர் க.பொ.த உயர்தர மாணவியர்
புத்தளம் புனித அன்னாள் ஆலயமும் – மாத்தளை
ஹக்கோட்டை புனித அந்தோனியார் ஆலயத்திலும்
ஆன்மீகப் பணியுடன் கூடிய உமது சேவை
எண்ண எண்ண இனிக்குதம்மா
தாயாகி தந்தையாக நல் அதிபராகி
இறைவன் எமக்களித்த காப்பாளனாக
மாணவர் நலனுடன் ஆசிரியர் நலன்களையும்
அள்ளி அள்ளி வழக்கிய போது – உமது
அன்பின் ஆழத்தை அருகிருந்து உணர்ந்தோம்.
விருந்தோம்பல் பண்பில் உமக்கு நிகர் நீரே
சேவையால் உயர்ந்து பணிவால் இறையுடன் நெருங்கி
தினம் தினம் மெழுகாய் கரைந்த உனது
கல்லூரி வளாகத்தில் அழியாக் கால்தடம் பதித்த நீர்
இறைபணியில் உமது மகிமைகள் வளமுறட்டும்

அகவை அறுபது அரச சேவையில் தான் அம்மா
ஆண்டவன் சந்திதானத்தில் நீரோ இளமகள் தான்
வாழ்த்துக்கள் நான் பாடுவேன்
வளமுற வாழ்கவென
வானளாவ உன் சேவையும் அர்பணிப்பும்
வளம் பெற்று நல்வழி தோன்றட்டும் – இறை
யேசுவின் திருஅவையில் உம் புகழ் ஒளிபெறட்டும்.

சாதனைகளை சாத்தியமாக்கிய வித்தகி

யோ.யோண்சன் ராஜ்குமார்
(இடமாற்றம் பெற்ற ஆசிரியர்)

யாழ்ப்பாணம் திருக்குடும்பகன்னியர் மடமானது யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதல் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை. இதனை வழிநடத்துவதற்காக அயர்லாந்தில் இருந்து ஆதித் தாய்மார் பல்லாயிரக்கணக்கான மைல் கடந்து வந்து தம்மையே முழுமையாக அரப்பணம் செய்து இக்கல்விக் கூடத்தினைக்கட்டி எழுப்பினர். அவர்களின் புனித ஆத்மாக்கள் இன்றும் பாடசாலையில் வாழ்கின்றன என்று பலரும் கூறக் கேட்டிருக்கின்றேன். காரணம் பாடசாலையில் நிலவும் அமைதியும், நல்லொழுக்கம் மிக்க மாணவ உருவாக்கங்களும் பாடசாலையின் வளர்ச்சி நோக்கிய நகர்வும், நியமிக்கப்படுகின்ற நிர்வாகிகளும் அதற்கு சான்று எனலாம்.

எனவேதான் ஒவ்வொரு காலகட்டத்திற்கும் தேவையான நிரவாகிகளை இறைவன் இப் பாடசாலைக்கு அனுப்பி அருளுகின்றார். கடந்தகாலத்தில் நான்கு அதிபர்களுடன் இப்பாடசாலையில் கடமையாற்றியவன் என்ற வகையில் அதனை அனுபவரீதியாக உணரக்கூடியதாக இருந்தது. அவர்கள் நால்வரும் அந்தந்த காலத்தின் தேவைகளை நிறைவேற்ற வல்ல ஆளுமைகளாகத் திகழ்ந்தனர். அந்த வகையில் அருட்சகோதரி அன்ரனிற்றா மாற்கு அவர்கள் கடந்த நான்கு வருடங்களாக பாடசாலையில் நிர்வாகப்பணியாற்றி ஓய்வு பெறுகின்றார். அவர் இங்கு பணியாற்றிய காலம் சிறிதாக இருந்தாலும் ஆற்றய பணிகளோ அனேகம்.

2003 ஆம் ஆண்டு தமிழ் ஆங்கிலப் பாடசாலைகள் ஒன்றிணைக்கப்பட்டன. அது மிகவும் சவாலான செயற்பாடாக இருந்தது. அச்சாவாலை வெல்லக்கூடிய அதிபர்களை இறைவன் இப் பாடசாலைக்கு வழங்கி இருந்தார். 2010 ஆம் ஆண்டு இப்பாடசாலை தேசியப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. அது தரமுயரத்தபட்டிருந்தாலும் அதனை ஈடுகொடுப்பதற்கு பாடசாலையை மேல் நகர்த்தவேண்டிய பணிகள் பின் வந்த அதிபர்களிடம் வழங்கப்பட்டிருந்தது. அந்த வகையில் அருட்சகோதரி அன்னரனிற்றா மார்க்கு அவர்கள் பாடசாலைக்கு தேவையான கட்டுபாட்டுடன் கூடிய நிர்வாக அமைப்பினை வடிவமைப்பதிலும், பாடசாலைக்கு வேண்டிய பௌதீக வளங்களை தேடிப் பெறுவதிலும் மிகவும் சிறப்பாக செயற்பட்டார்.

மாணவரை ஆற்றுப்படுத்தும் பணி

யுத்தத்தின் முடிவுக்குப் பின்னர் சமூகத்தில் ஏற்பட்ட பிறழ்வு நிலைகளும் மாணவர்கள் பாதிப்படையக்கூடிய அபாயம் சூழ்ந்த பின்னணியில் ஒழுக்கத்தினை வளர்ப்பதிலும் மாணவர்களை பாதுகாப்பதிலும் அதிக சிரத்தை எடுக்கவேண்டிய காலத்தில் அதிபர் அவர்கள் பல்வேறு நடபடிக்கைகளை மேற்கொண்டார்.யோகாப்பியாசம்,தியானம் போன்றவற்றை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்தினார்.பாடசாலையின் நேரம் 7.30 ஆக

மாறுவதற்கு முன்னரே அதற்கு பாடசாலைக்கு மாணவர்கள் வருவதற்கு ஏற்ற வகையில் பாடசாலையை தயார் செய்தார்.மாணவர்கள் பிந்தி வரும் நிலையையும், தேவையற்ற வகையில் அடிக்கடி லீவெடுக்கும் நிலையையையும் வெகுவாகக் குறைத்தார். மாணவர் ஒழுக்கத்தில் தீவிர கண்காணிப்புடையவராக விளங்கினார். இதனால் பலரது எதிர்ப்பையும் அவர் சம்பாதிக்கவேண்டி இருந்தது. ஆனால் அவற்றினை சவாலாக எற்று யாழ் நகரப் பாடசாலைகள் அனைத்திற்கும் அவர் முன்மாதிரிகையாக விளங்கினார்.அவ்வாறே மாணவர்களின் கல்வியையும் அடைவுகளையும் அதிகரிப்பதிற்கு பகீரத முயற்சி எடுத்தார்.அதன் விளைவுகள் சாதகமான விளைவுகளை அறுவடையகளாக தந்துகொண்டிருக்கின்றன.

பௌதீக வளங்களின் தேவை

தேசிப்பாடசாலை என்று தரமுயர்த்தப்பட்டாலும்,அதன் தேவைகள் உயர்த்தபடாமலே இருந்தன. பாடசாலையில் எல்லா மாணவர்களும் ஒன்று கூடக் கூடிய மண்டபமோ அடிப்படை வசதியான மைதான வசதியோ, வகுப்பறை தேவைகளை நிறைவு செய்வதற்குத் தேவையான வகுப்பறை வசதிகளோ மிகவும் குறைவாகவே காணப்பட்டன.இதனை வெல்வதற்கு அதிபர் அவர்கள் எடுத்து முயற்சிகள் மிகவும் அதிகம். இதன் பயனாக பாடசாலையில் இன்று கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் பொது மண்டப கட்டடத்தொகுதி இப்பாடசாலைக்கு அரசு வழங்கிய முதல் பெரிய கட்டடதொகுதி எனலாம். ஏனெனில் அரச கட்டடங்கள் இப்பாடசாலைக்கு கிடைப்பதென்பது முயற்கொம்பாகவே நீண்டகாலம் இருந்தது. அதனை அதிபர் அவர்கள் தனது பகீரத முயற்சியால் வென்றார் எனலாம். அது மிகச்சாதாரணமாகக் கைவரப்பெற்ற விடயமல்ல. எமக்கொரு கட்டம் கிடைப்பதற்கு எமது பிரதேச நிர்வாகிகளே இடையூறாக இருந்தார்கள். இதனால் அடிக்கடி நோவு நோக்காது கொழும்புக்குப் பயணம் செய்து, செய்த பயணங்களால் கட்டத்திற்கான நிதியை சாத்தியப்படுத்தினார். கட்டடத்திற்க்கு அனுமதி வந்தபோது, கட்டடத்தினை கட்டுவதற்கு இடமில்லை என்ற சவாலை சந்திந்தார். பழைய கட்டிடத்தினை அகற்றுவற்கு அனுமதி இருக்கவில்லை. அதற்காக போராட வேண்டி இரந்தது. அவரது விடா முயற்சி பல தடைகளையும் தாண்டி இதனை சாத்தியப்படுத்தியது.அவ்வாறே ஆசிரியர்களுக்கான விடுதி,புதிய மலசல கூடம் போன்றவற்றையும் சாத்தியமாக்கினார். இவற்றின் எல்லாவேலைகளும் இன்னமும் நிறைவு பெறாதுவிடினும் அவை நிறைவை நோக்கி இருக்கின்றன.

அவ்வாறே பாடசாலைக்கான விளையாட்டு மைதானமொன்றினை அமைக்க வேண்டுமென்ற தேவை பலநெடுங்காலமாக இருந்து வந்தது. அருட்சகோதரி தயாநாயகி செயபமாலை அவர்களின் காலத்தில் இதற்கான நிலம் ஒன்று கொள்வனவு செய்யப்ட்டிருந்தாலும் மைதானத்திற்கு போதுமான நிலம் இருக்கவில்லை அதனோடிணைந்த நிலத்தினை கொள்வனவு செய்து ஓரளவுக்காவது மாணவர் பயன்படுத்தக்கூடிய மைதானத்தினை உருவாக்க முனைந்த போது அதற்கான நிதியைதிரட்டுவதில் பெருஞ்சவாலை எதிர்கொண்டார். ஈற்றில் கனடாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் மூலமாக அதனையும் சாத்தியப்படுத்தினார்.

அவரது இறுதிக் காலத்தில் அவர் எதிர்கொண்ட மற்றொரு சவால் பெருமளவிலான ஆசிரியர்கள் இடமாற்றப்பட்டமையாகும். இது அவரது வேலைப்பளுக்களை அதிகரித்தது.புதிய ஆசிரியர்கள் பாடசாலையை புரிந்து செயலாற்றறுவதற்கு அவரது காலம் போதுமானதாக இருக்கவில்லை. நேர்மையான நிர்வாகிகள் எல்லோருக்கும் நல்லவர்களாக இருக்கமாட்டார்கள் என்று கூறுவார்கள். அந்தவகையில் அவர்களை வெல்வது அவருக்கு சவாலாகவே அமைந்துள்ளது.

அவரது வாழ்வுப்பயணத்தினை அறிகையில் அவர் எதிர்கொண்ட சவால்கள் மிக அதிகமென்று கூறலாம். சீர்படுத்தப்பட வேண்டிய இடங்களுக்கு அவர் நியமிக்கப்படுவார் அவற்றிற்கான வேலைகளில் அவர் முழுமூச்சாக ஈடுபட்டு சாத்தியமாகின்ற சூழலில் அவர் வேறு ஒரு இடத்திற்கு இடமாற்றப்படுவார். பருத்தித்துறையில், கிளிநொச்சியில் அவ்வாறே நடந்தன. வன்னியில் நடந்த இறுதிப்போரில் மிகுந்த துயரங்களையும் உயிராபத்தினையும் எதிர்கொண்டு, அர்ப்பணிப்போடு பணியாற்றியதோடு மட்டுமல்லாது, கிளிநொச்சி பாடசாலையை ஒன்றுமில்லாமை யில் இருந்து மீளக் கட்டியெழுப்பி கல்வியில் சாதனைகளை மேற்கொளும் பாடசாலையாக அதனை தரமுயர்த்திய களைப்புத் தீராமலேயே திருக்குடும்ப கன்னியர் மடத்தேசிய பாடசாலைக்கு நியமிக்கப்பட்டு வந்தார்.வந்த நான்கு வருடங்களிலும் ஓய்வின்றிய பணிகளின், பின் ஓய்வு பெறுகின்றார்.

அதிபர் அருட்சகோதரி அன்ரனிற்றா அவர்கள் தன்னை தற்கொடையாக்கி மிகுந்த அர்ப்பணத்துடன் பணிசெய்தவர், அதே நேரத்தில் இலட்சியதில் மிகவும் இறுக்கமான மனவுறுதியைக் கொண்டு செய்ற்படுபவர். "மெய் வருத்தம் கூலிதரும்" என்ற வாக்குக்கமைய தான் நினைத்தவைகளை சாதிக்கவேண்டுமென்பதில் விடா முயற்சியுடன் ஓயாது போராடுபவர். அதனால் சாதனைகளையும் சாத்தியமாக்கினார். நான்கு வருடத்திற்குள் இத்தனை பணிகள் சாத்தியமானதா என்று கேள்வியே எல்லோரிடமும் எழுகின்ற அளவுக்கு வித்தகியாகியாக செய்ற்பட்ட அவரின் உழைப்பின் பயனை கலாதி காலத்திற்கும் பாடசாலை அனுபவிக்கும்.அவரது தன்னலங்கருதாப் பணிக்கு இறைவன் நிச்சயமாக பிரதிபலன் அருளுவார்.

எனவே நன்றியுடன் அவரது ஓய்வுகாலம் இறை ஆசீருடன், நிறைவும் ஆரோக்கியமும் மிக்ககாலமாக அமைய இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

ஆசிரியராய், அதிபராய் அரும்பணிகளில்.

பருத்தித்துறை புனித தோமஸ் பெண்கள் பாடசாலையில்...

கிளிநொச்சி புனித பற்றிமா R.C.T.M பாடசாலையில்

நீங்காத நினைவுகளில்
அதிபர் அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க்

திருமதி.ப.ஜெ.பற்றிக்.
ஓய்வு பெற்ற ஆசிரியை
யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை

யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை அதிபர் மதிப்பிற்குரிய அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் சொல்வதில் பெருமிதம் அடைகின்றேன். இவர் பாடசாலையில் உயர்தர வகுப்பு மாணவியாக கற்ற காலத்தில் இருந்தே நான் அறிந்திருந்தேன். இவர் கற்கும் போது கற்றலில் மிகுந்த ஈடுபாடு உடையவராகவும், அக்கறையுடனும் கற்றல் செயல்பாட்டில் ஈடுபட்டு சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, பல்கலைக்கழகம் சென்று பட்டங்கள் பெற்றுள்ளார். இவர் முன்பு யாழ். திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையில் (Tamil Convent) ஆசிரியராக இருந்து மாணவர்கள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க செயற்பட்டார். தற்போது யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலையில் அதிபராக இருந்து கடைமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேரந் தவறாமை ஆகிய நற்பண்புகளை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றுள்ளார். இவர் இறைபக்தியுடன் நிர்வாகத்தில் எடுத்த தீர்மானங்களை நிதானமாகச் செய்து முடிக்க வேண்டும் என்ற திடமான மனமும், அமைதியான போக்கும் சகஅதிபர்களையும் மற்றும் அனைவரையும் மதித்து செயற்படவேண்டும் என்ற மனப்போக்கு நிறைந்தவர். இவர் தனது அறிவு, ஆற்றல், ஆளுமை அனுபங்களை முழுமையாகப் பயன்படுத்தி தனது பணியைச் செய்தார்.

பாடசாலையில் ஆரம்ப வகுப்பு முதல்,உயர்தர வகுப்பு வரை நேர்த்தியாகவும், கிரமமாகவும், முழுமையாகவும் கற்பிக்கப்படவேண்டும். என்பதில் மிகுந்த அக்கறையுடையவராகத் திகழ்ந்தார். கற்றல் கற்பித்தல் செயற்பாடு உட்பட இணைபாடவிதான செயற்பாடுகளிலும், இவை தொடர்பான வியைாக் களிலும் அவை நேர்த்தியாக நடைபெறவேண்டும் என்பதை வலியுறுத்துபவர். இவ் அதிபர் சகல நலன்க ளுடனும் வாழ்ந்து, இறை ஆசீருடன் சமூகத்திற்கு சேவை செய்து வாழ வாழ்த்துகின்றேன்.

மாணவத் தலைவியரின் வாழ்த்துச்செய்தி

எ.அன்றியா
யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம்
தலைமை மாணவத் தலைவி

மாணவத் தலைவியராய் நாம் கடமையேற்ற நாள் முதல் கடமை உணர்ச்சியை எமக்குக் கண்ணியமாகக் கற்றுத் தந்த பெருமைக்குரியவர் எங்கள் அதிபர் அருட்சகோதரி அன்ரனிற்றாமாற்கு அவர்கள் எவ்வாறான வேலை யாக இருந்தாலும் வெறுமனவே "செய்யுங்கள்" என்று கூறி விட்டு அவ்விடத்தை விட்டு என்றும் அகலமாட்டார். கூடவே இருந்து தானும் எம்மோடு கரம் கொடுத்துச் செய்விப்பார். ஒழுக்கமும் கல்வியுமே கன்னியரின் சொத்தென்று எமக்கு அடிக்கடி எடுத்துச் சொல்வார். ஆதலால் மாணவத்தலைவியராகிய நாங்கள் ஒழுக்கமான கல்வியால் ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் எனவும் கனிவோடும் கண்டிப்போடும் எடுத்துரைப்பார்.

பாடசாலை வளங்கள் எதிர்கால சந்ததிக்கும் உரியவை. அவற்றைப் பேணிக் காப்பதும் அவ்வாறு காப்பதற்கு ஏனைய மாணவரை வழிப்படுத்துவதும் எங்கள் கடமையென்று எப்போதும் எமக்குத் தமது செயல்கள் மூலமாக எடுத்துரைப்பார் ஆடம்பரமான. வீண் செலவுகள் அனைத்தையும் இயன்றவரை குறைத்து இறை சிந்தனையில் நாட்டம் கொண்டு ஏழை எளியோர்க்கு உதவும் வகை சொல்பவர் இவர்.

அது மட்டுமன்றி எமக்குக் கற்றுத் தரும் ஆசிரியரை மட்டுமல்ல எந்தவொரு ஆசிரியரையும் நாம் மதித்து போற்றி அதன் வழி ஏனைய மாணவர்களுக்கும் வழிகாட்ட வேண்டும் என்றும் பாடசாலைக்குரிய கௌரவத்தை எப்போதும் கட்டிக்காத்து அதன் பாரம்பரியம், பண்பாடு என்பவற்றை எச்சந்தர்ப்பத்திலும் பேணி நடந்து ஏனையோருக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் எனவும் அறிவுரை பகிர்ந்து நிற்பார் அதுமட்டுமன்றி மாணவர்களாகிய எமக்கு நேரமுகாமைத்துவம் என்பது சகல சந்தர்ப்பங்களிலும் எத்தனை முக்கியம் வாய்ந்தது என்பதனை வெறுமனே வார்த்தை களால் கூறமாட்டார். தனது ஒவ்வொரு செயல்களின் மூலமாகவும் எம்மை அடிமனதால் உணரச் செய்வார்.

இவ்வாறு எங்கள் அன்னையாகத் திகழ்ந்த இவரது அன்றாடச் செயல்கள் ஒவ்வொன்றுமே எம்மை வழிப்படுத்தின, நெறிப்படுத்தின, ஏனையோர்க்கு முன்னுதாரணமாய் வாழ்ந்து காட்ட எமக்கு வல்லமை தந்தன. இவ்வாறு எமக்கு வரப்பிரசாதமாகக் கிடைத்த எங்கள் அன்பான அதிபர் இன்று அகவை அறுபதைக் காண்கின்றார். எனவே இன்றைய நன்நாளில் மிகவும் பெறுமதியான அவர் சேவையை உளமார வாழ்த்தி நிற்பதில் மாணவத் தலைவியர் நாம் பேருவகை அடைகின்றோம்.

தடைகளின் மத்தியிலும்
தளராது நடை போட்டு
அளப்பெரும் பணி செய்த
அன்னையே உங்கள்
சேவைக்குத் தலைசாய்ப்போம்.

பாரெங்கும் புகழோங்குக!

ரா.ஜீவிதா
A/L (2020) com
யா/திருக்குடும்பகன்னியர்மடம்

அன்பின் சாயலாய் அருளின் ஊற்றாய்
ஆதரவின் உறைவிடமாய் தோள் கொடுத்து
இன்னல்களை இனிதாய் முறியடித்து
ஈசன் அருளை கொடையாய் பெற்று – தம்
உயிரிலும் மேலான பாடசாலை அதை – தம்
ஊக்கத்துடன் வழிபடுத்தி எம் பள்ளியின் புகழ்
எட்டத் திசைகளிலும் ஓங்க தம் எண்ணங்களை
ஏணியாக்கி எத்தகைய சவால்களையும்
ஐயமின்றி எதிர் கொண்டு மாணவராம் எம்முள்ளத்தில்
ஒழுக்கம் எனும் விதையை விதைத்து நற்கனிதரும் விருட்சமாய்
ஓங்கி வளர, பல அறிவுரைகளை ஓதுவதில்
ஔவைப் பாட்டியையே மிஞ்சிய எம் அதிபர் என்றும் நலமுடன் வாழ்க!

கடின உழைப்பில் ஒரு "கடிகாரம்"
கனமான பேச்சுத்திறனில் ஒரு "காந்தி"
கனிந்த உள்ளம் கலந்த தன்மையில் ஒரு "தாய்"
உதவிக் கரம் நீட்டுவதில் நமக்கு ஒரு "தெரேசா"

ஏற்ற பழுவெதுவோ சிரமேறிநிற்க
கற்ற செருக்கதனை புறந்தள்ளிப் பின்னே
ஏற்று எதையும் தனக்கெனக் கொள்ளாமல்
பாலகராம் எமக்கும், எம் பள்ளிக்கும்
தம் வாழ்வுதனை அர்ப்பணித்த
எம் பள்ளியின் அற்புத நாயகியாம் எம்
அதிபர் புகழ் பாரெங்கும் ஓங்குக!

"வார்த்தைகளால் வடிக்க முடியா
வாழ்த்துக்கவிதை நீங்கள்"

மாற்றம் கொணர்ந்த எம் அன்னை மாற்கு

செல்வி சூ செலஸ்ரீனா
2018 AI
H.F.C

திருக்குடும்பக் கன்னியர் மடம்
கண்டெடுத்த பன்னிரண்டாவது
கன்னிகை அருட்சகோதரி இவர் – இவரே
மாற்றங்கள் கொணர்ந்த அன்னை மாற்கு

அடியெடுத்து வைத்த ஆரம்பத்தில்
ஆரவாரம் ஏதுமின்றி அமைதி காத்து – தன்
ஐம்புலன்களையும் அடக்கி தன்
அதிரடி வேலைகளை அமுலாக்கினார்.

எம்மில் ஒருத்தியாய் இருந்த
வித்தியாவின் இறப்பு புரட்சியாய் வெடிக்க
புரட்சியிலும் புதுமையாய் வரவுப் பதிவில்
கொணர்ந்தார் புது சீர்திருத்தம்.

கற்றல் செயற்பாட்டில் கருத்தாய் நின்றார்
இவர் வெளிக்கள செயற்பாட்டில் கண்ணாய் நின்றார்
முழங்கமின்றிக் கிடந்த மன்றங்கள்
தனை தட்டி யெழுப்பி மாகாணம்
தேசியத்திற்கு அனுப்பி வைத்தார்.

தமிழ்த்தினப் போட்டிகளை 2017ல்
மாகாணம் தேசியத்தை வென்றெடுக்க வைத்த இவர்
அதே ஆண்டில் ஆங்கில மன்றத்தையும் மாகாண
தேசிய மட்டத்திலே வென்றெடுக்க வைத்தார்.

வகுப்பறைகள் போதுமானதாய் இல்லாமல் இருக்க
வராண்டாவிலே வாசம் கொள்ளும் மாணவர்களுக்கு
புதிய கட்டிடத்தை கட்டியெழுப்பித்தர
இவர் சந்தித்த இடர்கள் ஏராளம் – அதில்
வெற்றியும் கண்டார்.

சகோதர பாடசாலையினரிடம் இரவல் வாங்கி
நடாத்தி வந்த இல்ல மெய்வல்லுனரை – சொந்த
இடத்தில் நடாத்தும் தன் திட்டத்தை
2018ல் திட்டவட்டமாய் நிறைவேற்றினார்.

ஓம் என்ற தியானத்துடன் இவர் ஏற்படுத்திய
மனத்தியானம் மாணவர்களோடு
சேர்த்து ஆசிரியர்களுக்கும் தந்தது
மன அமைதி எனும் அருமருந்தை

ஆசிரியர்களின் பாட வரவினை
கருத்தாய் கவனித்து ஒவ்வொரு
நொடியையும் வீணாய் கழியவிடாமல் இருக்க
எடுத்தார் பல அதிரடி நடவடிக்கைகளை

இத்தனையும் செய்து முடிக்கும் வரை வந்த
இன்னல்களை பொருட்படுத்தாமல் அதை
வெற்றியாய முடித்த இவர்
மாற்றத்தின் அன்னை மாற்கு – இவரே
அன்ரனிற்றா மாற்கு

பிரியாவிடை காணும் எங்கள் அன்னை

கூடைப்பந்தாட்ட அணியினர்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

சிப்பிக்குள் முத்தாய் எங்கள் பாடசாலையின் சொத்தாய்
எங்கு தேடியும் கிடைக்காத ஏன்
எந்த கடவுளாலும் கொடுக்க முடியாத ஓர் வரமாய்
அன்று எங்கள் பாடசாலைக்கு என்று மட்டும் கொடுக்கப்பட்ட
ஒரு அன்பான அன்னையே
கடவுள் இன்பத்தின் மறுபக்கத்தில் துன்பமும் உண்டு
என்ற தனது கொள்கையை நிருபிப்பதற்கு
இன்பமான உங்கள் வரவையும் தந்து
துன்பமான உங்கள் ஓய்வையும் தந்து விட்டார்
உங்களுடன் பயணித்த இந்த மூன்று ஆண்டுகளும்
ஒரு நொடியாக மறைந்து விட்ட மாயம் தான் என்ன
நிமிர்ந்த நடை நேரிய பார்வை
மனம் சொல்வதை கேட்டு அறிவுக்கு மதிப்பளித்து
முடிவுகளை உறுதியாக எடுக்கும் உங்கள் குண இயல்பு
இவை அனைத்தும் மட்டுமல்லாமல் எந்த வேளையிலும்
சரியானவற்றை மட்டும் தெரிந்தெடுக்கும் அந்த ஆற்றல்
இவை அனைத்தும் போதும் அம்மா உம்மை வானத்தின் நிலவாக்க
கல்வியில் மட்டுமன்றி இணைபாடவிதமான செயற்பாடுகளிலும்
எம்மை முழுமையாக ஈடுபடுத்த நீர் அரும்பாடுபட்டீரே
ஆதலால் தான் இன்று எங்களால் பெரிய பெரிய சாதனைகளை
படைக்க முடிகிறது என்று கூறுவதில் நாம் ஐயம் கொள்ளவில்லை
அன்று நாங்கள் விட்ட சிறிய சிறிய தவறுகளிற்காக நீர்
வழங்கிய தண்டனைகள் மட்டுமே இன்று எங்களை ஓர்
பூரண மனிதனாக மாற்றி உள்ளது என்று நாம் நம்புகின்றேன்
உங்களைப் போல் ஓர் அன்னை மீண்டும் எங்களுக்கு கிடைப்பாரோ தெரியவில்லை
அப்படி ஓர் அன்னை கிடைத்தாலும் உங்களைப் போல் இருப்பாரோ அதுவும் தெரியவில்லை.
உங்கள் ஓய்வை நினைத்து நீங்கள் மகிழ்ந்தாலும் உங்கள் பிரிவை நினைத்து
நாங்கள் கண்களில் கண்ணீர் மல்க நிற்கின்றோம்
உங்கள் துறவற வாழ்வு மேலும் சிறக்கவும் என்றும் இறைமகன்
இயேசுவின் நிழலில் நீங்கள் ஓய்வு பெறவும் என்றும்
எங்கள் அனைவரின் மன்றாட்டுக்களும் உங்களுடன் இருக்கட்டும்

அம்மா! உமக்கும் அகவை அறுபதா?

கிருஷிகா நிறன்சன்குமார்
10B

ஆறு பத்து வருடங்கள்
ஓடி வந்தது என யார் சொல்வார்?
அம்மா,
துடிப்போடு நீர் சுற்றி வருவதல்ல
பறந்து பறந்து வருவீர்
சுகம் என்றால் சுத்தம் என்பீர்
நித்தமிது இல்லையெனில் வெற்று என்பீர்
சுத்தமுள்ள பாடசாலையில் ஒன்று
"திருக்குடும்பம்" எனவே புகழாரம் பூட்ட வைத்தீர்
வரவிலே முதலிடம் எமது பாடசாலையென
மார் தட்டி நிமிர்ந்து நின்றோம்
புள்ளி வீச்சை உயர வைக்கப்
பாடுபட்டு வெற்றி கண்டீர்
இணை பாட விதானச் செயற்பாட்டில்
இணைந்திட வேண்டுமென அறை கூவி நின்றீர்
மைதானம் அமைத்துத் தந்து – பள்ளி தன்னில்
ஒளியேற்றி வைத்தீர்
கட்டடங்களை கட்டியெழுப்பிட
நடையாய் நடந்து நன்மை பல கண்டீர்
நாளை நீங்கள் இல்லையென்று – உள்ளம்
நலிவுற்ற போதிலும்
வானளாவ உயர்ந்து நிற்கும்
கட்டடங்கள் உமது பெயர் சொல்லும்
மாணவர் குறிப்பேடு கொண்டு வந்து – எம்
குளப்படிகளை பதிய வைத்தீர்
நடுங்கியது நாம் மட்டுமல்ல
நமது பெற்றோருமே
ஆயிரம் கதை சொல்லிக்
கல்லூரி வாசல் வராதிருந்து
அப்பரையும் அம்மையையும்
விழுந்தடித்து ஓடிவர வைத்தீர்
எம்மீது கரிசனையுள்ளவராகி நின்றீர்
எதை மறக்க எப்படி நாம் உமை மறப்பது?
அசம்பிளி தன்னில் ஆண்டவனைத்
தேட வைத்தீர்
அருமைகள் பலவற்றை
அற்புதமாய்ச் சொல்லித் தந்தீர்

ஆறும் வயதல்ல அம்மா – நீர்
இன்னும் பல்லாண்டுகள்
இறைசேவை செய்வதற்காக
இனிதே வாழ வேண்டும் என
இறையருள் வேண்டித் தொழுது
இன்பமுடன் வாழ்த்துகின்றேன்
வாழ்க வாழ்க வாழ்கவே.

பிரியாவிடை

பிறைடி கிறிஸ்துராசா
11A

காலைப் பொழுது பெரும்
பதட்டத்துடனேயே விடிந்து
என்னவென்று தெரியவில்லை – என் மனம்
ஏனோ சஞ்சலத்தில் ஆழ்ந்தது

பறந்து விரிந்த வானத்தை நோக்கினேன்
வெய்யோனின் முகத்தில் கூட
வெறுப்பொன்று தெரிந்தது
ஏன் விடிந்தது இன்னாள் என்று

வந்தனம் கூறும் பூக்களும் கூட
வாட்டத்துடன் தான் மலர்ந்திருந்தன
மெல்லென வருடும் தென்றலிடமும்
மெதுவாய் சோகம் இணையோடியது

மேகங்களிடம் கேட்டேன்
மௌனமாய்க கடந்தன என்னை
தூறல்களில் எனை நனைத்த
மழைத்துளிகளிடமும் கேட்டுப்பார்த்தேன்
தம் மன சோகங்களையெல்லாம்
கண்ணீராய் சொரிந்தன.

ஏதும் புரியாதவளாய் – என்
காலடியை வைத்தேன் பள்ளியினுள்
திருக்குடும்ப கன்னியர் மடமே
திண்டாடியது சோக வாட்டட்டு
பள்ளியில் ஏனோ மயான அமைதி
பாலகிகளிடம் கூட இனம் புரியா சோகம்

துயரமே வடிவாய் துக்கமே தோழமையாய்
எனைக் கடந்த பிஞ்சுப் பாலகியிடம்
என்னவென்று வினவினேன் காரணத்தை
இதயமே நொருங்கியது ஒருகணம்
வெளிவந்த பதிலால்

பள்ளிக்காய் தன்னையே அர்ப்பணித்து
ஒழுக்கம், கண்ணியம், கட்டப்பாடுடனே
பாவையர் நாமம் பாருலகில் உயர
பல்வேறு முறைகளிலே பள்ளியை வளர்த்து
பயபக்தியுடனே, செல்ல கண்டிப்பும் நிறைந்தவராம்
எம் பள்ளி அதிபருக்கு இன்று
"பிரியாவிடையாம்"

மேகத்தின் மௌனத்திற்கும்
மழைத்துளிகள் கண்ணீருக்கும்
காரணம் புலப்பட
கவலையும் சூழ்ந்தது.

கண்டிப்புடன் பேசினாலும்
கலகலப்பும் நிறைந்திருக்கும்
தண்டனைகள் தரும் போதும்
இரக்கமும் கலந்திருக்கும்

பாட வேளைகளில் போடும் கூச்சலால்
ஆகாயமே பிளக்கும் நிலை வந்தாலும்
"அதிபர் வருகிறார்" எனும் ஒற்றை வார்த்தையில்
அண்ட சராசரமும் அடங்கிவிடும்

பணிவும் பயமும் ஒன்றாய் சேர்ந்து – எங்கள்
நாவைத் தடுமாற வைக்கும்
சடுதியாய் உம்மை பார்க்கும் கணத்தில்
இறையாசீர் கூற

உம் பதவிக்காலம் முழுவதுமாய்
கண்ணியத்துடன் செய்தீர் பணிகளை
பள்ளிக்கு செய்த சேவைகளுக்காய்
பாக்களில் தொடுக்கின்றோம் நன்றி மாலைகள்

அடிக்கல்லை நாட்டி வைத்தீர்
அற்புதமாய் கட்டிடத்திற்கு
நாடா வெட்டுமுன்பே
வருடங்கள் உருண்டோடினவோ?
நன்றியாய் சொல்ல எழும் வார்த்தைகள் கூட
தடுத்தாளப்படுத்துகிறது பிரிவுத்துயரினால்
மரிமனதை ஊடுருவிய வாள் – இன்று
என் மனதையும் ஊடுருவுகிறது
“பிரியாவிடை” என்றும்
ஒற்றை வார்த்தையால் ....

வாழ்வை அர்ப்பணித்தவர்

சாஞ்சினி
7B
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்

வருடங்கள் சில என்றாலும் பாடசாலைக்காக தன்னை அர்ப்பணித்தவர் நம் அதிபர். அதிபராக பொறுப்பேற்று பல பாடசாலைகளை முன்னேற்றி ஓய்வுக் காலத்தில் எமது பாடசாலையை முன்னேற்றுவதற்கு தனது வாழ்க்கையை அர்ப்பணித்து வந்தார். இவர் எமது பாடசாலைக்காக பல முயற்சி செய்து முன்னேற்றினார். இப்போது தனது ஓய்வுக் காலத்தை நோக்கிச் செல்கிறார். இவரால் எமது பாடசாலை அடைந்த நன்மையை நோக்கின் ஒழுக்கத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்கினார். பாடசாலைக்கெனவே மைதானத்தைப்பெற்று தந்தார். புலமை பரீட்சை மாணவர் களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்தினார். கல்வி, விளையாட்டு பற்றிய போட்டியில் வெற்றி பெற மாணவர்களுக்கு ஊக்கம் ஏற்படுத்தினார். எமது பாடசாலை கட்டட பற்றாக்குறையை நிவர்த்தி செய்தார். இவ்வாறு பல வழிகளில் எமது பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார்.

பொலித்தீன் பிளாஸ்ரிக்கை ஒழித்தல் திட்டத்தில் 1ஆம் இடத்தை பெறுவதற்கு இவரே உறுதுணையாக இருந்தார். இவரைப் பார்க்க மென்மையானவராக இருந்தாலும் இவரது கண்டிப் பான கட்டளைகளால் நல்ல பிரஜைகளை உருவாக்க முடியும். எமது பாடசாலைக்காக உழைத்த இவரின் வாழ்வு நன்றாக இருக்க வேண்டும் என்றும் இவரது திருப்பணி தொடர வேண்டும் என்றும் நாம் ஒவ்வொருவரும் மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

ஞாபகங்கள் அலையாக

டெனோஜி.ரவீந்திரன்
A/L (2019) கலைப்பிரிவு - II
யா/திருக்குடும்பகன்னியர்மடம்

ஒரு தாலாட்டுப் பாட்டொன்று – பாட
என் அன்னையாக வந்தீர் என் கூட
இந்தப் பிள்ளை நான் சந்தோசமாக
நலம் வாழவே என்றும்
வேர்களாய் தாங்கினீர் – அன்னை
நீர் வாழவே ஆசிகள் கூறுவென்.

எதிர் நீச்சல் படகோடு – தடை
தாண்ட வைத்தீரே
அலையோடு பயம் வேண்டாம்
கரை சேரச் சொன்னீரே
அன்பாலே என் நெஞ்சில் தடயங்கள் வைத்தீரே
சில நேரம் வலித்தாலும்
அன்போடு அணைத்தீரே
என்னை நீர் நீங்கினாலும்
நினைவுகள் நீங்குமா?
விண்ணும், மண்ணும் போற்ற வாழ்ந்து தான் பார்க்கலாம்

எங்கெங்கே சென்றாலும்
சேவைகள் உமக்குண்டு – உம்
பணிகள் தொடர்வதனால்
நிரந்தரமோ இங்கில்லை
இதழோரம் சிரித்தாலும் இதயத்தில் வலியுண்டு
உம்மை நான் மறவாத
ஞாபகங்கள் எனக்குண்டு
தலைகீழாய் பிடித்திடும் போதும் நேராய் எரியும் தீபமே
ஓய்வினைப் பெற்றிடும் போதும் மகிழ்வாய் ஏற்க வேண்டுமே
காலங்கள் சென்றாலும் கரைந்தோடிப் போனாலும்
மாறாது எம் பாசம்
மறையாது உம் நேசம்

ஊக்கமுடைய நிகழ்வுகளில் அதிபர்

ஒளிவிழாவில்...

பாடசாலை தினத்தில்...

பொங்கல் நிகழ்வில்..

வெற்றிகளில்..

ஆசிரியர் குழாத்துடன்

பரிசளிப்புத்தின நிகழ்வுகளில்...

இல்ல விளையாட்டுப் போட்டிகளில்...

கல்லூரி அன்னை

ர.ஹனாமதுஷா
கலைப்பிரிவு II (2019)
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

அன்பான அதிபராய் – எம்
மாணவிகளின் அன்னையாய்
2015ல் எம் திருக்குடும்பத்தின்
12வது தலைவியாய்
கால் பதித்தீர்கள் அதிபர் அன்ரனிற்றா மார்க்
அவர்களே

அன்று முதல் இன்று வரை
திருக்குடும்பத்தின் பண்புகளை ஏற்று
திருக்குடும்ப கன்னியர் மடத்தை சுற்றி
வலம் வந்தீர்கள்

பண்பான பேச்சுடன்
கனிவான நோக்குடன்
நேரான நடையுடன்
அனைவரின் மனம் கவர நிகழ்ந்தீரே
நீர் வந்த நாள் முதல் – நாம் கண்டவெற்றிகள் பல

உள்ளத் தூய்மையுடன் – பாடசாலை
தூய்மையையும் பேணி
தூய்மையின் சிகரமாய் திகழ்ந்தீரே – நாம்
இதுவரை கண்டிராத தூய்மையை
உம்மிடம் கண்டோமே

சிலநேரம் கடிந்தாலும் – எம்
நன்மைக்காக – பாடுபட்டீர்
இறையருளில் பிள்ளைகளை
உறுதியாய் வளர்த்திரே
என்னைக் கண்டு பயப்பட வேண்டாம்
இறைவனுக்கு பயப்படுங்கள் என்றவரே!

நீர் செல்லும் இடமெங்கும்
உம் சேவை தொடரட்டும்
பாடசாலை சமூகமாய்
வாழ்த்துகிறோம் உம்மையே.

அழகாய் மின்னிய அன்புத் தாரகை

பீற்றர் நிலுஷா
தரம் 7A
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

இறைமகன் திருப்பெயரால் திருக்குடும்பத்தில் கால் பதித்து
அதிபராய் பணியேற்று எம்மை நெறிப்படுத்த
20.04.2015 முதல் திருக்குடும்ப கன்னியர் மடம்
தேசிய பாடசாலையில் அழகாய் மின்னிய அன்புத்
தாரகை அருட்சகோதரி அன்ரனிற்றா அன்னை.

யோகா பயின்று நாம் நேரான வழி சென்று
தேனான கல்வி பெற களம் தந்த கண்மணியாம்
அதிபர் எங்கள் அன்ரனிற்றா அன்னை
தவறுகள் எம்முடனே தொடர்ந்திடா வண்ணம்
கண்ணும் கருத்துமாய் கவனித்து வருவார்
பெற்றோரைப் பெரியோரைப் போற்றி நாம் வணங்கினால்
வையகத்தில் வாழ்வாங்கு வாழலாம் என
அழகுறச் சொன்னவர் அழகாய் மின்னிய
அன்புத் தாரகை அன்ரனிற்றா அன்னை.

மாணவர் எமக்கு மைதானம் தேவையென்று
தொலை தூரம் நோக்காது, மெய்வருத்தம் பாராது
திருக்குடும்ப கன்னியரின் கரையில்லா வளர்ச்சியே
கண்ணில் தெரியுதென்று கனடா மண்ணுக்கு
கண்ணியமாய்ச் சென்று வெற்றி வாகை சூடி வந்தார்.

ஓய்விலும் ஓய்வின்றி இறைபணிக்குத் தயாராகும்
எங்கள் அன்னைக்கு நாம் செய்யும் கைம்மாறு
அன்றாடம் அவர் கூறும் ஆன்மீகம் கைப்பற்றி,
பேதங்கள் தம்மை அடியொடு வேரறுத்து
ஏதங்கள் ஏதுமற்ற உயர்வான கல்வி பெற்று
திருக்குடும்பத்தின் நற்பெயரை சிகரத்தில்
வைப்பதுதான்
எம் மனங்களில் குடி கொண்ட அன்னையே

அன்பான தாய்க்கு

தர்ஷா.அ
தரம் 9C
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

சின்னதாய் விரிந்த சூரியனோடு
பெரிதாய் என் வாழ்த்து
மனதோரம் வார்த்தையெடுத்து
மகிழ்வாய் உமக்காக

பத்து மாதம் அன்னை சுமந்தாள்
மூன்று வருடமாக நீரே சுமக்கின்றீர்
வலித்தும் இறக்கிடாமல்
உம் தோள்களிலே.......

உம்மைப் போல் அதிபரை நான்
உலகெங்கும் கண்டதில்லை
வாழ்த்துக்கள் கூறிடவே
ஆண்டொவ்வொன்றும் காத்திருந்தேன்

இறைவன் கொடுத்த இத்தருணமதை
எனதாக்கி வாழ்த்துக்கள் கூறுகிறேன்
ஆண்டாண்டு காலங்கள் ஆண்டவரின் ஆசியுடன்
அகிலமது போற்ற நீர் அழகாக வாழவேண்டும்.

மலர் உருவாக கைகொடுத்த நெஞ்சங்களுக்கு நன்றிகள்

திருமதி.ந.கனகசுந்தரி

திரு.போல் அருள்நாயகம்

திரு.பி.ஆம்ஸ்ரோங்

திரு.றொ.றீகன்

திருமதி.இருதயநாயகி பீற்றர்

திருமதி.ப.மரியதாசன்

திருமதி. ஜ.லிகோரியன்

செல்வி.மே.யூ.பெனடிக்ற்

செல்வி எஸ்.அம்பிகை

திருமதி.ஜெ.இரட்ணம்

திருமதி.ச.ஆன்சோபனா

யா/திருக்குடும்ப கன்னியர் பழைய மாணவர் சங்கம் (யாழ்ப்பாணம்)

நன்றிகள்

எமது அன்பிற்குரிய அதிபர்

அருட்சகோதரி அன்ரனிற்றா மாற்கு அவர்களின் அகவை அறுபதின் நிறைவில் நாம் ஆக்கிய இவ் "வித்தகி" இதழுக்கு மனமுவந்து வாழ்த்துக்கள் தந்தவர்களுக்கும், ஆக்கங்களை ஆக்கியவர்களுக்கும், அனுசரணை செய்தவர்களுக்கும் அழகுற அச்சிட்ட மதிகலர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்



Printed by - Mathi Colours, Nallur 021 2229285